கல்கி



KALKI
23.3.86
ரூ. 1.50


பார்லே
பிளெயின் அல்லது
டாப்பிங்ஸ் இணைந்தது
எதுவாகிலும் வெற்றி
உமதே.
நினைவு வைத்திருங்கள்
மோனேகோ உதிரியாக விற்பனை
செய்யப் படுவதில்லை.
எப்போதுமே.
பார்லே
மோனேகோ
ப்ளெயின் என்றால் அற்புதம்.
டாப்பிங்ஸ் இணைந்தால் அபாரிதம்.
இந்தியாவின் அதிக அளவு
விற்பனையாகும் உப்பு பிஸ்கட்கள்.
MONACO

"சினிமா சான்ஸா? நோ தாங்க்ஸ்!"

என்கிறார் அழகாய்ச் சிரிக்கும் அறிவிப்பாளர்.



"**டி**.வி.லே வராங்களே, புதுசா, அவங்க ஸிஸ்டரா நீங்க?"

"இல்லே, அவரேதான் நான்!"

"அப்படி இருக்குமோன்னுதான் நினைச்சேன். ஆனால் எலெக்டிரிக் ரயில்லே எதிர் பார்க்கலே. அதனாலெ அப்படி கேட்டேன்!"

இதற்குள் வேறு பல பெண்களும் ஆர்வமாகத் தலை நீட்டி....

"உங்க பேரு?"

"வகுளம்."

"கேள்விப்படாத பேரா இருக்கே?"

"கொஞ்சம் கர்நாடகமான பேர். ஆனா அழகா இருக்கு. உங்களை மாதிரி!"

"தாங்க்ஸ். வகுளம்னு மகிழம்பூன்னு அர்த்தம்."

தினம் காரியாலயத்துக்கு எலெக்ட்ரிக் டிரெய்னிலும் பஸ்ஸிலும் செல்லும் வகுளத்துக்கு இதுபோன்ற அனுபவங்கள் அடிக்கடி ஏற்படுகிறது. முதலில் சங்கோஜமாய் இருந்தது. இப்போது சகஜமாகிவிட்டது. பெரும்பாலான கேள்விகள் இவரது புடவையைப் பற்றியும் மேக் அப்பைப் பற்றியும்தானும். இவர் பெயரை இதுவரை டெலிவிஷனில் காட்டாததால் அது ப்ற்றிய கேள்வி தப்பாமல் பிறக்கிறது,

பூவாய் கன்னத்தில் குழி விழச் சிரித்து, டி.வி. பார்ப்பவர்களை காந்தமாய் ஈர்க்கும் இந்த அழகான அறிவிப்பாளர் படித்தது சாரதா வித்யாலயாவில். அப்புறம் தபாலில் பி. காம். டி.வி.யில் வாய்ப்பு கிடைத்தது ஓர் ஆக்ஸிடெண்ட்தானும். இவரது ஓர் அக்கா முன்பே இரண்டு, மூணு தடவை எதிரொலி போன்ற நிகழ்ச்சிகளில் டி.வி.யில் வந்திருக்கிறார். ஆனால் இவருக்கோ அதிலெல்லாம் அவ்வளவு இன்ட்ரஸ்ட் இல்லை.

"வீட்டில் அனைவரும் 'சும்மா அப்ளிகேஷன் போட்டு வை. வந்தால் அதிர்ஷ்டம்; வராவிட்டாலும் நஷ்டமில்லை' என்று சொல்லவே விண்ணப்பம் போட்டு வைத்தேன். டெஸ்ட்டுக்குக் கூப்பிட்டார்கள். நிகழ்ச்சி நிரலைக் கொடுத்து, ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்து அறிவிக்கச் சொன்னார்கள். அறிவித்தேன் என்பதைவிட சரியாய்ப் படித்தேன் என்றே சொல்ல வேண்டும். முதல் ரவுண்ட் டெஸ்ட் முடிந்ததும், நோட்டீஸ் போர்டில் ரிசல்ட்டுகளைப் போட்டார்கள். போய்ப் பார்க்கவே நடுக்கமாய் இருந்தது. தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் ஏமாற்றமாய் இருக்குமே என்பதால், கூட வந்திருந்த இன்னொரு பெண், போர்டைப் பார்த்துவிட்டு வந்து நான் செலக்ட் ஆகிவிட்டதைச் சொன்ன பிறகுதான் நான் போய்ப் பார்த்தேன்" என்கிறார் வகுளம்.

அவரே தொடர்ந்து சொல்வது: "அடுத்தது கெமரா டெஸ்ட். முதல் சுற்றில் தேறி, இப்போது தோற்றுவிட்டால்..... என்று பயம். டெஸ்ட் முடிந்து பதினைந்து நாட்களுக்கு சஸ்பென்ஸ். அதன்பின்தான் என்னைத் தேர்ந்தெடுத்திருக்கும் விஷயம் தெரிந்தது. தொடர்ந்து நாலு நாட்களுக்குநிலைய அறிவிப்பாளர்களான லோகேஸ்வரி, ஹேமலதா இவர்களிடம் பயிற்சி.

டி.வி.யில் இவர் தோன்ற ஆரம்பித்த கொஞ்ச நாட்களிலேயே ஒரு நிறுவனம் "விளம்பரத்திற்கு மாடலிங் செய்ய முடியுமா?" என்று கேட்டது. 'ஸாரி' சொல்லிவிட்டார். தொடர்ந்து சில டைரக்டர்கள் இவரைத் தங்கள் படங்களில் நடிக்க வைக்கவும் முயற்சி செய்திருக்கிறார்கள். அதற்கும் இவர் பதில் "ஸாரி" தான்.

— எஸ். சந்திரமௌலி.

“தில்லு முல்லு தெரிந்தால் தக்கார் பதவி!”

முன்பெல்லாம் கோயில்களில் அறங்காவலர் குழு இருக்கும். குழு என்று இருந்தால், ஒருவர் தவறு செய்தால், மற்றொருவர் அதைக் கண்டிப்பதற்கோ அல்லது வெளியே சொல்வதற்கோ வாய்ப்புள்ளது. ஆனால் புரட்சிகள் பல செய்துள்ள அ.தி.மு.க. ஆட்சியில்தான் 'தக்கார்' என்ற பதவி உருவாக்கப்பட்டது. பல பெரிய கோயில்களில் அறங்காவலர் குழுவை நியமிக்காமல் தக்கார் என்பவரை மட்டும் நியமித்துவிட்டு, அவரிடம் எல்லா அதிகாரங்களையும் கொடுத்துவிடுகிறது அரசு. இதனால் கோயில் சொத்துக்கள் சுரண்டப்படுவது எளிதாகிறது என்று கூறுகிறார்கள் இந்து முன்னணிக்காரர்கள்.

சென்னை கே.கே. நகரில் பிரபலமாகி வரும் சக்தி விநாயகர் கோயிலில், தக்காராக இன்று நியமிக்கப்பட்டவர் பல ஊழல்கள் புரிந்தவர் என்றும் அவரைத் தக்காராக நியமித்தது தவறு என்றும் அங்குள்ள ஆத்திக நண்பர்கள் பலர் நம்மிடம் சொன்னார்கள். சரி, பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல் இந்த விஷயத்தை ஆராய்ந்தால் என்னவென்று தோன்றியது.

கே.கே. நகரில் குருமூர்த்தி என்பவரைச் சந்தித்தோம். இவர் சில காலம் கோயிலில் டிரஸ்டியாக இருந்தவர். அவர் சொன்னார்:

''இப்போது தக்காராக நியமிக்கப்பட்டுள்ள எம்.வி.எம். அழகப்பன் 1979 இலிருந்து 30.6.82 வரை கோயில் திருப்பணிக் கமிட்டித் தலைவராக இருந்தவர். இவர் காலத்தில்தான்.....

''குடமுழுக்குக்குக் கர்ப்பக்கிருஹம் கட்ட வேண்டும் என்று பொது மக்களிடம் பணம் வசூலிக்கப்பட்டது. இதற்கென உபந்யாசம் செய்பவர்களுக்குப் பணம் கொடுத்தது போல் போலி வவுச்சர்கள் தயாரிக்கப்பட்டு, கோயில் பணத்தில் கைவைக்கப்பட்டது. உதாரணம்: புலவர் கீரனுக்குப் பணம் கொடுத்ததாகக் காட்டப்படும் போலி வவுச்சர்கள்.

''கர்ப்பக்கிருஹம் கட்டுவதற்கும், கோயில் விமானங்கள் கட்டுவதற்கும் 2,40,250 ரூபாய் செலவு செய்ததாகக் கணக்குக் காட்டப்பட்டுள்ளது. இதில் 75 ஆயிரம் ரூபாய் அரசு மான்யமும் அடங்கும். ஆனால் 50 சதவீத வேலைகூட முடியவில்லை. நடந்த வேலையைப் பற்றிய விவரங்கள் முறைப்படி பதிவு செய்யப்படவில்லை.

''நிதி வசூலிக்க என்று செயலாளராக இருந்த வெங்கட்ராமன் சிங்கப்பூர் சென்று வந்தார் கோயில் செலவில். ஆனால் பலன் பூஜ்யம்தான். போய் வருவதற்கு என்ன செலவானதென்றோ அல்லது நன்கொடை எவ்வளவு வந்ததென்றோ கணக்குப் புத்தகத்தில் விவரம் இல்லை.


''மேற்கண்ட குற்றச்சாட்டுக்கள் எல்லாம் நாங்கள் சொல்வதல்ல. அறநிலையத்துறையின் தணிக்கைக் குழுவினரே பல சமயங்களில் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

''அழகப்பனை 85 ஜூலை முதல் தக்காராக நியமித்தது தவறு என்று அறநிலையத் துறை கோர்ட்டிலும் பின்னர் ஹைகோர்ட்டிலும் வழக்குத் தாக்கல் செய்தோம். நீதிபதி நைனார் முகம்மது நான்கு வாரத்தில் டிரஸ்ட் போர்டு அமைக்க வேண்டும் என்று 3.9.85ல் உத்தரவிட்டும் இன்னும் டிரஸ்ட் போர்ட் அமைக்கவில்லை. உறுப்பினர்களைத் தேர்வு செய்யச் சில நடவடிக்கைகளை அறநிலையத் துறை எடுத்தது. ஆனால் அழகப்பன் தலையிட்டு டிரஸ்ட் போர்ட் நியமனங்கள் மெதுவாக நடக்கும்படி பார்த்துக் கொண்டிருக்கிறார். இதற்கு அறநிலையத் துறை அதிகாரிகளும் துணை போனதுதான் வேதனையாக இருக்கிறது'' என்றார் குருமூர்த்தி.

தக்காராக இருக்கும் அழகப்பன் என்ன சொல்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அவரைச் சந்தித்தோம்.

''எனக்குத் தக்கார் பொறுப்பேற்கவே சம்மதமில்லை. எனக்கு ஏகப்பட்ட வேலைகள். 'உங்களைத் தவிர வேறு எவர் பெயரிலும் எனக்கு நம்பிக்கை இல்லை' என்று கூறி எனக்கு இந்தப் பொறுப்பைக் கொடுத்தவர் அமைச்சர் வீரப்பன் அவர்கள்தான்.

''என் மேல் குற்றம் சாட்டிடும் குருமூர்த்தி என்பவர் என் பதவிக் காலத்துக்கு அப்புறம் சில காலம் கோயில் கமிட்டியில் இருந்தவர்தான். அ.தி.மு.க. அமைச்சரவையே தம் கைக்குள் என்பதுபோல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் இவர். கோயில் பணத்தைக் கொள்ளையடித்து வீடு கட்டிக் கொண்டிருப்பதாக இந்தப் பகுதியிலுள்ள மக்கள் சொல்கிறார்கள்.



• சக்தி விநாயகர் கோயில், கே. கே. நகர்

"இந்தச் சக்தி விநாயகர் கோயில், நான், அன்பர் வெங்கட்ராமன், மற்றும் சிலர் பார்த்துப் பார்த்துக் கட்டிய கோயில். நாலு, நாலரை லட்சம் சேர்த்து வெள்ளிக் கவசம் எல்லாம் வாங்கியிருக்கிறோம்.

"என்னைத் தக்காராக நியமித்து ஆறு மாதங்களாகிவிட்டன. கணக்குப் புத்தகங்களை எனக்கடுத்த கமிட்டியிடம் கொடுத்த போது, வெற்று வவுச்சர்கள் அடங்கிய புத்தகங்களையும் சேர்த்துக் கொடுத்தேன். அவர்கள்தான் அந்த வெற்று வவுச்சர்களில் முன் தேதியிட்டு, போலிக் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். புலவர் கீரன் கையெழுத்தும் அப்படிப்பட்ட ஒன்றுதான்.

"கர்ப்பக்கிருஹம் கட்டுவதற்குப் பிளான் போட்டுக்கொடுத்தவர் மகாபலிபுரம் சிற்பப் பள்ளி ஸ்தபதிதான். இதைக் கட்டும்போது நாங்கள் பணத்தைச் சுரண்டினோம் என்பதெல்லாம் கற்பனையான குற்றச்சாட்டுக்கள். அரசாங்கத் துறைக்குத்தான் காண்டிராக்ட் விடப்பட்டது. அப்புறம் தில்லுமுல்லுக்கு எங்கே வழி?

"கோயில் செலவில் யாரும் சிங்கப்பூர் போகவில்லை. வெங்கட்ராமன் தான் சொந்தச் செலவில் போய்விட்டு வந்தார். கொஞ்சம்தான் டொனேஷன் வசூல் செய்யப்பட்டது. அதற்கும் முறையான ரசீது கொடுக்கப்பட்டது.

"கோயில் கணக்கு கே. கே. நகர், அசோக் நகர், டி.என்.எஸ்.ஸி. பாங்க்கில் இருந்தது. இதை எம்.சி.சி. பாங்க், கோடம்பாக்கம் கிளைக்கு மாற்றிக் கொண்டு,. கோயில் பிக்ஸட் டெபாஸிட்டைக் காட்டி, ஏஜெண்டைக் கையில் போட்டுக் கொண்டு சொந்தச் செலவிற்காகப் பாங்க் லோன் வாங்கிக் கொண்டார்கள்.

"என்னைத் தக்காராக நியமித்ததைக் கண்டு, பொறுமையால்தான் இவ்வளவு அவதூறுகளையும் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பகுதி மக்களுக்குத் தெரியும், கோயில் சொத்தைக் கொள்ளையடித்தவர்கள் யார் என்று!" கூறிமுடித்தார் அழகப்பன்.

'மொத்தத்தில் இரு கோஷ்டிகளும் ஒருவர் மீது மற்றொருவர் புகார் சொல்லிக் கொண்டிருப்பதால், கோயில் பணம் கொள்ளையடிக்கப்பட்டிருப்பது உறுதியாகிறது.

கே.கே. நகர் சக்தி விநாயகர் கோயில் விஷயத்தில் உடனே தலையிட்டு: அறநிலையத் துறை தேவையான நடவடிக்கை எடுத்தால் மட்டும் போதாது. தமிழகமெங்கும் கோயில் சொத்துக்கள், முறையான விதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதி மிக்க அறங்காவலர்களால் பராமரிக்கப்பட ஆவன செய்ய வேண்டும். ஊழல் செய்தவர்கள், தில்லுமுல்லு செய்தவர்கள், உண்டியலை உடைத்தவர்கள் மீண்டும் கோயிலில் எந்த பொறுப்புக்கும் வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

— நமது நிருபர்கள்

படம்: மனோகர்

தமிழகத்தில் நடப்பது

* பொ. நடனசிகாமணி, தஞ்சாவூர்

? "திறமையாகச் செயல்படும் மாநிலங்களுக்குத் திறமையாகச் செயல்படாத மாநிலங்களின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து பணம் பிரித்துக் கொடுக்கப்படும்" என்று நாடாளுமன்றத்தில் பிரதமர் பேசியுள்ளாரே, இது பாரபட்சமாகாதா?

! 'நாய் காத்த தென்னம்பழம்' என்று வழக்கு கேள்விப்பட்டிருப்பீர்களே. தானும் தின்னாது; பிறரையும் அதைத் தொடவிடாது. அப்படி, தானும் ஒதுக்கீடான தொகையைப் பயன்படுத்தாமல் பிறமாநிலங்களையும் பயன்படுத்தவிடாமல் இருப்பதில் மொத்தத்தில் இந்தியாவுக்கு நஷ்டம். அதைத்தான் ராஜீவ் கட்டிக் காட்டியிருக்கிறார். மாநில அரசின் மெத்தனம் காரணமாக ஒரு பிரதம



* 'நாடகம் நடக்காது.'



* பழங்கணக்கு.



* பாரபட்சம்?

இன்ஜினியரின் நியமனம் தாமதமாகிப் போனால் பல லட்சம் ரூபாய் ஒதுக்கீடான நிதி பயன்படுத்தப்படாமல் முடங்கிப் போகும்.

* எம். இராஜேந்திரன், லால்குடி.

? பஞ்சாயத்து யூனியன் தலைவர்களை நீக்கும் அதிகாரம் அரசுக்கு உண்டு என்கிறார் ப.உ.ச, மாநில அரசினை நீக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு என்கிறார் மத்திய அமைச்சர் ஒருவர். இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?

! ஒரு வித்தியாசமும் இல்லை. மக்கள் தீர்ப்பை மதிக்காமல் மிரட்டுகிற ஒற்றுமை மட்டுமே இருக்கிறது.

* என். பாலசுந்தர், இராணிப்பேட்டை.

? எதிர்க் கட்சிகள் கட்சிகளை வளர்ப்பதில் அக்கறை காட்டுகிறார்களே தவிர நாட்டைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்று கூறுவது பற்றி.:...?

! ஆளும் கட்சிக்காரர்கள் தங்களை வளர்த்துக் கொள்வதில் அக்கறை காட்டுவதைவிட எதிர்கட்சிக்காரர்கள் கட்சியை வளர்ப்பதில் அக்கறை காட்டுவது எவ்வளவோ மேல்!

* ஜி. இந்திரா, திருச்சி.

? இப்போது முளைத்துள்ள பல பத்திரிகைகள் சமுதாய அவலங்களைக் கிளர்ச்சியூட்டும்படி விவரித்து விற்பனையை அதிகரித்துக் கொள்வது பற்றி தங்கள் கருத்து என்ன?

! இதனால் பத்திரிகைகளுக்கு நன்மையைவிட சங்கடங்களே மிகுதி. எனவே விற்பனையை வளர்ப்பதுதான் நோக்கம் என்ற கருத்து தவறானது. சமுதாய அவலங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவது ஜனநாயகத்தில் பத்திரிகைகளின் கடமை. ஆனால் பொறுப்புணர்ச்சியோடு இது செய்யப்பட வேண்டும்.

* அ. தியாகராஜன், நெய்வேலி.

? கர்ணன் கவச குண்டலங்களோடு பிறந்தான்; எம்.ஜி. ஆர். வெற்றியோடு பிறந்தார் என்று ஓர் அமைச்சர் சொல்லியிருக்கிறாரே?

! அது எப்படியோ, மக்கள் திருவோட்டோடு பிறந்த மாதிரிதான் இருக்கிறது நாட்டின் நிலை.

* கே. கணேஷ், சென்னை.

? முன்பு காமராஜர், தி.மு.க.வை சினிமாக்காரன் கட்சி என்று சொன்னதற்கும் இப்போது கருணாநிதி அ.தி.மு.க.வை நடிகர் கட்சி, சினிமாக் கவர்ச்சி என்று கூறுவதற்கும் என்ன வித்தியாசம்?

! ஒரு வித்தியாசமும் இல்லை. தி.மு.க.வும் சினிமாக் கவர்ச்சியினால் வேரூன்றிய கட்சிதான். கலைஞரும் அண்ணாவும் சினிமா மூலம் புகழ் பெறவில்லையா என்ன? காங்கிரஸ் இயக்கத்திலும் கே.பி. சுந்தராம்பாள், டி.கே. பட்டம்மாள் தொடங்கி இன்று அமிதாப், சிவாஜி வரை பலப் பலர் நாடக மேடையிலும் சினிமாவிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

* போடி ரவிராஜ், மதுரை.

? இந்திய கிரிக்கெட் அணியின் இலங்கைப் பயணம் ரத்தானது எதைக் காட்டுகிறது?

! இப்போதுப் புத்தி வந்துவிட்டது என்பதைத்தான்.

* எம். சந்தன ஜோதி, நாகப்பட்டினம்.

? தி.மு.க.வின் கணக்குத் தீர்க்கும் நாள்

தூங்கும் ஆட்சியா?

பிப்ரவரி 23 என்று பாக்யராஜ் தேர்தல் பிரசாரத்தில் கூறினாரே? இப்போது என்ன செய்வார்?

! பழங் கணக்குப் பார்ப்பார்!

* கே. அமிர்தம், வேதாரண்யம்

? சிவாஜி ராவ் பாட்டீலின் ராஜினாமா பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! மூப்பனார் நினைப்பதை நான் நினைக்கவில்லை! ஹெக்டே ராஜினாமா செய்தார். சிவாஜி ராவ் ராஜினாமா செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார் என்பதை மறந்து (கர்நாடகாவில் நடந்தது போல்) "இங்கு நாடகம் ஏதும் நடக்காது" என்றார் மூப்பனார். ஏன் பெங்களூர் நாடகத்தை பம்பாயில் நடத்திப் பார்க்கட்டுமே. சிவாஜி ராவ் மறுபடி பதவிக்கு வந்திருக்க முடியுமா? சவானை, இ. காங்கிரஸ் மேலிடம் முதல்வராக நியமித்து கோஷ்டிப் பூசல்களை அம்பலத்துக்குக் கொண்டு வந்து நாற அடித்துவிட்டதே!

* பி. சத்திய நாராயணமூர்த்தி, சென்னை.

? காஷ்மீரில் ஷா அரசுக்கு அளித்து வந்த ஆதரவை இ. காங்கிரஸ் வாபஸ் பெற்றுக் கொண்டது பற்றி....?

! அது ஷா ஆட்சியை ஒழித்துக்கட்ட செய்யப்பட்ட சரியான முடிவு. ஆனால் அதன் பிறகு ஃபாரூக் அப்துல்லாவுக்கு ஆதரவு தருவதாக ராஜீவ் பேசிப் பார்த்தது அசட்டுத்தனமான காரியம். அதைவிடக் கேடு கெட்ட செயல் இ. காங்கிரஸ் ஆதரவு இனி இல்லை என்றபோது ஷா, ஃபாரூக் ஆதரவைப் பெற முயன்றது. நல்லவேளை இருவர் வலையிலும் விழாமல் தப்பித் தமது சுய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார் ஃபாரூக் அப்துல்லா.



* 'தூங்கும் ஆட்சி'



* அரசின் அதிகாரம்.



* நல்லவேளை...!

* கோ. திருஞான செல்வம், சிதம்பரம்.

? தமிழகத்தில் இப்போது ஒரு செயலற்ற ஆட்சி நடப்பதாகச் சொல்கிறார்களே? அதனால் தேர்தல் வருமா?

! முதலில் இரண்டாவது கேள்வி. ஓர் ஆட்சி செயல் திறனற்றது என்பதால் அதனைப் பதவியிலிருந்து இறக்கிவிட முடியாது. செயல் திறனற்ற ஆட்சியைப் பதவியில் அமர்த்திய மக்கள் அதற்கான தண்டனைக் காலத்தை அனுபவித்தே தீர வேண்டும். இனி முதல் கேள்வி. தமிழகத்தில் செயல் திறனற்ற ஆட்சி மட்டுமல்ல தூங்கும் ஆட்சியே நடக்கிறது என்கிறார் மக்வானா. 'அவர் பொய் சொல்கிறார். அந்தக் காலக் கட்டத்தில் முதல்வர் வீட்டில் ஃபோனே இருக்கவில்லை' என்கிறார் குழந்தைவேலு. 2, 3 மாதங்கள் ஃபோனே இல்லாமல் ஒரு முதல்வர் இருந்தாரென்றால் நிச்சயமாக அது செயலற்ற ஆட்சிதான். வேறு அத்தாட்சியே தேவையில்லை!


* மு. சிவஞான முருகன், ஸ்ரீவைகுண்டம்.

? டி.வி. நிகழ்ச்சிகளில் உங்களுக்குப் பிடித்தது எது?

! ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் 'காஸ்மாஸ்' என்ற தலைப்பில் சரித்திர, விஞ்ஞான, பரிணாம வளர்ச்சி பற்றிய ஒரு நிகழ்ச்சி காட்டப்பட்டு வந்தது. விஞ்ஞானப் படம் என்ற நினைப்பே தோன்றாத அளவு சுவாரஸ்யம். கடைசி நிகழ்ச்சியில் அணு ஆயுதக் குவிப்பு, அதன் ஆபத்து பற்றிக் கூறிவிட்டு, 'இந்த உலகம் மனிதர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல; வேறு எத்தனையோ ஜீவராசிகள், செடி, கொடி, மரங்களுக்கும் சொந்தமானது. இதனை அழிக்க மனிதனுக்கு ஏது உரிமை என்று கேட்கப்பட்டபோது உண்மையாகவே என் கண்கள் கலங்கிவிட்டன. இந்த அற்புதமான அறிவியல் தொடரை எளிய முறையில் தமிழாக்கம் செய்து எல்லா கல்வி நிலையங்களிலும் காட்டினால் எவ்வளவோ நன்றாயிருக்கும். அது எங்கே, ஐந்து நிமிஷம் கூடக் கண்கொண்டு பார்க்க முடியாத வைஜயந்திமாலாவின் 'ஏக்தா' நடன நாடகத்துக்குத்தான் மேலிட ஆதரவு! இந்தலட்சணத்தில் இதைப் படம் பிடிக்க டி.வி. நிலையம் விடியோ உபகரணங்கள் தந்துதவி ஒத்துழைக்கவில்லை என்று குறை வேறு வைஜயந்திக்கு!

* ரூ 10 பரிசு பெறுபவர்:

பொ. நடனசிகாமணி,
3/1709, பிச்சாண்டி முதலி சந்து,
மானோஜியம்பா வீதி,
தஞ்சாவூர்.


மகாராஷ்ட்ர முதல்வர் பதவி
சவான்
கோஷ்டியாவது.. புயலாவது... ஒண்ணும் என் கண்ணுலே தென்படலே!
வரப் போகுது தண்ணீர்.. பிரவாகமா.. வந்து விட்டது.. வருது.. வருது..
தெலுங்கு கங்கைக்குத் தாரை வார்த்த பணம்..
எடுபடாத வாதங்கள்
கர்நாடகா, மகாராஷ்டிராவுடன் பேச்சு வார்த்தைக்கு இணங்காமை.
ஃபோன்லே கேட்டா தாங்கறான்றாங்க!
முதலமைச்சரா இருந்து இதுவரை 77 நாள் ஃபோன் இல்லாம இருப்பாரா?
தாங்கலலே! .. ஃபோன் இல்லாம இருந்தாரு!



கல்கி

1986 மார்ச் 23
மலர் 44 இதழ் 34
குரோதன பங்குனி 10



அர்த்த ராத்திரி மசோதா!

எந்த ஜக்மோகனின் முயற்சியால் ஃபாரூக் அப்துல்லா பதவி நீக்கம் செய்யப்பட்டு ஜி. எம். ஷா பதவிக்கு வந்தாரோ அதே ஜக்மோகன் தூண்டுதலால் காங்கிரஸ் ஆதரவு மறுக்கப்பட, ஜி. எம். ஷா பதவி இழந்தார். இதைவிட,

மகள் சந்திரகலாவின் விடைத் தாள்களில் விளையாடி மார்க்குகள் கூடப் போடச் செய்ததாக மகாராஷ்டிர முதல்வர் சிவாஜி ராவ் மீது கோர்ட் தீர்ப்பு வர, அவர் மனமின்றி ராஜினாமா செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார். இதைவிட,

மகளுக்குப் பதினெட்டு வயதாகுமுன்னரே அவளுக்குக் கல்யாணம் செய்து வைத்ததால் குற்றவாளி என்று நீதிமன்றத்தால் கருதப்பட்ட கேரள அமைச்சர் கங்காதரன் ராஜினாமா செய்தார். இதையும்விட,

மத்திய அமைச்சரவையிலிருந்து அரிஃப் முகமதுகான், ராஜினாமா செய்ததானது முக்கியம் வாய்ந்தது. பிரதமர் கொண்டுவர உத்தேசித்துள்ள ஒரு சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக அவரது அமைச்சரவையிலிருந்து ராஜினாமா செய்யும் துணிவும் மனச்சாட்சிக்குக் கட்டுப்படுகிற நேர்மையும் அவருக்கு இருந்ததைப் பாராட்ட வேண்டும். இந்த மசோதாவை அவசரம் அவசரமாகத் தயாரித்து நாடாளுமன்ற எதிர்க்கட்சி அங்கத்தினர்களை அர்த்த ராத்திரியில் எழுப்பிப் படிக்கச் செய்து அவர்களைக் கலந்தாலோசிப்பது போல் பிரதமர் திடீர் கூட்டம் நடத்தி ஆடிய நாடகம் ரசிக்கும்படி இல்லை. பிரதமர் உடனடியாகக் கருத்துத் தெரிவிக்குமாறு கோரவும், அவர்கள் அவகாசம் கேட்டனர். அப்போது, 'நான் அயல்நாடுகளுக்குப் போகும்போது பல பிரச்னைகளில் அவ்வப்போதே என் முடிவுகளைத் தெரிவிப்பதில்லையா? அப்படி நீங்களும் ஒரு தீர்மானத்துக்கு வந்தால் என்ன?' என்று கேட்டிருக்கிறார் பிரதமர். இது சிறுபிள்ளைத்தனமான போக்கு. கட்சித் தலைவராகவும் நாட்டின் பிரதமராகவும் உள்ள ராஜீவ் காந்தி முடிவெடுப்பது போல் நாடாளுமன்ற அங்கத்தினர்கள் செயல்பட முடியாது. அவர்கள் முக்கியமான விஷயங்களில் தங்கள் கட்சித் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமல் பேச முடியாது.

ராஜீவ் தயாரித்துள்ள மசோதா, உச்ச நீதிமன்றத்தின் ஷாபானு வழக்குத் தீர்ப்பை யொட்டி உருவாக்கப்பட்டுள்ளது. ஷாபானுவுக்கு விவாகரத்துக்குப் பின் கணவனிட மிருந்து போதிய அளவு ஜீவனாம்சம் பெற உரிமை உண்டு என்பது தீர்ப்பு. இந்தத் தீர்ப்பை முற்போக்கு எண்ணம் கொண்ட பல முஸ்லிம்கள் வரவேற்றுள்ளனர். ஆனால் முஸ்லிம் மதச் சட்டம்தான் முஸ்லிம் மக்களை ஆளவேண்டும் என்று கருதுகிற பலர் இந்த உச்சமன்றத் தீர்ப்பினால் கலக்கமடைந்துள்ளனர். பிரதமர் தயாரித்துள்ள மசோதா இந்தப் பழமை வாதிகளைத் திருப்திப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. இது அரசியல் நோக்கில் வோட்டுப் பெறுவதற்காகச் செய்யப்பட்ட காரியம் என்று கருத இடம் இருக்கிறது. 125க்கு மேற்பட்ட கீர்த்திமிக்க முஸ்லிம் இந்தியர்கள் பிரதமரின் மசோதாவை ஆட்சேபித்துள்ளனர். பல முஸ்லிம் மாதர்களும் மாதர் சங்கங்களும் எதிர்ப்புக் குரல் எழுப்பியுள்ளன. இந்த முற்போக்குவாதிகளின் கருத்துக்களையும் பிரதமர் ஏற்று அலசிப் பார்க்க வேண்டும்.

மத வேறுபாடுகளைக் கருதாமல் அனைவருக்கும் பொதுவான சமுதாயச் சட்டம் தேவை என்பது நீண்ட நாட்களாகப் பல அறிஞர்கள் கூறி வரும் விஷயம். இது உருவாவ தால் கிறிஸ்துவ, முஸ்லிம் மதச் சட்டங்களைத் தூக்கி எறிந்துவிட வேண்டும் என்பது அர்த்தமில்லை. அவையும் இருக்கட்டும்.

ஆனால் எந்தச் சட்டத்தின்படி வாழ விரும்புகிறோம், தீர்ப்புகளைப் பெற விரும்பு கிறோம் என்று தீர்மானிக்கும் பொறுப்பை அவரவர் கருத்துக்கு விட்டுவிடுவது நல்லது. நாட்டின் பொதுச் சட்டப்படி வாழ்ந்து தீர்ப்புகளைப் பெற விரும்பும் முஸ்லிம்களுக்கு அந்த உரிமை மறுக்கப்படக் கூடாது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்.

கிழக்கே ஓர் உலகம்

10

ஒற்றுமை இல்லை, எனவே எதிர்காலமும் இல்லை!

கூஜராத் மாநிலத்தில் ஒரு வசதி படைத்தவரின் வீட்டிற்குள் நுழைந்தாற் போல் எனக்குப் பிரமையேற்பட்டது. பச்சை பசேல் என்ற அடர்த்தியான தோட்டத்தைத் தாண்டிச் சென்றதும் திண்டு வைத்த அழகிய ஊஞ்சல் தென்பட்டது. வரவேற்பறையில் வெண்கலத்திலும் பித்தளையிலும் நிறைய இந்தியக் கலைப் பொருட்கள். நடுவில் ஆர்.டி. பட்டேல் பைப்பைப் புகைத்தபடி உட்கார்ந்திருந்தார். நெடிய சிவந்த உருவம். எழுபத்தி ஐந்திலிருந்து எண்பது வயதிருக்கும்.

அவரது மனைவியும் (இரண்டாம் தாரம்) அவரும் மட்டும் அங்கே இருப்பதாகச் சொன்னார். "(மூத்த சம்சாரத்தின்) குழந்தைகள் எல்லாம் அமெரிக்காவில் பெரிய உத்தியோகத்தில் இருக்கிறார்கள். இதர உறவுக்காரர்கள் பம்பாயில்" என்றார்.

"நமக்கும் இங்கே என்ன வெச்சிருக்கு. பம்பாய்க்குப் போயிடலாம் என்று முட்டிக் கொள்கிறேன். இவர் கிளம்ப மாட்டேன்



• உல்லாசப் பயணிகளுக்கு உபசாரம்.



• செயற்கை ஏரி.

என்கிறார்'' என்று அவரது இளைய மனைவி அலுத்துக் கொண்டார்.

பட்டேலின் சிரிப்பில் சோகம் இழையோடிற்று. ''என் கால்களுக்கடியில் பூமியே இல்லாமல் போய்விட்டது போல் இப்பொழுது தோன்றுகிறது. எந்த இடத்திலுமே இது என் இடம் என்று சொல்லிக் கொள்ள முடியாத திரிசங்குவிலே நான் நிற்கிறேன். விதிதான் என்னை இங்கே இழுத்தது'' என்ற அவர் தொடர்ந்தார்: ''என்னுடைய முதல் மனைவி ஆஸ்துமாவினால் ரொம்பக் கஷ்டப்பட்டாள். பம்பாய்ச் சூழல் ஒத்துக் கொள்ளவில்லை. 1940—ல் என் அண்ணா பம்பாய் வந்திருந்தார். என்னைப் போலவே அவரும் வழக்கறிஞர். ''ஃபீஜியின் சீதோஷ்ணம் உன் மனைவியின் ஆஸ்துமாவைப் போக்கிவிடும். அங்கு வந்துவிடு'' என்று சொன்னார். டாக்டர்களும் இடமாறுதல் நல்லது என்றதால் அந்த ஒரே காரணத்துக்காக நான் இங்கு வந்து சேர்ந்தேன். கடைசியில் என் மனைவி இங்கு இறந்து போனாள். நான் ஃபீஜி அரசியலில் என் காலை ஆழப் புதைத்துக் கொண்டேன்.

''இங்கு நான் வந்தபோது இந்திய விவசாயிகளின் நிலை மிக மோசமாக இருந்தது. ஒரே ஒரு ஆஸ்திரேலிய சர்க்கரைக் கம்பெனியிடம் ஏகபோக உரிமை இருந்தது. அவர்கள் வைத்தது சட்டம். விவசாயிகளின் கரும்பில் இனிப்புக் குறைவு என்று கணக்கிட்டுக் குறைவாகப் பணம் கொடுப்பதும் வெல்லப் பாகை ஆஸ்திரேலியாவில் விற்று லாபம் பண்ணுவதுமாக ஏமாற்றி வந்தார்கள். நான் விவசாயிகளுக்காக 68ல் வாதாடிக் கரும்பின் விலை நிர்ணயிப்பதில் ஓர் உத்தரவாதத்தைச் சட்டமாக்கும்படி செய்தேன். 71—ல் கம்பெனியை அரசு வாங்கியபோது, விவசாயிகளுக்கு லாபமான ஒப்பந்தத்தைப் பெற்றோம்.

''இங்கு வந்த இந்தியக் கூலி ஆட்கள் நல்ல உழைப்பாளிகள். ஃபீஜிக்காரர்கள் இயற்கையோடு இழைந்து வாழ்ந்தார்கள். கடுமையாக உழைக்கமாட்டார்கள். தனது ஆட்சியின் கீழ் இருக்கும் இந்தத் தீவின் கரும்புத் தோட்டத்தில் வேலை செய்ய வேறு நாடுகளிலிருந்து ஆட்கள் வரவழைத்தால் கூலி அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்ற காரணத்தால் தனது ஆட்சியின் கீழிருந்த இந்தியாவிலிருந்தே கூலி ஆட்களை ஆங்கிலேய அரசு சுலபமாக வரவழைத்தது. அவர்களை ஏஜெண்டுகள் எப்படி ஏமாற்றி இத்தனை தொலைவு அழைத்து வந்தார்கள், மிருகங்களை வேலை வாங்குவதுபோல் அவர்களை இங்கு கம்பெனிக்காரர்கள் எப்படி வேலை வாங்கினார்கள் என்பதெல்லாம் அனைவரும் அறிந்த விஷயம். 'கிர்மிட்' காலம் முடிந்ததும் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லாதவர்களுக்குக் கம்பெனி தலைக்குப் பத்து ஏக்கரா நிலம் இலவசமாகத் தந்தது. அதை வைத்துதான் இப்பொழுது இந்திய சமூகம் இங்கு ஃபீஜியர்களைவிட உயர்ந்த நிலையில் இத்தனை சுபிட்சத்தை அடைந்திருக்கிறது. இந்தியர்களுடைய உழைப்பில்தான் ஃபீஜி இன்றைய நிலைக்கு வளர்ந்திருக்கிறது. இது வெள்ளையருக்கும் தெரியும். ஃபீஜியருக்கும் தெரியும். தவிர ஜனத் தொகையில் இந்தியர்களின் சதவீதம் அதிகம். 64—ல் 'இந்தியர்கள் ஃபெடரேஷன் பார்ட்டி' என்று ஒரு கட்சி ஆரம்பித்தோம். சுதந்திரத்தைக் கோரினோம். இந்தியர்களின் கை ஓங்கிவிடும் என்று உள்ளார்ந்த பயம் ஃபீஜியருக்கு உண்டு. அதனால் அவர்களுக்குச் சுதந்திரத்தில் ஆர்வமில்லை. இதை ஆங்கிலேயர் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டார்கள். ஆயினும் எங்கள் கட்சி மிகத் தீவிரமாகச் செயல்பட்டதால் 75—ல் சுதந்திரம் வந்தது. ஆனால் ஃபீஜிக்காக இத்தனை போராடிய இந்தியர்களுக்குச் சாதகமாக ஏதும் விளையவில்லை. நம் ஜனங்களேதான் இதற்குக் காரணம். 51 சதம் ஜனத்தொகையாக இருந்தாலும் தேர்தலில் தோற்றதற்கு ஒற்றுமையின்மையே காரணம். தங்களுக்குள் சண்டை, பொறாமை, இன வேற்றுமை ஆகியவை இந்திய குணாதிசயங்கள். இத்தனை நாட்களாக இல்லாத வட—தெற்கு இன வேற்றுமை இங்கே இந்தியர்களிடம் தோன்ற ஆரம்பித்திருக்கிறது. 80 சதம் இந்திய ஓட்டுக்கள் இந்தியக் கட்சிக்குச் சென்றால் மற்ற 20 சதம் ஃபீஜிக் கட்சிக்குப் போய்விடுகிறது. இதனால் இரண்டே ஓட்டில் எங்கள் கட்சி தோற்று ஃபீஜிக் கட்சி ஆட்சிக்கு வந்தது.''

நிதானமான மெல்லிய குரலில் பைப்பைப் புகைத்தபடி பேசிக் கொண்டு போன

* திருமதி பட்டேல்.



வாஸந்தி



* காற்றில் விரையும் கட்டுமரம் (Wind Surfing)

பட்டேலின் குரலில் ஒரு தோற்றுப் போன துக்கம் இழையோடிற்று.

"இனிமேல் நமக்கு எதிர்காலமே இல்லை என்று ஆகிவிட்ட பிறகு இன்னமும் நாம் இங்கே ஏன் உட்கார்ந்திருக்க வேண்டும் சொல்லுங்கள்?" முதல்முறையாக இந்தக் கேள்வியைக் கேட்டதுபோல் ஓர் உத்வேகம் இருந்தது திருமதி பட்டேலின் குரலில்.

அதைக் காதிலேயே போட்டுக் கொள்ளாமல் பட்டேல் தொடர்ந்தார்: "இப்பொழுது நிலத்தில் 83 சதம் ஃபிஜியருக்கே சொந்தம். 7 சதம்தான் சுதந்திரமாக ஆண்டு அனுபவிக்கக்கூடிய நிலம். 10 சதம் பிரிட்டிஷ் அரசுக்குச் சொந்தமானது. சுதந்திரமாக ஆண்டு அனுபவிக்கக் கூடிய நிலத்திலும் வெகு சில இந்தியர்கள்தான் சில பகுதிகளை வம்சாவழியாகச் சொந்தம் கொண்டாட இயலும். மற்றவர்களிடம் இப்போது சொந்தமாக இருக்கும் நிலத்துக்கு இன்னும் இருபது வருஷ உரிமை மட்டுமே தந்திருக்கிறார்கள். இருபது வருஷத்துக்குப் பிறகு அது அவர்களுக்குச் சொந்தமில்லை. அதாவது அவர்களது சந்ததிகளுக்கு இடமில்லை. எதிர்காலம் இப்பொழுதுபெரியகேள்விக்குறி.எதிர்கால நிச்சயமின்மையும் பாதுகாப்பின்மையும் 'டைம் பாம்'மின் மேல் உட்கார்ந்திருப்பது போன்ற உணர்வை உண்டாக்குகிறது. இப்பொழுதே நிறைய இந்தியக் குடும்பங்கள் கானடாவுக்கும் நியூஜிலாந்து, ஆஸ்திரேலியாவுக்கும் குடி பெயர ஆரம்பித்து விட்டன. கல்வி அறிவு அதிகமாகி வருவதால் குடும்பக்கட்டுப்பாட்டைக் கடைப் பிடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். குடும்பக் கட்டுப்பாட்டை எதிர்த்து நான் நிறைய பிரசாரம் செய்தேன். 'எண்ணிக்கைதான் நமக்கு பலம்; குடும்பத்தைச் சுருக்காதீர்கள்' என்பேன். அவர்களுக்குப் புரிந்தால்தானே?"

"குழந்தைகளை ஏன் பெற வேண்டும். அவர்களுக்கு ஓர் எதிர்காலம் இல்லாத போது?" என்றார் திருமதி பட்டேல் ஆக்ரோஷத்துடன்.

தூரப் பார்வை பார்த்தபடி பட்டேல் நிதானத்தை இழக்காமல் தொடர்ந்தார்: "ராணுவத்தில் 99 சதம் ஃபிஜியர்கள். அவர்களில் 22 சதம் ஃபிஜியர்கள் கொரில்லாப் பயிற்சிக்காக பிரிட்டிஷ் ராணுவுக்கு அனுப்பப்படுகிறார்கள். சமயம் வந்தால் ஆயுதம் ஏந்த ஒரு இந்தியனுக்கும் அனுமதி கிடைக்காது! கல்லூரிகளில் இடச் சலுகைகள் எல்லாம் ஃபிஜியருக்கு. இந்தியர்கள் மட்டும் ஒற்றுமையாக இருந்திருந்தால் இந்தியர்களுக்குப் பாதகமாகாமல் பார்த்துக் கொண்டிருக்கலாம்.... இப்போ எல்லாம் போச்சு.....!" என்று ஆயாசத்துடன் பட்டேல் கையை விரித்தார்.

அவர் சொல்ல விரும்பாததைத் திருமதி பட்டேல் படபடப்புடன் சொன்னார்: "ஃபிஜி அரசுக்குச் சலாம் போடும் இந்தியர்கள் இருக்கும்போது சலாம் போடுவதினால் கிடைக்கும் சலுகைகளை விடுவதற்கு மனமில்லாத சுயநலக்காரர்கள் இருக்கும்வரை நீங்கள் என்ன சாதித்துவிட முடியும்?"

"இது ரொம்ப ஆரோக்கியமான பூமி" என்றார் பட்டேல் தோட்டத்தையும் அதற்கப்பால் தெரிந்த எழில் குன்றுகளையும் பார்த்தபடி. "மற்ற தேசங்களில் இருப்பது போல் ஒரு தொற்று நோயும் இங்கு வராது."

"ஆனால் அறிவு மழுங்கிப் போகலாம்! இதயம் பலவீனமடையலாம்!" என்றார் திருமதி பட்டேல்.

என் நெஞ்சில் கனமேறியிருந்தது. அவர்களிடமிருந்து விடை பெற்று நான் ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த ஸ்வாமி பாஸ்கர ஆரண்யாவைப் பார்க்கச் சென்றேன். 'ஈதா ஆச்ரம்' என்ற ஒரு பிரார்த்தனைக் கூடத்தை அவர் கட்டுவதாகவும், தமிழ் நாட்டிலிருந்து வந்தவர் என்பதாகவும் கேள்விப்பட்டதில் என் ஆர்வம் கிளர்ந்திருந்தது.

(தொடரும்)

∴பாரெக்ஸ்®
முதன்முதல் தேர்வு!




ஏனெனில் புதிய மேம்பட்ட ∴பாரெக்ஸ்® முதன்முதலாக திட உணவிற்கு மாறும் குழந்தைக்கென இன்றியமையாத உட்பொருள்கள் சரியான அளவுகளில் சேர்க்கப்பட்டதாகும்.

குழந்தையின் வளர்ச்சிக்கும் மென்மையான செரிக்கும் சக்திக் கெனவும் சரியான அளவில் புரதங்களும் கொழுப்புச் சத்துக்களும் அடங்கிய தாகும் ∴பாரெக்ஸ்.

குழந்தையின் இரத்தத்தை ஆரோக்கிய மாக வைக்க இதில் போதுமான அளவு இரும்புச் சத்தும் உள்ளது.

குழந்தையின் எலும்புகளும் பற்களும் திடமாக வளருவதற்கு உகந்த விகிதத்தில் கால்ஷியம்-∴பாஸ்∴பரஸ் அடங்கியதாகும் ∴பாரெக்ஸ்.

இவை தவிர, புதிய ∴பாரெக்ஸ் கலப் பதற்கு எளிதானது...சுவைமிக்கது.



புதிய மேம்பட்ட **∴பாரெக்ஸ்®**

பால் சேர்க்கத் தேவையில்லை!
நீருடன் கலந்து கொடுத்தால் போதும்.

CLARION/B/GX/10/203

N. S. K.

மோட்டார் & ஜெனரல் பைனான்ஸ்

கவர்ச்சிகரமான வட்டி விகிதம்

27%

1 வருடம்	2 வருடம்	3 வருடம்	5 வருடம்
20%	21%	22%	24%

(குறைந்தபட்சம் ரூ 3000/- மும் அதற்கு மேலும் ஏற்றுக் கொள்ளப்படும்)

3 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற கூடுதல் போனஸ் 24% + 1% = 25%
6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற கூடுதல் போனஸ் 24% + 2% = 26%
12 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற கூடுதல் போனஸ் 24% + 3% = 27%

கங்கா கேஷ் சர்ட்டிபிகேட்

உங்களுடைய முதலீடு 42 மாதங்களில் இருமடங்காகிறது.

உதாரணம் ரூ. 10,000/- ரூ. 20,000/-(இச்சலுகை 30 4.86 வரை மட்டுமே)

அன்பளிப்பு					
முதலீடு	வருடம்	சிறப்புப் பரிசு	முதலீடு	வருடம்	சிறப்புப் பரிசு
ரூ. 25,000	5	1 சவரன் தங்க நாணயம்	ரூ. 5,000	3	1 HMT வாட்ச்
ரூ. 15,000	5	½ சவரன் தங்க நாணயம்	ரூ. 5,000	2	1 அழகிய வெள்ளி குத்துவிளக்கு
ரூ. 10,000	5	¼ சவரன் தங்க நாணயம்			

பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க சிறப்பு பரிசுகள் (பிக்ஸெட் டெபாசிட்டுகளுக்கும் கங்கா கேஷ் சர்டிபிகேட்டுக்களுக்கு மட்டுமே) 30.4.86 தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்த பொன்னான வாய்ப்பை நழுவ விடாதீர்கள்.

பேங்க் கேஷ் சர்டிபிகேட்டுகள்

5 வருடம்	6 வருடம்	7 வருடம்	10 வருடம்
18%	19%	20%	24%

N. S. K. மோட்டார் & ஜெனரல் பைனான்ஸ்

எண் 38-B, பர்கிட் ரோடு [முதல் மாடியில்] (தி.நகர் பேருந்து நிலையம் எதிர்புறம்) தி. நகர், சென்னை-600 017 போன்: 447135

HIRE PURCHASE FINANCIERS

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — II

ராஜ்மோகன் காந்தி



14

'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை எதிர்த்துக் கேள்விகள் எழுப்பியதாலும், பாகிஸ்தான் பிரிவினை குறித்துப் பரந்த மனப்பான்மை கொண்டிருந்ததாலும் ஸி. ஆர். நிறைய எதிர்ப்பைத் தேடிக் கொண்டார். பம்பாய் நாபூ அரங்கில் நடந்த பொதுக் கூட்டத்தில் இளைஞன் ஒருவன் தார் நிரம்பிய காகிதப் பந்து ஒன்றை அவர் மீது வீசினான். அந்த ஆயுதம் ஸி. ஆரை நெற்றிப் பொட்டில் தாக்கியது. அவர் முகத்தையும், அங்கவஸ்திரத்தையும் அந்தக் கறுப்புத் திரவம் கறைப்படுத்தியது. 'ராஜாஜி ஒழிக!' 'அகண்ட ஹிந்துஸ்தானம் வாழ்க! என்று சிலர் கோஷம் எழுப்பினார்கள். ஆரவாரம் அடங்கும்வரை பல நிமிடங்களுக்கு ஸி. ஆர். கலங்காமல், நிச்சலனமாக நின்றார். பிறகு நிறுத்தி நிதானமாகப் பேசினார்:

''நண்பர்களே, என் மீது குறி பிசகாமல் தாரை வீசிய இளைஞனைப் பாராட்டுகிறேன். எங்கள் இருவரின் கருத்துக்கள் ஒத்துப் போகவில்லை. ஆனால் சுதந்திரத்தைப் பெற்று அதனைப் பேணவும் அச்சுறுத்தும் ஜப்பானியப் படையெடுப்பைச் சந்திக்கவும் இந்தியாவுக்கு அவனைப் போன்ற வைராக்கியம் மிக்க இளைஞர்கள் தேவை....''

ஸி. ஆர். பேசியதை நிசப்தமாகக் கேட்டது கூட்டம். பேசி முடிந்ததும் ஆரவாரம் செய்தது. தமக்கே உரிய பாணியில் காந்தி, ஸி. ஆரின் சாந்த குணத்தையும், நகைச்சுவை உணர்வையும் சமயோசிதத்தையும், வைராக்கியத்தையும் பாராட்டினார். ஸி. ஆரின் எதிரிகளைக் கண்டித்தார். ''அவர் மீது தார் எறிந்தவர்கள் தங்களைத் தாங்களே அவமானப்படுத்திக் கொண்டுள்ளனர்.... ஒரு மாவீரனுக்குரிய பண்புகள் அனைத்தும் உடையவர் ராஜாஜி.''

சந்தானம், கல்கி பதிப்பாளர் சதாசிவம், அப்பத்திரிகையின் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி போன்ற நீண்ட கால சகாக்கள் பலர் ஸி. ஆரை ஆதரித்தனர். சிறிது காலத்துக்கு ஒவ்வொரு வார மத்தியிலும் துணைக் கல்கி பிரசுரமாயிற்று. இந்தச் சிறப்பு வெளியீட்டின் மூலம் ஸி. ஆரின் கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டு வந்தன. ஆனால் ஸி. ஆர். பாகிஸ்தானை எதிர்த்த பெரும்பான்மை காங்கிரஸ்காரர்களின் கோபத்தை மேலும் மேலும் தூண்டிக் கொண்டிருந்தார். 'ஸி. ஆரின் உதவியாளர்களும் ஆதரவாளர்களும் அவரது கொள்கையைப் பரப்ப விருப்பப்பட்டால் காங்கிரஸ் கட்சியில் தாங்கள் வகிக்கும் பதவிகளை விட்டு விலக வேண்டும்' என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் கிருபளானி ஒரு சுற்றறிக்கை விடுத்தார். இதன் விளைவாகத் தென்னிந்தியாவில் சிலர் தாங்கள் வகித்து வந்த கட்சிப் பதவிகளிலிருந்து ராஜினாமா செய்தார்கள். ஆத்திரமடைந்த நேரு, '22 வருட எண்ணிலடங்காத் தியாகங்களின் விளைவாக உருவாகியிருந்த ஆயுதத்தை ஸி. ஆர். சுக்கல் நூறாக உடைத்தெறிவதாகப் பத்திரிகைகளில் குற்றம் சாட்டினார். 'பாகிஸ்தானுக்காக காங்கிரஸை ஸி. ஆர். பிளவுபடுத்துகிறார்' என்று அவர் சிவராவிடம் தெரிவித்தார். ஜவாஹர்லால் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை உற்சாகமாக ஆதரித்தவர் இல்லை. அச்சு நாடுகளின் ஆக்கிரமிப்பிலிருந்து சீனாவையும் ருஷ்யாவையும் பாதுகாக்கும் பணிக்கு அந்த இயக்கத்தினால் இடையூறு ஏற்படும் என்று அஞ்சியதால் அதனை எதிர்த்தே அவர் வாதாடியிருந்தார். ஆனால் பொது மக்கள் அவ்வியக்கத்துக்கு அளித்த அமோக ஆதரவு

ராஜாஜி அனுப்பிய ராக்கி

அவரை மனம் மாறச் செய்தது. அவருள் இருந்த தேசிய உணர்வே இறுதியில் வென்றது.

பட்டேல் இன்னும் அதிகக் கோபம் அடைந்திருந்தார். 'வல்லபபாய் ஸி. ஆருக்கு ஓர் இயல்பான நண்பராக அமைவார்' என்று காந்தி 1919ல் கூறிய காலம் தொட்டு அவ்விருவரும் ஒன்றுபட்டிருந்தனர். சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரியாகப் பதவி ஏற்கச் சொல்லி ஸி. ஆரைக் கட்டாயப்படுத்தியதே பட்டேல்தான். இப்போது திடீ ரென்று அவ்விருவரும் முற்றிலுமாகக் கருத்து வேறுபட்டிருந்தனர். வல்லபபாய் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் தீவிரமாக நம்பினார்; அதே தீவிரத்துடன் காங்கிரஸ்—லீக் உடன்பாட்டுக்கான சாத்தியக்கூறுகளில் அவநம்பிக்கை கொண்டிருந்தார்.

ஜூலை மாதத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் 39 வயதுத் தலைவர் கே. காமராஜ், தமிழ்நாடு காங்கிரஸின் தந்தையான ஸி. ஆருக்குத் தாக்கீது அனுப்பினார். அதில் காங்கிரஸ் தீர்மானங்களுக்கு விரோதமான முறையில் ஸி. ஆர். பிரசாரம் செய்து வருவதால் அவர் மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரணங்களை அடுத்த பதினைந்து நாட்களுக்குள் தெரிவிக்குமாறு கேட்டிருந்தார். 'காங்கிரஸுடன் தொடர்பைத் துண்டித்துக் கொண்டு பிறகு உங்கள் பிரசாரத்தை உங்களுக்கே உரிய திறமையுடனும், தீவிரத்துடனும் நடத்திச் செல்வதே லட்சணமானது' என்று காந்தி ஸி. ஆருக்கு அறிவுரை வழங்கினார். காங்கிரஸின் சட்டமன்றக் குழுத்தலைவர் பட்டேல், ஸி. ஆர். தமது சட்டசபை அங்கத்தினர் பதவியை விட்டு விலகிவிட வேண்டும் என்று விரும்புவதாகவும் காந்தி தெரிவித்தார்:

"உங்கள் பிரசாரத்தால் நீங்கள் காங்கிரஸின் விதிமுறைகளை மீறுவதாக வல்லபபாய் உறுதியாக நம்புகிறார்.... காங்கிரஸ் கட்சி சார்பில் சட்டசபை உறுப்பினராக இருப்பவர்கள் அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியின் கொள்கைகளைச் செயல்படுத்தக் கடமைப்பட்டவர்களாகிறார்கள். இந்தக் கட்டுப்பாட்டின் நியாய அநியாயங்களை ஆராய்வதற்கு இது தருணமல்ல.... வல்லபபாயின் தீர்ப்புக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும்."

கட்சிக்கு எதிராகத் தாம் செயல்படுவதாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நிராகரித்தார் ஸி. ஆர். 'கமிட்டி தீர்மானங்கள் வடிவில் சில கருத்துக்கள் அங்கீகாரம் பெற்றுவிட்ட காரணத்தால் தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொள்ளுமாறு காங்கிரஸ் உறுப்பினர்களை வற்புறுத்த யாருக்கும் உரிமை இல்லையா? அதற்குத் தடை விதிக்கப்பட வேண்டுமா?' என்று கேட்டார். காமராஜுக்கு எழுதிய கடிதத்தில் அவர் கூறினார்:

"காங்கிரஸின் தற்போதைய போக்கிலிருந்து அதனை மாற்றத்தான் நான் முயற்சி செய்கிறேன். முப்பது வருடங்களுக்கு மேலாக காங்கிரஸுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டவன் என்பது மட்டுமின்றி ஒரு தேசிய அமைப்புக்கு ஒழுக்கம் எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்குக் கருத்துச் சுதந்திரமும் அவசியம் என்பதையும் நன்கு உணர்ந்தவன் நான். இத்தகைய ஒருவனிடம் எதிர்பார்க்கக்கூடிய அக்கறையுடனும் எச்சரிக்கையுடனும்தான் நான் இந்த முயற்சியில் இறங்கியுள்ளேன்."

இருப்பினும், முழுச் சுதந்திரத்தோடு தன் பிரசாரத்தைத் தொடர்வதற்காகக் காங்கிரஸிலிருந்து விலகியதோடு சட்டசபையிலிருந்தும் ராஜினாமா செய்தார் ஸி.ஆர். ஆனால் சென்னை மாகாணம் என்ற உறுதியான அடித்தளம் அவர் கால்களுக்குக் கீழேயிருந்து நழுவிக் கொண்டிருந்தது. சட்டசபை காங்கிரஸ் கட்சி மீண்டும் கூடி ஸி.ஆரின் தூண்டுதலில் முன்பு நிறைவேற்றிய தீர்மானங்களை ரத்து செய்துவிட்டு அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியின் போக்கையே ஒப்புக் கொண்டது.

(தொடரும்)

தமிழாக்கம்: சீதாரவி.



தபால் தலை சேகரிப்பவர்களிடையே தற்போது மிகவும் பிரபலமாக இருப்பவை பிரிட்டிஷ் இளவரசி டயானா படம் அச்சிட்ட தபால் தலைகள் தான்! கம்யூனிச நாடான வடகொரியா கூட தன்னுடைய நாட்டு தபால் தலைகளில் சார்லஸ், டயானா, இளவரசர் வில்லியம் படங்களைக் கொண்ட தபால் தலைகளை வெளியிட்டுள்ளது. நியூஸிலாந்தும் இளவரசி டயானா தபால் தலைகளை வெளியிட்டுள்ளது. அமெரிக்காவிலும் ஜப்பானிலும் கூட!

— சீதாபந்த

ஆதாரம்: சன்டே மிட்டே

கோவி. மணிசேகரன்
எழுதும்

மாண்புமிகு முதலமைச்சர்

சரித்திரத் தொடர்





நெருப்பாக நீ

அனுராதா ரமணன்

எழுதும் சமூகத் தொடர்

ஏப்ரல் 13

கல்கி

சித்திரைச் சிறப்பிதழ்

ஆந்திர மாநில

மலராக உருவாகிறது

மற்றும் பல புதிய அம்சங்கள்



தூண்டி விடுகிறார் தராசு!



கலைஞர் பேட்டியில் தெளிவு

* கலைஞரின் பேட்டியில் அவருக்கே உரித்தான சிந்து பாடும் தமிழ், நகைச்சுவை, இவற்றுடன் வெற்றியில் போதை கொள்ளாத நிதானமும் கண்டேன். மொத்தத்தில் ஆணித்தரமான கருத்துக்களுடன் கூடிய தெளிவு.

சென்னை—28, எம். தியாகராஜன்.

தெரியாதா!

* சென்னையில் எஸ் 100க்கு டயல் செய்தால் 50 பைசா போடத் தேவையில்லை என்பது ராஜேஷ் குமாருக்குத்தான் தெரியவில்லை என்றால் உங்களுக்குமா தெரியாமல் இருக்க வேண்டும்?

சென்னை—81, சா. அன்பழகன்.

தலைப்பே அருமை!

* பரதக் கலை வரலாற்றில் ஒரு கைாப்தமான ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல் அவர்களைப் பற்றிய தலையங்கத்திற்கு 'அன்பே அழகென்று வாழ்ந்தவர்' என தலைப்புக் கொடுத்திருந்தது அருமை!

குடியாத்தம்—2, ஸ்ரீலபரிதாசன்.

விநோதமான முரண்பாடு

* வரதட்சிணையை நினைத்து வாடும் தமிழாசிரியர் குடும்பங்களைக்கொண்ட நாகரீகமிக்கநர(ர)கரங்களைவிட (நகரவாசிகளை), வரதட்சிணை, வரன் தேடல்போன்ற கேவலங்களை விரும்பாத மலைவாசி (பளியர்)கள், சூழ்நிலையில் 'நாகரிகமற்று' தோற்றமளித்தாலும், உள்ளத்தாலும்—நடத்தையாலும், மிக உயர்ந்த நாகரிகத்திற்கு இலக்கணமே வகுத்து விட்டார்கள்!

மதுரை, போடி ரவிராஜ்.

* அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் நடைபெறும் வேலை பற்றிக் கேட்கப்பட்டிருக்கும் கேள்விற்கு, 'தராசு' அளித்துள்ள பதிலை, நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஏதோ வங்கி ஊழியர்கள் வேலையே செய்யாமல் அரட்டை அடிப்பதற்கே அவதாரம் எடுத்திருக்கிறார்கள் என்ற எண்ணத்தை உங்கள் பதில் உருவாக்குகிறது. குறிப்பாகப் பெண்களைப் பற்றிய உங்கள் 'ரிமார்க்' முழுக்க முழுக்க உண்மைக்குப் புறம்பானது. வர வர, வங்கி ஊழியர்களைப் பற்றி ஜோக் அடிப்பது 'ஃபாஷன்' ஆகி வருகிறது. வங்கி ஊழியர்களும் பொது மக்களில் ஒரு பகுதிதான். இப்படிப்பட்ட உங்கள் பதில்மக்களின் ஒரு பகுதியை இன்னொரு பகுதியினருக்கெதிராகத்தூண்டிவிடுவதாக அமைந்துள்ளது.

சென்னை, யூனியன் வங்கி ஊழியர்கள், பிரதான கிளை.

ஐம்பத்தைந்து கையெழுத்துக்களுடன் வந்துள்ள கடிதத்தைக் கண்டு மிகவும் மகிழ்கிறோம். வேறு சில வங்கி ஊழியர்களும் ரோசத்தோடு எழுதியுள்ளனர். பல வங்கி ஊழியர்கள் பொறுப்புணர்வுடன்கறுகறுப்பாகநடந்துகொள்கின்றனர் என்பதில் ஐயமில்லை. ஆனால் நாடு தழுவிய நோக்கில் தராசு பதிலில் கூறப்பட்டுள்ளது போல் நடந்து கொள்கிற வங்கி ஊழியர்களும் ஏராளமாக இல்லாமல் போகவில்லை. எனவே தான் நம்மை எதிர்நோக்கியுள்ள இந்த முக்கிய பிரச்னைகளுள் ஒன்றாக இதனைத் தாம் கருதுவதாக மத்திய நிதி அமைச்சரே ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார். தராசு பதிலை அப்படியே வாபஸ் பெற வேண்டிய நிலை நாட்டில் உருவாக வேண்டும் என்பதே நம் ஆசை.—ஆசிரியர்)

முகவரியைத் தரக் கூடாதா?

ஓர் இந்தியக் குடும்பத்தின் உண்மைக் கதை'' யைப் படித்து மனம் நெகிழ்ந்து போனோம். அக்குடும்பத்தினருக்கு ஏதேனும் உதவி செய்யலாமென்றாலோ அவர்களின் முகவரி தெரியவில்லை. முகவரியைத் தெரிவித்தால் அவர்களுக்கு உதவி செய்ய இயலும்.

தாம்பரம், திருமதி சுகந்தா ராமகிருஷ்ணன் மற்றும் ஆனந்தபுரம் காலனி பெண்கள்.

* ஓர் இந்தியக் குடும்பத்தின் உண்மைக் கதை கல் நெஞ்சத்தையும் உருகச் செய்யும். ஆனால் இது திட்டமிட்ட, அளவான குடும்பத்தின் அவசியத்தை நமது சமுதாயம் உணரச் செய்யும் ஓர் அருமையான முன் உதாரணம்.

அரப்பன்சோலை, எம். தேவதாஸ்.

ராஜகோபாலன் குடும்பத்துக்கு உதவும் நோக்கில் நமக்குப் பல மணி ஆர்டர்களும் டிராஃப்டுகளும் வந்துள்ளன. நன்றி. வேறு பலர் அவரது விலாசம் கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய இளகிய நெஞ்சங்கள் வருந்தாதிருக்க விலாசத்தைக் கீழே தருகிறோம். ஆனால் ஒன்று. ராஜகோபாலன் குடும்பத்தைப் போன்று இந்தியாவில் இன்று எத்தனையோ குடும்பங்கள். எவ்வளவு பேருக்கு நம்மால் உதவ முடியும்? சுதந்திரம் பெற்று முப்பத்தெட்டு ஆண்டுகள் ஆகியும் இப்படிப் பல ''ராஜகோபாலன் குடும்பங்கள்'' நாட்டில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுவதே அந்த உண்மைக் கதையைப் பிரசுரித்ததன் நோக்கம். தனியாரும் சரி, அரசும் சரி நன்கொடைகள் தருவதன் மூலமோ 'திருப்பித்தர அவசியமில்லாத' லோன் மேளாக்கள் நடத்துவதன் மூலமோ ஏழைமை ஒழியாது. தொழில் கற்றுத்தர வேண்டும்; வேலை வாய்ப்புக்கள் பெருக ஏற்ற விதத்தில் கொள்கைகளைத் திருத்தி அமைக்க வேண்டும். அதன் மூலம் எத்தனையோ லட்சம் ராஜகோபாலன் குடும்பங்களில் இருள் நீங்கி ஒளி பரவவேண்டும். விலாசம்: திரு. ராஜகோபாலன், ஓய்வு பெற்ற ஆசிரியர், 46A, நெல்லையப்பபுரம், மதுரை—625 006.

இன்னொரு தலையங்கம்!

* முதல் பக்கத்தில் 'அன்பார்ந்த வாசகர்களுக்கு' என்ற உங்கள் கடிதத்தைப் படித்ததும் இன்னொரு தலையங்கத்தைப் படித்தது போல இருந்தது. உங்கள் ஆதங்கமும் புரிந்தது. உங்கள் திட்டம் தமிழகத்தில் ஒரு புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் என நிச்சயம் நம்புகிறேன்.

விழுப்புரம், துளசிபாய்.

* 'மாதம் ஒரு மாவட்டம்' தொடங்கியாயிற்று! இனி கல்கியெங்கும் சீரியஸ் மேட்டர்தானா? கொஞ்சம் கருணை காட்டி எங்களைச் சிரிக்கவும் வையுங்கள் ஸாரே!

குடியாத்தம் (வ. ஆ.), கே. பட்டாபிராமன்.

பிழைக்கத் தெரிந்திருக்கிறதே!

* வேதாளம் கூடப் பரவாயில்லையே... பிழைக்கத் தெரிந்து கொண்டு விட்டதே.. நாட்டு நடப்புக்கேற்ப கதை சொல்லியுள்ளதே.. முடிவு மட்டும் மனத்தைத் தொட்டது நிஜம்!

சாலிகிராமம், எஸ். சம்பத்குமார்.



பரிட்சை நெருங்கிடும் காலம்? கவனமாக படித்திடும் நேரம்

முழுதும் தயாராயிருந்திட வேண்டிய காலம் **காம்ப்ளான்**® பருக வேண்டிய நேரம்.

காம்ப்ளான்® ஒன்றில்தான் அவனுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் 23 மூலாதார சத்துணவுகள் உள்ளன.

குழந்தைகள், முக்கியமாக பரிட்சைக்கு படிக்கும் காலத்தில், திடமாக இருந்திடுவது அவசியம். அதனால்தான் பரிட்சை நடக்கும் நேரம் **காம்ப்ளான்** நேரம் என்று அன்னையர் அறிவர்.

உடல் வளர்ச்சியில் பங்கு பெறுவதே புரதம் என்ற சத்துதான். **காம்ப்ளானில்** குழந்தைகளுக்குத் தேவையான புரதம் (20%) இருப்பது மட்டுமல்ல, அப்புரதம் மிகச்சிறந்த புரதமுமாகும் (பால் புரதம்). அத்துடன், அது குழந்தைகளுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச்சத்து, வைட்டமின்கள், தாதுக்கள் ஆகிய 22 கூடுதல் மூலாதார சத்துணவுகள் கொண்டதாகும்.

துவங்குங்கள் **காம்ப்ளான்** உங்கள் குழந்தைகளுக்கு—அன்றாடம் இருவேளை. வீட்டில் இருக்கட்டும் டாக்டர்களின் சிபாரிசு பெற்ற திட்டமிட்ட உணவு **காம்ப்ளான்**.

காம்ப்ளான் கிடைக்கிறது, இனிய சுவைகளாம் சாக்லேட், ஏலக்காய்—குங்குமப்பூ, ஸ்ட்ராபெர்ரியும், சாதா ரகத்திலும். குழந்தைகள் மிகவும் விரும்பிடும் சுவைகள்.





B84.GLC.11 Tam.

காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு

சித்தரஞ்சனி

34. கடைசிக் கோரிக்கை!

அருணோதய காலத்தில் எங்கும் அவலக் குரல் கேட்டுக் கொண்டிருந்த சூழ்நிலையில் சாதவாகனன் அருகில் நின்ற சித்தரஞ்சனி, பூஜாரி பூஜை பாத்திரங்களுடன் தாபிலேசுவரர் கோவிலுக்கு வந்ததைப் பார்த்து, "இது பூஜை செய்யும் சமயமா?" என்று உள்ளூர நினைத்தாலும் அதை வாய் விட்டுச் சொல்லாமல் பெருமூச்செறிந்தாள். அவள் பெருமூச்சின் காரணத்தை உணர்ந்து கொண்ட சாதவாகனன், "எதை முன்னிட்டும் பூஜை நிற்க முடியாது சித்தரஞ்சனி. வெற்றியோ தோல்வியோ மரணமோ ஜீவிதமோ எல்லாமே அவனிஷ்டப்படி நடக்கிறது" என்று விளக்கம் சொன்னான்.

சித்தரஞ்சனி அப்பொழுதும் சமாதானத்தை அடைந்தாள் இல்லை. எதிரிகள் நாசத்துக்கும் தோல்விக்கும் சாதவாகனன் திட்டங்களே காரணமென்பதை உணர்ந்திருந்ததால் "இந்தப் போர்த் திட்டத்தைக் கடவுளா தயாரித்தார்? படைகளை அவரா நடத்தினார்?" என்று விசாரித்தாள்.

"அவனன்றி ஓரணுவும் அசையாது என்று நீ கேள்விப்பட்டதில்லையா சித்தரஞ்சனி?" என்று வினவினான் சாத்வாகனன்.

"கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படியானால் நீங்கள் திட்டம் வகுப்பானேன்? அவனே வகுத்திருக்கலாமே" என்றாள் அவள்.

"அவன்தான் வகுத்தான்."

"என் உடலில் திட்டம் தீட்டியது அவனா!"

"ஆம்."

"உங்கள் புத்தி?"

"அதை இயக்குபவனும் அவன்தான்"

"அப்படியானால்?"

"புத்தி கர்மவசப்படி இயங்குகிறது. கர்மாவைத் திசை திருப்பும் சக்தி ஆண்டவனைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது" என்று தத்துவம் பேசிய சாதவாகனன், "சித்தரஞ்சனி! நான் இங்கு தன்னந்தனியாக வந்தேன். நாகபாணன் அப்பொழுதே என்னை அழித்திருக்கலாம். அழிக்க அவன் புத்தி வேலை செய்யவில்லை. உன்னைப் பிசாசாக்கி மலைவாசிகளைப் பயமுறுத்தி விரட்டி விட்டான். கோழைகள், சாமான்ய ஜனங்கள் என்று நினைத்தவர்கள் வீரர்கள் ஆனார்கள். இந்தத் தாபோல் மலையில் நடந்த விசித்திரங்களை ஆண்டவன் இருக்கிறான், அவனால் இந்த உலகம் அசைகிறது என்பதை நிரூபித்தன. நாம் அவன் ஆயுதங்கள். அவ்வளவுதான்" என்றான்.

சித்தரஞ்சனி மேற்கொண்டு பேசவில்லை. இந்த வேதாந்த விசாரத்துக்கு அவள் சித்தமாக இராததால், "அடுத்து ஆண்டவன் என்ன செய்யப் போகிறான்?" என்று வினவினாள்.

"கடமைக்கு நம்மைத் தூண்டி விடப்



போகிறான்'' என்று சதகர்ணி சொல்லிக் கொண்டிருக்கையில் திடீரென மணியைப் பெரிதாக அடித்தார் பூஜாரி.

பூஜாரி காட்டிய தீபாராதனையில் ஜொலித்த தாபிலேசுவரர் பிம்பத்தை வெளியிலிருந்தே தரிசித்துக் கைகூப்பிச் சிரம் தாழ்த்திய சாதவாகனன் ''ஈசுவரனை வணங்கு சித்தரஞ்சனி. அவனில்லாவிட்டால் இன்று நாமில்லை'' என்று கூற அவளும் வணங்கினாள். மீண்டும் பூஜாரி அடித்த கோவில்மணி மலைபகுதியெங்கும் ஊடுருவிச் சென்றதால் அதைத் தங்கள் வெற்றி மணியாகக் கருதி உள்ளம் பூரித்த சித்தரஞ்சனி, ''தாபிலேசுவரர் உங்கள் வெற்றிக்கு மணியோசை காட்டுகிறார்'' என்றாள்.

சாதவாகனன் முகத்தில் பரிபூர்ணமான சாந்தம் நிலவியது. ''எனது வெற்றியாவது? அவன் வெற்றிக்கு அவன் அடித்துக் கொள்கிறான் மணியை'' என்று சொன்னான்.

இதனால் எரிச்சல் கொண்ட சித்தரஞ்சனி, ''பூஜாரிதான் அடிக்கிறார் மணியை'' என்று

சாண்டில்யன்



கடுமையாகவே பேசினான்.

சாதவாகனன் கேட்டான்: ''பூஜாரியின் கை எப்படி ஆடுகிறது?'' என்று.

''இப்படிப் பேசினால் எனக்குக் கோபம் வரும்'' என்று சீறினாள் சித்தரஞ்சனி.

''கோபம் மனித பலவீனங்களில் ஒன்று'' என்று கூறிய சாதவாகனன் ரத்தக் கறை படிந்த தனது வாளை நோக்கி, ''சித்தரஞ்சனி! இதைக் கழுவிவிட்டு வருகிறேன்'' என்றான்.

''கவலைப்படாதீர்கள். தேவையானால் தாபிலேசுவரரே கழுவுவார்'' என்று சித்தரஞ்சனி சொல்லி ஏளன நகையும்கூட்டினாள். ''நீங்கள் இத்தனை பாசாங்குக்காரர் என்பது இன்றுவரை எனக்குத் தெரியாது'' என்று கூறினாள்.

பதிலுக்குப் புன்முறுவல் செய்த சாதவாகனன், ''சித்தரஞ்சனி! வெற்றி மமதையை அளிக்கக்கூடாது. அகங்காரம் மனிதனை அழித்துவிடும். இந்த வெற்றி நமக்குப் பணிவை அளிக்க வேண்டும். கடமையையும் உணர்த்த வேண்டும்'' என்றான். அடுத்து மலைவாசிகளைக் கொண்டு மலையைச் சுத்தம் செய்ய வேண்டும்'' என்று கூறிவிட்டு அப்பொழுது போரை முடித்துக் கொண்டு மலையேறி வந்த காஷ்டானனை நோக்கி, ''தளபதி! நிலைமை எப்படியிருக்கிறது?'' என்று வினவினான்.

''யவனன் படையில் பாதி அழிந்துவிட்டது. மீதிப் பேருடன் அவன் பின்வாங்குகிறான். நாகபாணன் படைகளில் முக்கால் வாசி நாசம்'' என்று அறிவித்தான் தளபதி.

''பின்வாங்கும் படையைத் துரத்த வேண்டாம். காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை ஏற்பாடாகட்டும். மறைந்த தலைவர்கள் சடலம் கிடைத்தால் எனக்குத் தெரியப்படுத்து'' என்று சாதவாகனன் கூறினான்.

''மறைந்த தலைவர்களா? அவர்களை நாம் ஏன் தேட வேண்டும்?'' என்று காஷ்டானன் கேட்டான்.

சாதவாகனன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். ''காஷ்டானா! நமக்கொரு கடமை இருக்கிறது'' என்று சொன்னான் துக்கம் தோய்ந்த குரலில்.

சாதவாகனன் துக்கத்தைக் காஷ்டானனும் கவனித்தான். சித்தரஞ்சனியும் கவனித்தாள். அதற்குக் காரணம் புரியாததால் இருவரும் சாதவாகனனை வியப்பு நிரம்பிய விழிகளால் நோக்கினார்கள். சாதவாகனன் மெதுவாகப் பேசினான்: ''காஷ்டானா! இந்தச் சித்தரஞ்சனியை வளர்த்து எனக்குக் கொடுத்தவர், எனது மாமனார். அவர் சடலத்தைக் கண்டு பிடி. அவருக்குக் கௌரவமான அடக்கம் செய்வது எனது கடமை''

இதைக் கேட்ட சித்தரஞ்சனியின் கண்களில் நீர் உதயமாகத் தொடங்கியது. ''எனது தந்தை.....'' என்று சொன்ன அவள் குரல் தழுதழுத்தது.

''வேல் பாய்ந்து விழுந்துவிட்டார். இல்லாவிட்டால் என்னை வெட்டியிருப்பார்'' என்றான் காஷ்டானன்.

அதற்குமேல் பேச்சை வளர்த்தாத சாதவாகனன், ''காஷ்டானா! க்ஷத்ரபர் விழுந்த இடத்துக்கு எங்களை அழைத்துச் செல்'' என்று கூறி, ''சித்தரஞ்சனி! நீயும் உடன் வா'' என்று சொல்லி, காஷ்டானன் முன் செல்ல அவனைப் பின்பற்றி நடந்தான்.

காஷ்டானன் தனது புரவியைத் தாபிலேசுவரர் கோவிலுக்கு முன்பே நிறுத்திவிட்டு மலைச்சரிவில் சென்றான். மலையில் பாதி தூரம் இறங்குவதற்கே குறுக்கே கிடந்த மனித சடலங்களின் காரணமாகவும் விழுந்து கிடந்த புரவிகளின் காரணமாகவும் மிகவும் கஷ்டமாயிருந்தாலும் அந்தத் தடைகளை நீக்க இரண்டு மூன்று வீரர்களை ஏவினான். அவர்களும் மெதுவாக வழி செய்து கொடுக்க, சாதவாகனன் சுற்றுமுற்றும் இருந்த நாசத்தைக் கவனித்ததால் சிறிது வருத்தமுற்றுப் பின்னால் நடந்து சென்றான்.

க்ஷத்ரபன் விழுந்த இடத்தைக் காஷ்டானன் திட்டமாக அறிந்திருந்ததால், அந்த இடத்திற்கு நேராக வந்து நின்று சிறிது சுற்றுமுற்றும் நோக்கினான். எந்த இடத்தில் க்ஷத்ரபன் விழுந்தானோ அந்த இடத்தில் அவன் சடலத்தைக் காணாததால் வியப்புடன் சுற்றுமுற்றும் தேட ஆரம்பித்தான். அந்த இடத்தை ஆராய்ந்த சாதவாகனன் மலைப் பாறையில் ரத்தக் கறை கோடிட்டதுபோல் போகவே அந்த அடையாளத்தைப் பின்பற்றிச் சென்றான். எட்ட இருந்த புதருக்கருகில் புஸ்புஸ் என்று ஏதோ சத்தம் கேட்கவே அங்கு சென்று புதரை விலக்கிப் பார்த்த சாதவாகனன், மார்பில் பாய்ந்த வேலுடன் ரத்த வெள்ளத்தில் பெருமூச்சு விட்டுக் கொண்டு க்ஷத்ரபன் மரணாவஸ்தையில் இருப்பதைப் பார்த்து அவனருகில் உட்கார்ந்து அவன் உயிர் பிரியவில்லையென்பதால் சிகிச்சை செய்ய முடியுமா என்று பார்த்தான். அப்பொழுது க்ஷத்ரபன் உதடுகள் ''சித்தரஞ்சனி'' என்ற சொல்லை உதிர்த்தது மிகவும் பலவீனமாக.

சாதவாகனனுக்குப் பின்னால் உட்கார்ந்திருந்த சித்தரஞ்சனி தந்தையின் அருகில்

ஒருவர்: ''என் பையன் வக்கீலானதுக்கு அப்புறம் முதன் முதலா என் மேலேதான் கேஸ் போட்டிருக்கான்!''

நண்பர்: ''ஏன்?''

முதல் ஆசாமி: ''எதுக்கு என்னை வக்கீலுக்கு படிக்க வச்சீங்க! ஒரு கேஸ்கூட வர மாட்டேங்குதேன்னுதான்!''

— எஸ். முகம்மது யூசுப்





அருள் வாக்கு

இன்ஸ்டிட்யூஷன் (ஸ்தாபனம்) என்று பல பேர் சேர்கிறபோது அது கலந்தாங் கட்டியாகத்தானிருக்கும்; அப்படியிருந்தாலும் அது இன்டிவிஜுவலிடம் (தனி மனிதனிடம்) தெரிவது போல தோஷமாகத் தெரியாது. தனியாக ஏதாவது ஒரு பூவை மட்டும் வைத்து மாலை கட்டினால் அதிலே நடுவிலே எங்கேயாவது ஒரு தழை, அல்லது துர்நாற்றமெடுக்கும் துருக்க ஜாமந்திப் பூ மாதிரி ஒன்றே ஒன்று சேர்ந்திருந்தால்கூட உடனே காட்டிக் கொடுத்துவிடும்; அதைத் தூக்கிப் போட்டுவிடுவோம். இதுவே பலவித புஷ்பங்களும் சேர்ந்த கதம்ப மாலையாக இருந்தால் அதிலே இந்த வாஸனைப் புஷ்பங்களுக்கு ஸமமாகத் தழையும் துருக்க ஜாமந்தியும் இருந்தாலும் தெரியாது. கத்திரிக்காய் ஒரே விதையாயிருக்கிறது. அவரைக்காய் ஒரே முற்றலாயிருக்கிறது என்றால், "தனியாகச் சமைக்க வேண்டாம்; அவியலிலே போட்டுவிடுங்கள்" என்பார்கள். தனியாக ஒரு பண்டமிருந்து அது கொஞ்சம் மூளியாகிவிட்டால்கூட ப்ரயோஜனமில்லையென்று தூக்கிப் போட்டுவிடுகிறோம். ஆனால் இந்த மாதிரி ஓட்டை உடைசல், கண்ணாடிச் சில்லுகள், வீணாய்ப் போன ப்ளாஸ்டிக் துண்டுகள், துணிக் கிழிசல்கள் முதலியவற்றை வைத்தே கண்ணைக் கவருகிற மாதிரி டிஸைன்கள், பொம்மைத்தேர் முதலானதுகள்கூடப் பண்ணுவதாக அவ்வப்போது பேப்பரில் பார்க்கிறோமல்லவா?

இப்படித்தான் நம்மிலும் ஆகாதது போகாததுகளை எல்லாம் வைத்தே ஆர்கனைஸேஷன், இன்ஸ்டிட்யூஷன் என்று ஏற்படுத்தி ப்ரமிக்கப் பண்ணிவிடலாம். நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை— உங்களுக்கே தெரியும். இப்போது பிரமாதமாக எத்தனையோ ஸங்கங்கள் இருக்கின்றனவே. அவற்றிலே தனியாக ஆள் ஆளாக எடுத்துப் பார்த்தால் எத்தனை பேரைச் சுத்தம் என்று சொல்ல முடியும் என்பது சந்தேகம்தான். பலபேர் சேர்ந்து இருக்கும்போது தோஷங்களைப் பூசி மெழுகி விட முடியும்.

பசங்களுக்குப் புத்தி மட்டும் வளர வேண்டுமென்றில்லாமல் காரெக்டரும் (குண நலனும்) வளரணும் என்றால் அது சுத்தமான இன்டிவிஜுவல் குருமார்களால் நடக்கிற அளவுக்கு இன்ஸ்டிட்யூஷனால் ஒருநாளும் முடியாது. இன்ஸ்டிட்யூஷனில் அறிவைத்தான் பரீக்ஷித்து வளர்க்க முடியும். குணத்தை முடியாது. சிஷ்யனைக் கூடவே வைத்துக் கொண்டு அவனைப் பணிவிடை செய்ய வைத்து, அவனுக்கு ஆஹாரம் போட்டு வளர்க்கும்போதுதான் கூடவே குணத்தையும் வளர்க்க முடியும். இன்று குருகுலவாசம் என்று கருதும்படி அபூர்வமாகச் சில கல்விக்கூடங்களே அமைகின்றன. அப்படி அமையாத நிலையில் பெற்றோர்கள்தான் அந்தப் பொறுப்பை ஏற்று குழந்தைகளின் குண நலன்களைக் கவனமாக வளர்க்க வேண்டும்.

—ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

உட்கார்ந்து அவன் காதில் "அப்பா!" என்றான்.

க்ஷத்ரபன் மெதுவாகக் கண்களை விழித்தான். மார்பிலிருந்த வேலைக் காட்டி, "இன்னும் சில நிமிடங்கள்தான், சித்தரஞ்சனி!" என்று அவள் கையைப் பற்றிக் கொண்டான். பிறகு கௌதமிபுத்ரனைப் பார்த்து, "என் சித்தரஞ்சனிக்குத் தகுந்தவன்" என்று முனகினான். "என்னை......" என்று ஏதோ சொன்னான்.

"என்ன செய்ய வேண்டும்? எதுவாயிருந்தாலும் செய்கிறேன்" என்றான் சாதவாகனன்.

க்ஷத்ரபன் கோட்டைப் பக்கம் விழித்தான். "அங்கு அடக்கம்...." என்றவன் மேற்கொண்டு பேசவில்லை. அவன் உடல் ஒரு முறை நடுங்கி நின்றுவிட்டது. சித்தரஞ்சனியின் கண்கள் நீரால் மங்கின, உதடுகள் துடித்தன. வேலை நீக்கினான் சாதவாகனன்.

"காஷ்டானா! இவரிஷ்டப்படி இவரைக் கோட்டையில் புதைத்துவிடு: நீயும் சித்தரஞ்சனியும் போய்ச் சடலத்தை அடக்கம் செய்து வாருங்கள்" என்று கூறிவிட்டு எழுந்தான்.

அன்று பிற்பகல் கோட்டையில் நின்றுதாபோல் மலையைக் கவனித்துக் கொண்டிருந்த நாகபாணன் சித்தரஞ்சனியும் காஷ்டானனும் ஒரு படகில் வந்து இறங்கியதையும், அதிலிருந்த ஒரு சடலத்தை நான்கு வீரர்கள் சுமந்து வந்ததையும் கவனித்து வியப்பின் எல்லையை எய்தினான். "சித்தரஞ்சனியைத் தனியாக அனுப்பச் சாதவாகனனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு படகுத் துறைக்கு விரைந்தான்.

நன்றாகப் போர்த்தப்பட்ட சடலத்தை நான்கு வீரர் தாங்கி வர அதற்கு முன்னால் வந்த சித்தரஞ்சனியையும் காஷ்டானனையும் நெருங்கி வந்து நின்றான்.

"விலகி நில்" என்று அதிகார தோரணையில் காஷ்டானன் நாகபாணனுக்குச் சைகை காட்டினான். நாகபாணன் நகரவில்லை!

(தொடரும்)



பருவத்தின் எல்லையில் என் பாசத்துக்குரிய மகள். சங்கடமான இந்தக் காலகட்டத்தில் அந்த இளம் உள்ளம் படும் வேதனை, தாயாகிய எனக்குத் புரியும்.

"என் மகளுக்கு கேர்ஃப்ரீ வாங்கித் தர நான் முடிவு செய்தது ஏனென்றால்"

ஒரு சிறுமியின் வாழ்க்கையில் அவள் வயதுக்கு வரும் காலகட்டம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். பயமும், வெட்கமும், தவிப்பும் நிறைந்து, உடலளவில் மட்டுமின்றி மனத்தளவிலும் அவள் பாதிக்கப்படும் நேரமும் அதுதான்.

நான் ஒரு தாய். இந்தக் காலகட்டத்தை அனுபவித்தவள். அதன் சிரமங்களை நன்கு உணர்ந்தவள். குறிப்பிட்ட அந்த ஐந்து நாட்களும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்படும் சங்கடமும் தொல்லையும் எனக்கு நன்றாகவே தெரியும்.

இத்தனை வருடங்களாக, சானிடரி பாது காப்புக்குத் தேவையானதை நான் வீட்டிலேயேதான் தயாரித்துக் கொள்வேன். அது மிகவும் தர்மசங்கடமான வேலைதான்!

மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்காக நன்றாகத் துவைத்து, காயப்போட்டு... போதும் போதும் என்றாகி விடும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்குக் கூட நமது 5 நாள் பிரச்னை விளம்பரப்படுத்தப்பட்டு விடும். இத்தனை அவஸ்தைப் பட்டாலும்,

நமக்குத் தேவையான சானிடரி பாதுகாப்பு கிடைக்குமா என்பதும் நிச்சயமில்லை. அது மட்டுமல்ல; எப்போது எந்த அசம்பாவிதம் நடந்து அவமானப்பட வேண்டி வருமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இதிலெல்லாம் ஓரளவு பழக்கப்பட்டுவிட்டேன் என்றே சொல்லலாம். தவிர, அந்தக் காலத்தில் சங்கடமான அந்த 5 நாட்களில் பெண்கள் வெளியே போவது என்கிற வழக்கமெல்லாம் அறவே கிடையாது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது... பெண்கள் மாதத்தின் அந்த 5 நாட்களில்கூட துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இப்போது கேர்ஃப்ரீ போன்ற நவீன சானிடரி பாதுகாப்பு கிடைக்கும் இந்த நாளில், என் மகளும் நான் இளம் பெண்ணாக இருந்ததைப் போலவே ஏன் வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கவேண்டும். நான் வளர்ந்த காலம் வேறு. என் மகள் வளரும் சூழ்நிலை வேறு. இன்றைய சிறுமிகள் மாதத்தின் அந்த 5 நாட்களில் கூட துடிதுடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

என் மகளைப் பாருங்களேன். அவள், நான் இளம் பெண்ணாக இருந்த காலத்தில் செயல்பட்டதைவிட மிக...மிக சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டியிருக்கிறது...படிப்பு விஷயத்திலும் சரி, இதர வேலைகளிலும் சரி. நாங்கள் இருந்ததைப் போல என் மகளையும் வீட்டிற்குள் முடக்கிப்போட நான் விரும்பவில்லை.

அதனால்தான் நான் கேர்ஃப்ரீயைத் தேர்ந்தெடுத்தேன். என் மகளின் துடிப்புக்கும் துள்ளலுக்கும், ஆட்டத்துக்கும் ஓட்டத்துக்கும் ஈடு கொடுக்கும் இணைபிரியாத் தோழி கேர்ஃப்ரீ.

முக்கியமான அம்சம் என்னவென்றால் கேர்ஃப்ரீ ஒரு ரெடிமேட் நாப்கின். துணியையும் பஞ்சையும் வைத்து மடித்து, நேரத்தை வீணாக்கும் தொல்லை கிடையாது.

நான் அந்தக் காலத்தில் செய்தது போல என் மகள் துவைத்து, காயப் போட்டு, சங்கடப்பட வேண்டியதில்லை. தேவையான நேரத்திலே சட்டென்று புத்தம் புதுசாக, சுத்தமான ஒரு நாப்கினை எடுத்து அவள் உபயோகிக்கலாம்.

ஒரு விஷயத்தை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். முதலில் எனக்கு இத்தகைய ரெடிமேட் நாப்கின்மீது கொஞ்சம் அவநம்பிக்கை இருக்கவே செய்தது. ஆனால், இப்போது என் மகள் மாசாமாசம் கேர்ஃப்ரீ பயன்படுத்தி மகிழ்ச்சியோடு இருப்பதைப் பார்த்ததும் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. தேவையான சானிடரி பாதுகாப்புக்கும், அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் தடுக்கவும் சானிடரி நாப்கின் பெரிதாக, கனமாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணி வந்தது தவறு என்பது இப்போது விளங்குகிறது.

கேர்ஃப்ரீ உபயோகிப்பதால் சுகமாகவும் பாதுகாப்பாகவும் உணர்வதாக என் மகளே சொல்கிறாள். பயமின்றி, கவலையின்றி வெளியே சுற்றவும் முடிகிறது என்றும் கூறுகிறாள். அப்பாடா! எனக்கு ஒரு கவலை விட்டது.

கேர்ஃப்ரீ பயன்படுத்துவதில் சிரமமோ சிக்கலோ எதுவுமே கிடையாது. இதனாலேயே என் மகளுக்கு எந்த விதமான பிரச்னையும் இல்லை. அதைக் குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்.

எனக்குக் கிடைக்காத ஒரு சுதந்திரமும் பாதுகாப்பும் கேர்ஃப்ரீ மூலம் என் மகளுக்குக் கிடைத்திருப்பதைப் பார்த்துப் பூரிப்படைகிறேன். ஒரு பெண்தான்—அதுவும் ஒரு அன்னைதான்—என்னுடைய மன உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

காலத்தோடு நாமும் மாறியாக வேண்டும். அதுவும் நமக்கு அதிக சுதந்திரமும் பாதுகாப்பும் தருகிற கேர்ஃப்ரீ வடிவிலே அந்த மாற்றம் இருக்குமானால், அதை நாம் வேண்டாம் என்று ஒதுக்குவானேன்?



கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின்கள்— பூரண சுகம், பரிபூரண பாதுகாப்பு —மாறுகின்ற காலத்துக்கேற்ற மகத்தான வசதி.

Johnson & Johnson

OBM/6746/R/TAM

“ராஜா உன் நாயைச்

> “அப்படிச் சொல்லாதீங்க! எப்படியாவது என் நாயைத் தந்திடுங்க. அது இல்லாம என்னால இருக்க முடியாது!”
>
> மணி அந்த வண்டிக் கூண்டில் தவித்தது. ராஜா வெளியே தவித்தான். வண்டிக்காரன் அசையவில்லை.

டவுன் முழுவதையும் ஓர் அலசு அலசி விட்டு, கிடைத்ததைத் தூக்கிப் போட்டுக் கொண்டு, ஒரு வீதியின் உள்ளே அந்த நாய் வண்டியை இழுத்துக் கொண்டே போறான் அவன். அந்த வீதி டவுனுக்கு அருகில்தான் இருக்கிறது. ஆனால் டவுன் வீதிக்கும் அந்த வீதிக்கும் ஒரே ஒரு வித்தியாசம் உண்டு. இரவு நேரத்தில் பார்த்தால் டவுன் வீதிகளில் மெர்க்குரி பல்புகள் வெளிச்சத்தை அள்ளி வீசும். ஆனால் இந்த வீதியிலோ லைட் தூண்களில்உள்ள பல்புகள் லாந்தர்விளக்கை விட மோசமாகத்தான் 'மினுக்' போட்டு எரியும். மற்றபடி இங்கே இருக்கிற மனிதர்கள்தான் அங்கேயும் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் இந்த வீதிகளில் ஆடு, மாடு, நாய், பூனை, பன்றி ஆகியவை திரிவதைப் போல் டவுன் வீதிகளிலும் ஆடு, மாடு, நாய், பூனை, பன்றி எல்லாம் திரிகின்றன.

இதுவரை டவுன் பகுதியில் நாலே நாலு நாய்களைத்தான் அவனால் பிடிக்க முடிந்தது. இன்று எப்படியும் பத்து நாய்களைப் பிடிக்க வேண்டும். நாய் வண்டி சத்தம் போட்டுக் கொண்டே மெல்ல நகர்ந்தது. அவன் கூடுமானவரை சத்தத்தைக் குறைக்க முன்றான். அதில் அவன் கவனம் செலுத்தாவிட்டால் அந்த வீதியில் 'தட' 'தட' வென்ற சத்தம் எதிரொலிக்கும்! அந்தச் சத்தத்தைக் கேட்டு நாய்கள் ஓடி ஒளிந்துவிடும். அதனால்தான் ஒரு லாகவத்தோடு சத்தமில்லாமல் வண்டியைச் செலுத்தினான். அவனுடைய தோள் பட்டையில் எமனுடைய கையில் இருப்பதாகச் சொல்வார்களே, அதுபோல ஒரு கயிறு இருந்தது. காலில் செருப்பே யில்லை. வாயில் வெற்றிலை நிறைய இருந்தது. வழி நெடுகப் பாதை காட்டுவது போல் அந்த வெற்றிலையை மென்று துப்பிக் கொண்டே வந்தான்.

அவனுடைய கண்கள் வீதியின் இரு பக்கமும் சுற்றிச் சுற்றிப் பார்த்தன. சக்கரம் போல் இங்கும் அங்கும் சுழன்றன. லைசென்ஸ் இல்லாமல் அலையும் நாய்களைத் தேடின!

மாத்தளை சோமு

சிறிது தூரம் சென்றதும் அவன் நெற்றியில் உதிர்ந்த வியர்வைத் துளி களைக் கையால் துடைத்து வீசிவிட்டு வண்டியை நிறுத்திவிட்டு, வீதியோரத்தில் கிடந்த ஒரு கல்லின் மீது உட்கார்ந்தான். சட்டைப் பொத்தான்களைக் கழற்றிவிட்டு உள்ளே வாயால் காற்றை 'பூ' 'பூ' வென்று ஊதினான். உள்ளே போன காற்று நெஞ்சோடு ஒட்டிக் கிடந்த சட்டையைப் பிரித்துவிட்டது. சரியான வெய்யில்.... சட்டையைக் கழற்றி வண்டியின் ஒரு மூலையில் செருகினான்.

பத்து நிமிடம் ஓய்வெடுத்த அவன், தூரத்தில் ஒரு நாய் நிற்பதைக் கண்டதும் கயிற்றைப் பின் பக்கம் மறைத்துக் கொண்டு மெதுவாக அதனருகே போனான். நாய் அப்படியே நின்றது. அதற்கு என்ன தெரியும்? நாய் வண்டிக்காரன் அந்த நாயின் அருகே போய்க் கயிற்றை எடுத்து ஒரு 'சுருக்'குப் போட்டு



பிடிச்சிட்டுப் போறாங்க!

ஒரு வீசு வீசினான். சுருக்கு டக்'கென்று நாயின் கழுத்தில் விழுந்து கழுத்தைச் சுற்றி யது. எல்லாம் கண் இமைக்கும் பொழுதில் நடந்தது. நாய் தப்புவதற்காகத் தன் தலையை ஆட்டி அசைத்தது. சுருக்கு இன்னும் இறுகியது தான் மிச்சம். அதனால் தப்பவே முடியவில்லை. தப்பவே முடியாது. எமனிடமிருந்து கூடத் தப்பலாம்! இவனிடமா தப்ப முடியும்?

நாய் பயங்கரமாய்ச் சத்தம் போட்டது. கேட்கவே பாவமாக இருந்தது. பாதையில் போன சில பெரிய மனிதர்கள், ஜீவகாருண்ய புருஷர்கள், 'வாயில்லாப் பிராணியைப் பிடிச்சுக்கொல்கிறானே' என்று முணுமுணுத் தார்கள். ஆனால் உண்மையில் அவனா கொல்கிறான்? லைசென்ஸ் இல்லாமல் திரியும் நாய்களைப் பிடித்துச் சட்டம் அல்லவா கொல் கிறது? அவன் அவற்றைப் பிடித்துக் கொடுக் கின்றான். அப்படிக் கொடுத்தால்தான் அவனைக் கொல்லும் பசியிடமிருந்து அவன் தப்பலாம். பிடித்துத் தரும் நாய்களின் எண் ணிக்கைக்கு ஏற்பத்தான் காசு. ஒரு நாளில் குறைந்தபட்சம ஆறு நாய்களையாவது பிடித் தால்தான் கூலி தருவார்கள்.


இந்தப் பகுதியில் அரை மைலுக்கு மேல் வண்டியைத் தள்ளிக் கொண்டு வந்தாயிற்று! ஆனால் ஒரு நாய்க்கு மேலே கிடைக்கவே யில்லை. டவுனில் பிடித்த நாலும் இப்போது பிடித்த ஒன்றுமாக ஐந்து நாய்கள் உள்ளே கிடந்தன. ஆனால் வேறு ஒரு நாயாவது கண் ணில்பட வேண்டுமே!ம்....ஒன்றுகூட இல்லை. புத்திசாலி நாய்கள் வண்டியைக் கண்டதுமே மறைந்துவிட்டன போலும். வண்டி நகர நகர வண்டிக்குள்ளே கிடந்த நாய்கள் சத்தம் போட ஆரம்பித்தன.

வண்டியை நிறுத்திய அவன் வண்டியில் சொருகியிருந்த ஒரு தடியை எடுத்து வண்டி யின் தரையில் ஓங்கி அடித்து நாய்களை அதட்டினான். வண்டியின் பின்னால் கூட யிருந்த வாண்டுக் கூட்டம் கைதட்டியது. வண்டி மீண்டும் நகர்ந்தது. சற்று தூரத்தில் அழகான நாய் ஒன்று நின்றது. அதன் வால் விசிறியைப் போல் அசைந்தது. வண்டிக் காரன் மெதுவாக அதன் பின்னால் போய் ஒரே ஒரு சுருக்குப் போட்டு அதைப் பிடித்



அடுத்த இதழில்.......

அதிவேக ரயில் திட்டம் அம்போதானா?



சென்னையில் அதிவேக ரயில் திட்டத்துக்குப்பிள்ளையார்சுழிகூடமுழுவதுமாகப் போட்டு முடியவில்லை! சமீபத்திய பட்ஜெட்டிலும் போதிய அளவு பணம் ஒதுக்கப்படவில்லை. "தமிழக அரசு பணம் தரும். ஏற்று நடத்துங்கள்" என்கிறார் அமைச்சர் வீரப்பன். சாத்தியமான காரியமா இது? என்னதான் முடிவு?

COVER STORY

தான். நாய் தடுமாறியது. அசைந்தது. குதித்தது. கயிறு மேலும் இறுகியது. நாயால் ஒன்றும் செய்ய முடியவில்லை. வண்டிக்காரன் அதைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு வண்டியருகே போய் வண்டியின் உள்ளே தள்ளினான். பிறகு ஏதோ செய்து கயிற்றைக் கழற்றிவிட்டான். அழகான அந்த நாய் இப்போது உள்ளே. அது மட்டுமா? மொத்தம் ஆறு நாய். ஆறு பிடித்தால் போதும். கூலி வாங்கிவிடலாம். சாப்பாட்டுக்கு வழியாயிற்று.

வண்டி நகர்வதற்குள் அதற்குப் பின்னால் நின்ற வாண்டுக் கூட்டத்தில் இருந்த வாண்டுப் பையன் ஒருவன் கடைசியாகப் பிடித்துப் போட்ட நாயை அடையாளம் கண்டு கொண்டு ஓடினான். "ராஜா! உன் நாயைப் பிடிச்சுக்கிட்டுப் போறாங்க...."

வீட்டில் படித்துக் கொண்டிருந்த ராஜா ரோட்டுக்கு ஓடி வந்தான். வண்டியின் உள்ளே சொறி பிடித்த நாய்களுடன் அவன் ஆசையாக வளர்த்த நாய் அடைத்து வைக்கப்பட்டிருந்தது. அவனுக்கு இதயமே வெடித்துவிடும் போலிருந்தது. கண்ணில் நீர் முட்டியது. மணி சின்ன குட்டியாக இருந்த காலத்தில் இருந்து அவன் அதை வளர்த்து வருகிறான். அதைப் பிரிய அவனால் முடியாது. படுக்கும்போதுகூட அதைப் பக்கத்தில் போட்டுக் கொண்டுதான் படுப்பான். அவ்வளவு பிரியம் அதன் மேல் அவனுக்கு. வண்டிக்காரனிடம் போய்க் கெஞ்சினான்.

"ஐயா! இப்ப புடிச்சது என் நாய். அதைக் கொடுத்திடுங்க!"

"இப்ப புடிச்சது உன் நாயா? ஏன் லைசென்ஸ் வாங்கல்ல? லைசென்ஸ் வாங்கல் லேன்னாலும் ஏன் கட்டிப் போடல்ல...? நாயைத் திருப்பித் தர முடியாது."

ராஜாவுக்கு வியப்பாக இருந்தது. நாய்க்கு லைசென்ஸ் வேண்டுமா? என்ன லைசென்ஸ்? அவனுக்கும் அதற்கும் பாசம் இருக்கிறதே! அதற்கு லைசென்ஸ் இல்லையே!

"அப்படிச் சொல்லாதீங்க! எப்படியாவது என் நாயைத் தந்திடுங்க. அது இல்லாம என்னாலே இருக்க முடியாது!"

மணி அந்த வண்டிக் கூண்டில் தவித்தது. ராஜா வெளியே தவித்தான். வண்டிக்காரன் அசையவில்லை. கஷ்டப்பட்டுப் பிடித்ததே ஆறு. அதில் ஒன்று போனால் ஐந்துதான்.

"அதெல்லாம் தர முடியாது தம்பி. இது பெரிய இடத்து சங்கதி! முனிசிபாலிடிலே வந்து கேக்கணும். நிறைய தண்டம் போடுவாங்க. அதைக் கட்டியெடுக்கிறதுக்குப் பதிலா, வேறே நாய் வளர்க்கலாமே!" வண்டிக்காரன் புத்திமதி சொன்னான்.

மணியைப் பறி கொடுத்துவிட்டு வேறு நாய் வளர்க்க வேண்டுமா? அவனால் முடியவே முடியாது. எத்தனை நாய் வளர்த்தாலும் மணி போல் வருமா? ராஜா விடாமல் கெஞ்சிக் கொண்டே போனான்.

வண்டிக்காரனோ, "தம்பி! நான் சொன்னபடி வேறே நாயை வாங்கி வளர்க்கிற வழியைப் பாரு. குறைந்தது ஆறு நாயாவது பிடிச்சாத்தான் எனக்குக் கூலி குடுப்பாங்க. என் வயிறு நிறையத்தானே நானும் பாடுபடறேன்" என்றான்.

பேசிக் கொண்டே வந்தவன் ஓரிடத்தில் வண்டியை நிறுத்தினான். ராஜா நினைத்தான், மணியைத்தான் எடுத்துத் தரப் போகின்றான் என்று. ஆனால் இவனோ இன்னும் ஒரு நாயைப் பிடிக்கக் கயிற்றை வீசினான். அட! வீசியே விட்டான்!

ராஜாவுக்குப் பயமாக இருந்தது. இப்படித்தான் மணியையும் பிடித்திருப்பானோ என்ற எண்ணம் அவன் மனத்தில் ஓடியது. அந்த எண்ணத்துடன் பிடிபட்ட புதிய நாயைப் பார்த்தான். நாய் வண்டியின் உள்ளே போய் விட்டது. உள்ளே போவதற்கு முன்னர் அது எப்படியெல்லாம் போராடியது!

நாயின் கழுத்திலிருந்து கயிற்றைக் கழற்றிச் சுருட்டியபடி திரும்பினான் வண்டிக்காரன். ராஜாவின் கலங்கிய கண்களும், ஏங்கிய பார்வையும் அவனுள் ஒரு சலனத்தை ஏற்படுத்தின. நாலாவது படிக்கும் தன் மகனை நினைவுபடுத்தின. 'இந்தப் பயலுக்குத்தான் அந்த நாய் மேல் எவ்வளவு பாசம்! விடாமல் தொடர்ந்து வரானே' என்று நினைத்துக் கொண்டே வண்டியைக் கிளப்பினான். ராஜா

தலைவலி பலவகை உண்டு சிகிச்சை ஒன்றே ஒன்று!



சக்தி வாய்ந்த, நம்பகமான

அனஸின்

உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி-நிவாரணி மருந்து, மிக அதிக அளவில் கொண்டது அனஸின். எனவே தலைவலியில் இருந்து துரித நிவாரணம் பெற அனஸின் ஒன்றே போதும்.

தலைவலியைத் தவிரவும், ஜலதோஷம், ஃப்ளூ, முதுகு வலி, தசை வலி மற்றும் பல் வலி ஆகியவற்றிற்கு நல்ல பலனளிக்கிறது.

பாதுகாப்பான
ஃபாயில் உறையில்



சொல்லப்போனால் டாக்டரின் மருந்துதான்

அனஸின்

இந்தியாவின் நம்பர் 1 வலிநிவாரணி மருந்து



கல்லூரியில் கடைசி நாட்கள்

போட்டி. 47

பள்ளி அல்லது கல்லூரியில் கடைசி நாட்களில் பலவிதமான மனநிலைகளில் இருப்போம். நல்ல படியாகப் பரீட்சை எழுத வேண்டுமே என்ற பயம்; எதிர்காலம் பற்றிய கவலை; இத்தனை காலம் பழகிய நண்பர்களையும் ஆசிரியர்களையும் விட்டுப் பிரிய வேண்டுமே என்ற துயரம்; அதே சமயம் கோபிக்க மாட்டார்கள் என்ற தைரியத்தில் அவர்களைக் கிண்டல் செய்யக் கிடைத்த வாய்ப்பில் ஒரு மகிழ்ச்சி! கல்லூரியில் அல்லது பள்ளியில் உங்கள் கடைசி நாட்கள் எப்படி இருந்தன? மறக்க முடியாத சம்பவம் ஒன்றினைக் கீழே வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப் பக்கத்தை முழுவதுமாகக் கத்தரித்து அனுப்பும்போது உறை மீது ''கல்லூரியில் கடைசி நாட்கள்'' என்று அவசியம் குறிப்பிடவும். பிரசுரமானால் பரிசு. தவிர ஒருவருக்குக் குலுக்கல் முறையில் வி.ஐ.பி. ஸூட்கேஸ்.

முடிவு தேதி: 7.4.86

நினைவிருக்கட்டும். இன்னும் ஆறு வி.ஐ.பி. ஸூட்கேஸ்களே பாக்கி. ஆறு வாய்ப்புகளில் ஒன்றைக்கூட நழுவ விடாமல் போட்டிகளில் பங்கு பெறுங்கள்.

என் பெயர்: ....

விலாசம்: ....

....

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

விடமிருந்து வெளிப்பட்ட ஒரு பெரிய விம்மல் அவனை அடுத்த அடி எடுத்து வைக்க விடாமல் தடுத்தது. வண்டிக்காரனின் மனம் இளகியே விட்டது.

''அழுவாதே தம்பி, உன் நாயைத் தந்துடறேன். இப்பத்தான் ஏழாவதா ஒரு நாய் கிடைச்சுடுச்சே'' என்றவாறு வண்டிக் கதவில் கை வைத்தான்.

ராஜாவுக்கு அப்படியே அவனைக் கட்டிக்கொண்டு கூத்தாட வேண்டும் போல் இருந்தது. ''ரொம்ப நன்றி ஐயா, நான் இந்த உதவியை மறக்கவே மாட்....'' ராஜா முடிப்பதற்குள், யாரோ கை தட்டிக் கூப்பிடும் சத்தம் கேட்டது.

வேட்டி கட்டிய ஒருவன் வண்டியை நோக்கி ஓடி வந்தான். அவன் பின்னால் மேலும் இருவர் வந்தார்கள். ஒருத்தன் தொந்தி வயிறுடன் இருந்தான். மற்றவன் அவன் மகன்போல் தோன்றினான்.

வேட்டிக்காரன் பேசினான். பேசினான் என்பதை விடச் சத்தம் போட்டான் என்றே சொல்ல வேண்டும். ''என்னப்பா, ஊர்லே உள்ள நாய்களைப் புடிக்கிறேன்னு இவரு வீட்டு நாயைப் புடிச்சுகிட்டியே! இவரு யார் தெரியுமா? இவருதான் முன்னம் இந்த முனிசிபல் வார்டு மெம்பர்!''

வண்டிக்காரன் அவரை உற்றுப் பார்த்தான். தொந்தி வயிறு உள்ளவர் முன்னர் முனிசிபல் வார்டு மெம்பராக இருந்திருக்கலாம். இருந்தாலும்.... தயங்கினான்.

வேட்டிக்காரன் மேலும் கத்தினான். ''ஏம்பா, பார்த்துக்கிட்டு இருக்கே. இவரு நினைச்சாருன்னா இன்னும் ஆயிரம் நாயை வாங்கி வளர்க்கலாம். ஆனா இது பழகின நாய். அதனால்தான் கேக்கிறாரு. பேசாம கொடுத்திடு. இவர் யாருன்னு தெரியும் தானே!''

வண்டிக்காரன் நடுங்கினான். பதிலே பேசாமல் கடைசியாகப் பிடித்த நாயை வெளியே விட்டான். அது வாலை ஆட்டிக் கொண்டே தொந்தி வயிறு உள்ளவரிடம் சென்றது. நாயைத் தரமுடியாது என்று மறுத்துப் பேச அவனால் முடியவில்லை. மறுத்துப் பேசினால் வீண் பொல்லாப்புத்தான் வரும். நாய் பிடிக்கும் வேலையே போனாலும் போய்விடும். நாய் சாதாரண நாயில்லையே! பெரிய இடத்து நாய்!

திரும்பி வண்டியை இழுக்க முற்பட்டவனின் கண்களில் ராஜா தென்பட்டான். அந்தச் சிறுவனின் கண்களில் பொங்கிய எதிர்பார்ப்பைச் சந்திக்க அவனால் முடியவில்லை. மனசைக் கல்லாக்கிக் கொண்டான். ''போயிடு தம்பி, உன் நாயை இப்பத் தர முடியாது'' என்று கருக்கமாகச் சொல்லிவிட்டு வண்டியை இழுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

ஆறு நாய்களைச் சுமந்து கொண்டு, ஏகமாக ஓசை எழுப்பியபடி, அன்றைய கூலியைப் பெற்றுத் தரும் இலக்கை நோக்கி உருண்டது வண்டி. மனசில் பொங்கி எழுந்த நம்பிக்கையும் நப்பாசையும் நொறுங்கிப் போய், கண்ணீர் மல்க நின்றான் ராஜா.

புதுவை அரசு
கல்வித் துறை

**புதுவை மகாகவி பாரதி/பாவேந்தர் பாரதிதாசன்
நினைவு அருங்காட்சியகங்கள் — ஆய்வு மையங்களில்
மகாகவி மற்றும் பாவேந்தர் நினைவுகளைப்
பாதுகாத்திட உதவுங்கள்.**

மகாகவி பாரதி/பாவேந்தர் பாரதிதாசன் வாழ்ந்த இல்லங்கள் புதுவை அரசினால் அருங்காட்சியகங்கள் மற்றும் ஆய்வு மையங்களாக மாற்றி அமைக்கப் பட்டுள்ளன. ஆய்வாளர்களுக்குத் தேவையான ஆதார நூல்கள், ஆவணங்கள் ஆகியவற்றைச் சேகரிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாகப் புதுவை அரசு இவ்விரு பெருங்கவிஞர்கள் தொடர்பான கீழ்க்கண்ட வகை இனங்களை நன்கொடையாகவோ (அல்லது) விலைக்கோ வாங்கக் கருதியுள்ளது.

1. மகாகவி/பாவேந்தர் பாரதிதாசனின்கையெழுத்துப்படிவங்கள்/அறிக்கைகள்.
2. கவிஞர்கள் பதிப்பித்து வெளியிட்ட நூல்கள் மூலம் (அல்லது) சிராக்ஸ் பிரதி.
3. கவிஞர்கள் பொறுப்பேற்று நடத்திய இதழ்கள்.
4. கவிஞர்கள் எழுதிய மடல்கள்.
5. ஆவணங்கள்.
6. கவிஞர்கள் பயன்படுத்திய பொருட்கள்.
7. பாரதி/பாரதிதாசன் புகைப்படங்கள்/வண்ணப்படங்கள்.
8. நண்பர்கள்/குடும்பத்தினர் புகைப்படங்கள்.
9. மைக்ரோ பிலிம்கள்/நெகடிவ்கள்.
10. கவிஞர்கள், பாடல்கள் இடம்பெற்ற திரை இசைத்தட்டுகள்/இசைத்தட்டு கள்/ஒலிப்பதிவு நாடாக்கள்.
11. வானொலி, பொதுக்கூட்டங்களில் கவிஞர்கள் ஆற்றிய உரை அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்கள்.
12. பாவேந்தர், திரைக்கதை, வசனம் எழுதிய திரைப்படங்கள்.
13. பாரதியார்/பாரதிதாசனர் தொடர்பான பல்கலைக் கழக ஆய்வுக் கட்டுரைகள் — மூலம் (அல்லது) சிராக்ஸ் பிரதி.
14. கவிஞர்கள் காலத்தில் வெளியான பிற வெளியீட்டாளர்களின் நூல்கள்.
15. கவிஞர்கள் மரணம் அடைந்த பின்னர் வெளியான நூல்கள்.
16. கவிஞர்களின் மொழி பெயர்ப்பு நூல்கள்.
17. வரலாற்று — ஒப்பீட்டு — மதிப்பீட்டு நூல்கள்.
18. பிற மொழியில் வெளியான நூல்கள்.
19. கவிஞர்கள், தொடர்பான கட்டுரைகள் இடம்பெற்ற இதழ்கள்/சிறப்பு மலர்கள்/ஆராய்ச்சி இதழ்கள்.
20. கவிஞர்களின் படைப்பிலக்கியங்கள் தொடர்பான ஓவியங்கள்.

மேலே குறிப்பிட்டுள்ள வகையினங்களை நன்கொடையாகவோ (அல்லது) விலைக்கோ அளிக்க முன்வருவோர், 'பொறுப்பதிகாரி; பாரதியார் நினைவு அருங்காட்சியகம் மற்றும் ஆய்வு மையம், 20, ஈஸ்வரன் கோயில் வீதி, புதுவை.' என்ற முகவரிக்கு விண்ணப்பம் செய்வதுடன் நன்கொடையாகவோ, விலைக்கோ அளிக்க விரும்பும் வகையினங்களின் விளக்கமான பட்டியலை (அளவு, பக்கம், கையெழுத்துப் படிவங்கள் தோன்றிய/அச்சுப் பதிப்புகள் வெளியான ஆண்டு ஆகிய விபரங்களுடன் இணைத்து அனுப்பவும். பொருள்களை விலைக்கு அளிக்க விரும்பினால், ஒவ்வொரு பொருட்களின் குறைந்த அளவு விலையினைக் குறிப்பிட்டு அனுப்பவும்.

பொறுப்பதிகாரி,
மகாகவி பாரதி/பாவேந்தர் பாரதிதாசன்
நினைவு அருங்காட்சியகங்கள் மற்றும்
ஆய்வு மையங்கள்,
புதுவை — 1.



The Protector

படகுகள் ஸ்டண்ட் செய்கின்றன. அந்தரத்தில் ஹெலிகாப்டர் மிதக்கிறது. கதாநாயகன் ஜாக்கிசான் ஹெலிகாப்டரில் ஆதாரம் தேடிப் பற்றி, தன் விசைப் படகை முடுக்கி விட — ஆக்ரோஷமான ஆவேசத்துடன் படகு எதிரியின் படகை மோதி —

Protector கதையின் ஆரம்பம் படு உஷ்ணம்.

லாரா எனப்படும் (கிட்டத்தட்ட கிழவி) ஒரு designer. ஹாங்காங்கிற்குக் கடத்தப்பட அவளை மீட்டு வரச் சென்று சாகசங்கள் பல புரிந்து வெற்றியுடன் திரும்புகிறான் ஒரு போலீஸ் ஆஃபீஸர் என்கிற மெலிதான நூல் கதையை வைத்துக் கொண்டு என்ன பாடு படுத்துகிறார்கள்!

ஹாங்காங்கின் அபாரமான விளக்குகள், இரவு வாழ்க்கை, மஸாஜ் பார்லர், ஹோட்டல் அறையில் துப்பாக்கிகளின் குலாவல், தொழிலகத்தில் முஷ்டி யுத்தம் என்று சகட்டு மேனிக்கு விளையாடுகிறார்கள்.

மூக்கின் மேல் விரல்! மட்டம் தட்டின மேலதிகாரிக்கு ஜாக்கிசான் கடைசியில் கண்ணடித்துக் காட்டும் காட்சி மட்டும் நம் உதடுகளைப் புன்முறுவலுக்காக விரிய வைக்கின்றன.

Thriller என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்.

சோம்பேறித்தனமான இளைஞர்களுடன் ஒரு Bar. புகையிலிருந்து உருவானதைப் போல் திடீரென்று அந்த ஆசாமிகள். அவர்களிடம் இரக்கம் இல்லை. துப்பாக்கிகள் இருக்கின்றன. வெடிக்கிறார்கள்.

கதாநாயகன்—துடிப்பான போலீஸ் அதிகாரி—ஜாக்கிசான் தன்னுடைய .38 துப்பாக்கியால் பதில் அளிக்கிறான். எதிரிகள் சுருள்கிறார்கள். ஸ்லோ மோஷனில் உருள்கிறார்கள்.

அப்புறம் அந்த பதற்றமான துரத்தல். முதலில் நிலம். அப்புறம் நீர். நீரில் விசைப்

தலைப்பு, ரஜினி, ஸ்ரீதேவி என்று ஒட்டு மொத்தமாகக் கணக்குப் பண்ணிப் பார்த்தபோது டிஷ்யூம், டிஷ்யூம், லாலல்லா டான்ஸ் எல்லாம் இருக்கப் போகிறது என்று நம்பிப் போனால் — சுத்தமான குடும்பக் கதை. காதலித்து, மணந்து, பிரிந்து, பிள்ளையால் நாயகனும், நாயகியும் சேரும் கதை.

விஜயகுமார் வில்லன் இல்லை. நமக்குப் போன ஒமப்பொடி. நிஜ வில்லன் பணக்கார அப்பாதான். அதற்காக கல்யாணம் செய்து கொண்ட பெண்ணின் குழந்தையைத் தொலைத்து, பெண்ணுக்கு பிரமை பிடிக்கிற அளவிற்குப் போகும் அப்பாவா? இறுக்கமான முகத்துடன் கடைசி வரை வரும் அந்த கிரீஷ் கர்னாட் தமிழுக்கு வித்தியாசமான அப்பாதான்.

'முத்தம் கொடுத்தா தூங்குவீங்க..... கஷ்டிச்சாத்தான் எழுந்துப்பீங்க' — என்று சொல்லும் ஸ்ரீதேவி. ஹப்பா. பழைய ஸ்ரீதேவி. பழைய கொஞ்சும் குரல். பார்த்து ரொம்ப நாளாகிவிட்டதாலேயே நன்றாக இருக்கிற மாதிரி தோன்றுகிறது.

சண்டைபோடும் துடிப்பான ஆசாமியாயும் இல்லாமல், பாசத்தைக் கொட்டும் குடும்பத் தலைவனுமாய் இல்லாமல் பண்ணிவிட்டார்களோ ரஜினியை என்று தோன்றுகிறது. இருந்தாலும் அவர் சமாளித்துவிட்டார். (அங்கங்கே மேக்கப் கொஞ்சம் தூக்கல்)

முதல் பாதியில் கிளுகிளுப்பு. ஓடி விடுகிறது. மீதி பாதியில் கதையை எப்படி நகர்த்துவது என்று தெரியாமல், பொருட்காட்சியில் தொலைந்துவிட்டு விழிக்கிற குழந்தை போல் விழித்துவிட்டு அப்புறம் நகர்கிறார்களா, கொஞ்சம் குறட்டை விடத் தோன்றுகிறது.

பண்த்தை இறைத்துப் போடப்பட்ட செட்கள், காது கொடுத்து கேட்கிற மாதிரி இரண்டு மூன்று பாடல்கள், ரஜினி, ஸ்ரீதேவி இது போதாதா என்ன நம் ரசிகர்களுக்கு? பிழைக்க வைத்துவிடுவார்கள்!

நான் அடிமை இல்லை





ரசிகன் ஒரு ரசிகை

உயரமான தம்பூராவுடன் மேடையில் அறிமுகமாகும் பாடகி லதாவாக அம்பிகா. ரெஸ்ட் ஹவுஸில் தங்கியிருக்கும் இரவு, ஒரு மதுரமான பாடல் காற்றில் மிதந்து வர, அந்த இசையின் மயக்கத்தில், இசைப் பவனைத் தேடி அவர் கிளம்புவதும், குடித்துவிட்டு உருண்டு கிடக்கும் நண்பர்களிலிருந்து வேறுபட்டு நிற்கும் கதாநாயகன் பாடகனைக் கண்டெடுப்பதும் கலையான ஆரம்பம்! அம்பிகாவின் நடிப்பு நறுவிசான நடிப்பு.

கதாநாயகன் பாடகனாக வரும் புதுமுகம் ரமேஷ். கொடுக்கப்பட்ட வாய்ப்புகளை நழுவ விடவில்லை. கச்சிதமான நடிப்பு.

உண்மையில் சத்யராஜ்தான் ஹீரோ. அவருக்கும் அம்பிகாவிற்கும் இடையில் விழுந்துவிட்ட விரிசலின் விவரங்களை அங்கங்கே ஃப்ளாஷ் பாக்காகச் செருகியிருப்பதில், தொய்வில்லாமல் கதை சொல்லும் நேர்த்தி இருக்கிறது. சத்யராஜ் காட்சிகள் ஒவ்வொன்றிலும் அவர் முத்திரை.

திரைக் கதையைத் துடிப்பாக அமைத்திருக்கும் டைரக்டர் பாசு ஆனந்தின் உழைப்பு உற்சாகமாய் இருக்கிறது.

படத்தின் உயிர் நாடி இசையமைப்பாளர் ரவீந்திரன். ஏழு பாடல்களும் ஏழு முத்துக்கள்.

காமிராவும் சங்கீதமும் ஸ்நேகமாய் நடை போடும் சுகமான படம்.



சுஜாதாதான் பொண்டாட்டி. ஜெய்சங்கர் தான் புருஷன். இவர்னு சுஜாதா வெள்ளைப் புடவை கட்டிக்கிட்டு, நெத்தியில பொட்டில்லாம வந்துடறாங்களா? பச்னு ஆயிப் போச்சு. ஜெய்சங்கருக்குக் கௌரவ வேஷமான்னு கூடத் தோணுது. அப்புறம் சாப்ட்டு போக வெளியே வரதுக்குக் கொஞ்சம் முன்னால, ஜெய்சங்கர் மறுபடியும் மூக்கை நொளைக்கிறாரு.

கதை என்னவோ பரவாயில்லிங்க. ஒரு மாதிரிப் போவுது. ஜெய்சங்கர், சுஜாதா, ரகுவரன், அனுராதா, ராஜலெட்சுமின்னு நெறையப் பேர் நல்லாவே நடிச்சிருக்காங்க.

அந்தப் புது ஆளு வியாசத் கூடப் பரவாயில்லே. ஆனா இன்னும் இருவது வருஷத்துக்கு முன்னாடி வந்திருந்தா நல்லா இருக்குமோன்னு தோணுதே.... அது ஏனுங்க?

இன்னொரு டைரட்டரு.


தங்கச்சிக்காரியை மாஸ் ரேப்பு பண்ற தடியனுங்களைத் தேடிக்கினு அண்ணங்காரன் 'டாய்ய்ங்'னு அவால் குட்டுகினு பழி வாங்கக் கெளம்பற கதையை இன்னும் எத்தினி நாளைக்குத்தான் நம்பாளுங்க பாப்பாங்கன்னு தெரிலைக்கறே எம்பா?

அந்தை வுடு. புல்லோ சாந்தியைக் கப்புடு. தாமிரா வுக்கு ஃனோவா நின்னுகினு பாட்டு பாட்டா ஆட்டச் சொல்றான்னு டான்ஸ் சேத்துக்கினு கீதியே.... அது நல்லாவாக்கீது. ஜெனுக்கு, அனுராதா, சாந்தி யாரும் வேணும்னு நாங்கதான் ஏங்கட்ட வெச்சிட்டோமே... தெரியதது ஒனக்கு?

அந்தை வுடு. தாக்கு பேண்டயாண்ட இவர்னு கன் ஸீர்ப் புகை குண்டு வீசுறுங்க. கைதி தப்பிச்சுக் கருன்னே வச்சிக்கோ. அந்தாளு ஜெயில் டிரெஸ்லை மாட்டிகினு செண்ட்ரல் டேஷன், மவுண்ட் ரோடு. பீச் ரோடு, அண்ணா சமாதி. அடையாறு பார்க்கு. பேஸிய பிரிட்ஜ், சைதாப்பேட்டை வாராவதி வழியா பெரம்பூர் போய் அங்கேர்ந்து அண்ணா மேம்பாலம் வரைக்கும் பிரில் ஊஜிக்கினே பின்னாடி எதி ஓடற, அவங்ககிட்ட ஒரு ஜீப் போலீஸ் ஓடுதே, எம்ப்பா, கூடவா இல்லே?

அந்தை வுடு. குந்த வெச்சி சாப்பாடு போட... லேயே குறியா இருக்காங்களே, அந்த விஜிம்மா... இன்னும் ஷ்டாராங்கா ஒரு பாட்டு தாக்க... பேஜாருப்பா!

இந்த மாதிரி இன்னும் ரெண்டு படம் எ... நம்ப பேட்டை ஆளுங்க எல்லாம் ஒன்லே... வாங்க, க்யாபகம் வெச்சிக்கோ, சொல்லி... சொல்லிட்டேன், சொல்லிட்டேன்!



யிரே உனக்காக

...மீண்டும நதியா. அரண்மனை இளவரசி ...க.

உயர உயரத் தூண்கள். தொங்கும் பிரும்மாண்ட லாந்தர்கள். பணிவிடைக்கு விரல் சொடுக்கினால் ஆயிரம் பணியாட்கள். ஆடம்பரங்கள். ஆனால்.....

ஆசை குறைந்த அப்பா.

ஒரு சித்தார்த்த சிந்தனையில் பாசம் தேடி இளவரசி தனியே கிளம்புகிறாள். கிராமக் குடும்பம் ஒன்றில் எதிர்பாராத வரவேற்பு. நாளடைவில் அந்த குடும்பத்தின் பிரிய உறுப்பினராகிறாள். மோகனைக் காதலிக்கிறாள். கனவு காண்கிறாள். கடைசியில் இளவரசி என்ற உண்மையை விளம்பும் அவசியம் வர, க்ளைமாக்ஸ்! ஹெலிகாப்டரில் (ராஜா குடும்பம் பாருங்கள்!) அப்பாவும், பெண்ணும். கீழே கல்லிலும், மண்ணிலும் புரண்டு ஏழை மோகன் ரத்தம் சிந்தி கைகளை விரி வீசிக் கூப்பிட, ராஜ குடும்பத்து அப்பா கடைசியில் மனம் இறங்க, ஹெலிகாப்டர் தரை இறங்க, சுபம்.



சுஜாதா. மோகனுக்குப் பொருத்தமான வேலை. நதியாவின் திறமைக்கு ஒரு வாய்ப்பு. மற்றபடி சுவாரஸ்யமில்லாத காட்சிகளில் பேசிப் பேசியே பின் கதையை வளர்த்தும் போது, ஆத்திரமாய் வருகிறது.

இசை: லக்ஷ்மிகாந்த்-பியாரிலால். கனமான புல்லாங்குழல், சிதார், ஏராள வயலின்கள். பாட்டுக்குப் பாட்டு ஹிந்தி ட்யூன்கள். ஒன்றிரண்டு இடங்களைத் தவிர மனதில் ஒட்டவே இல்லை.



(இதோ பாருங்கள், கவிதை தெரிந்த யாரும் சண்டைக்கு வர வேண்டாம்.)

கண்ணீரை கங்கையாக்கி கண்ணிரண்டில் மாலையிட்டு
உலக அன்னையிடம் முறையிட்டான்.
தன் மனத்தின் குறை சொன்னான்.
அவன் கரு குகையில் ஒரு வெளிச்ச மின்னல்
கருவைத் தந்தவளே கருவாகப் பிறந்து வந்தாள்
தீயோரைத் தீர்த்து, பக்தர்களை ரட்சித்து.
படம் முழுக்க அருள் புரிந்தாள்.
கூட்ஸ் வண்டியின் நீளம் போல்
முற்றும் போட மனசில்லாமல் நீளும் இப்படத்தை
சலிக்காமல் பார்ப்பவரும் ஒன்றே;
காட்டில் கடுந்தவம் செய்பவரும் ஒன்றே!
அம்பாள் ரட்சிக்கட்டும்!

அதில பாருங்க, இப்ப டைரக்ஷனுக்கு வர்ற புது ஆளுங்க எல்லாமே தானே ஹீரோவா நடிக்கக வாங்கு தீர்மானம் பண்ணிடறாங்க போல. அட, ஸ்க்ரீன் டெஸ்ட், வாய்ஸ் டெஸ்ட்லாம் வேணும். ஒரு பத்து பர்சென்டாவது நடிப்பு வர வேணும். இந்தப் படத்தோட ஹீரோ—கம்—டைரக்டர் ரஞ்சித் குமாருக்கு? அவரை விடுங்க.

ஹீரோயின் ஆரு? ஜீவிதாவா, சரிதாவா? நெண்டு பெருக்கும் பழைய பாவு, பழைய கஸ்தூரி! 'தலைவரே, தலைவரே'ன்னு ஜெய்சங்கரை சரிதா டிஃபன் கேரிய ரோட்டத் தேடி வராங்க. 'கொஞ்சம் சாப்பிட நேரமிருக்கா?'ன்னு கேக்கறாங்க. அப்படியே ரோட்டோரமா ஒரு வீட்டுத் திண்ணையில உக்காந்து சாப்பிடறப்பல்ல தெரியுது. தலைவரு ஜெய், சரிதாவோ புருஷன்னு. அந்த வின் நல்லாருக்கு. என். ஜெய் லா எல்லா வில்லயுமில்ல, அவருதான் பண்ணிட்டாரு!

அது கெடக்கு. அப்புறம் இந்த ஜனகராஜ். வில்லன் கோஷ்டியில அவரைப் பார்க்கறப்பல்லாம் பரிதாபமாத்தான் இருக்கு. எலெக்ஷன் வீட்டில அவர் அசடு வழியறப்ப கோர்ட்டரே அடிபட்டுப் போகுது. அப்புறம் இன்னொரு விஷயமாச்சே. அதையும் கேட்டுப்பிடுங்க....

சங்கர் அமரன்தான் ம்யூஸிக். பழைய புஸ்தகத்தைப் பார்த்து ட்யூன் போட்டாப்ல இருக்கு. 'அந்த மன்மதன் இருவிழா!' இருக்காரும் அது ஒரு நிஜனா நல்லாத்தான் இருக்கு.

கடோசி, கடோசியா—என்ன குறுக்கால கேள்வி போடறீங்க? படம் பாக்கலாமா, வேணுமான்னு? சொல்லியிருக்கோமில்ல இங்க இல்லவா? அப்புறம் உங்க பிரியம்!





மனக்கணக்கு



காதலித்து கல்யாணம் செய்தவன், இன்னொரு பெண்ணை வீட்டுக்கு அழைத்து வருகிறான். "இனிமே இவளும் இங்கேதான் இருப்பா. கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்க" என்கிறான். இந்த இடத்தில் சம்பிரதாய மெலோ டிராமாக்கள் இல்லை. "உக்காருங்க, நம்ம விவகாரத்தைப் பத்திப் பேசுவோம்" என்று தெளிந்த மனத்தோடு மனைவி கால் மேல் கால் போட்டு உட்காரும்போது, தமிழ் சினிமாவே நிமிர்கிறது.

சட்டம் தந்த ஒரு வருடப் பிரிவு. தன்னால் நிராகரிக்கப்பட்ட முறை மாமன் வீட்டிலேயே குடியேறும் சூழ்நிலை. நாயகியின் உலகம் விரிகிறது. புது சொந்தங்கள். புது அவசியங்கள். வாழ்க்கையில் புது அர்த்தங்கள்.

ராஜேஷும், செந்தாமரையும் சரத்பாபுவும் வழக்கம் போல் மினுமினு. காட்சிகள் கொஞ்சம் நிதானம்தான். ஆனால் இரைச்சலில்லாத இயல்பான வசனங்கள்.

அலட்டலில்லாத அழுத்தப் பெண்ணும் நடிப்பது ராதாவிற்குக் கூடுமா? எஸ்! குழந்தைத்தனமான பாத்திரத்திற்கு அம்பிகாவால் இவ்வளவு தூரம் மெருகேற்ற முடியுமா? எஸ், எஸ்! பாசம் நிறைந்த வித்தியாச அப்பாவாய் விஜயகாந்தா? எஸ், எஸ், எஸ்! எத்தனை ஆனந்த ஆச்சரியங்கள்!

டைரக்டராகச் சில காட்சிகளில் வரும் கமல், படத்திற்கு ஒரு முந்திரிப் பருப்பு.

அடர்த்தியான கதையை வெகு நேர்த்தியாய்ப் பின்னியிருக்கும் டைரக்டர் ஆர்.ஸி. சக்திக்கு மனக்கணக்கு ஒரு மகுடம்.

ஏன்னு நீங்கபாக்காமப்போயிட்டேளே... இந்தப் படத்தை.... அடாடா, சிவாஜி என்னமா நடிச்சிருக்கார் தெரியுமா? போஸ்ட் மாஸ்டர் ரோல். ஒரு கோட்டை மாட்டிண்டு பஞ்சகச்சத்தோட பகல் மார்க் மார்க்கெட்ல கீரையும், வாழைக்காயும் வாங்கறதைப் பார்க்கறச்சே என்னமா இருக்குங்கறேன். அதிலேயும் அவர் 'என்னடா பார்க்கறாய், வாராய், போராய்'னு பேசறச்சே அசல் பாலக்காட்டு பிராம்மணன் தோத்துப் போய்டுவன் போங்கோ. கண்ணாடியை ரெண்டு கையில பிடிச்சி ஆட்டிண்டு ஆட்டிண்டு அவர் பேசற ஜோர் என்ன, கண்ல வேதனையைக் காமிச்சிண்டு அந்த ஓடுகாலிப் பையனைப் பாக்கற பார்வையென்ன.... சொல்லிண்டிருந்தா அவரோட நடிப்பைப் பத்தியே சொல்லிண்டிருக்கலாம்.

புருஷன், பொண்டாட்டி, அவாளோட நாலு கொழந்தைங்கன்னு கதை ஆரம்பிக்கிறது. மூணு பசங்க. ஒரு பொண்ணு. மூத்த பசங்க ரெண்டு பேரும் கல்யாணத்தைப் பண்ணிண்டு பிரிஞ்சு போனவுடனே இந்த மனுஷர் பொண்ணு கல்யாணத்தை நடத்த என்ன பாடு படறார்ங்கறதுதான் கதை. கண்ல தண்ணியை வரவழைச்சுடறது.

பரத்னு ஒருத்தர் எழுதின நாடகமாம் இது. படமாப் பண்ணியிருக்கா. வசனங்கூட படத்துக்கு பரத்தே எழுதியிருக்கார். இண்டர்வெல்லுக்கு மேல கதையில அங்கங்கே 'சின்னச் சின்ன ட்விஸ்ட் வெச்சு' அப்புறம் என்ன, அப்புறம் என்ன'ன்னு கேள்வி கேக்கற மாதிரி பண்ணிப்பிட்டார்.

கூடவே ஒண்ணு சொல்லிடணும். இண்டர்வெல் வரைக்கும் கதை நகரமாட்டேங்கறது. சிவாஜி, லக்ஷ்மி ஆக்ஷன்தான் அதுவரைக்கும் நம்மளை இழுத்துப் பிடிச்சி உக்கார வைக்கறது. விக சாப்பிடற ஸீன், வி. கே. ராமசாமி விளக்கெண்ணெய் குடிக்கிற ஸீன்னு கலகலப்பா பண்ணிட்டதாலே சிரமம் தெரியலே. லேடி அய்யரா தேங்காய் சீனிவாசனும் நன்னாப் பண்ணியிருக்கார்.

ரொம்ப நா கழிச்சி ஒரு நல்ல குடும்பக் கதை. நெறைய நாள் ஓடப் போறதுன்னுதும் அசமஞ்சமாட்டம் இருந்து படத்தை மிஸ் பண்ணிடப் போறேள். சீக்கிரம் பாத்துடுங்கோ!

—ஜெயமன்மதன்.

ஆனந்தக் கண்ணீர்



வானதி வழங்கும் சரித்திர சமூக நாவல்கள்

சாண்டில்யன் (சரித்திர நாவல்கள்) — ரூ. பை.

மோகினிவனம்	24.00
இந்திரகுமாரி	12.00
மஞ்சள் ஆறு	9.00
நீள்விழி	14.00
யவனராணி I & II (1 Set)	87.00
மதுமலர் (சமூக நாவல்கள்)	34.00
மனமோகம் ,,	35.00
நங்கூரம் ,,	20.00
ராஜ்யஸ்ரீ	22.00

கண்ணதாசன்

சேரமான் காதலி (சாகித்ய அகாதமி பரிசு பெற்ற நூல்)	40.00
பாரி மலைக்கொடி	8.00
விளக்கு மட்டுமா சிவப்பு (சமூக நாவல்கள்)	25.00

பாலகுமாரன்

இரும்பு குதிரைகள் (ரூ. 20,000 பரிசு பெற்ற நூல்)	25.00
கரையோர முதலைகள்	21.00

கௌசிகன்

ஜுலேகா I & II (1 Set) (தினமணிக் கதிரில் பல லட்சக்கணக்கான வாசகர்களின் ஆதரவைப் பெற்ற நவீனம்)	51.00

வித்வான் வே. லட்சுமணன்

நீலவேணி I & II (1 Set) (சரித்திர நாவல்கள்)	55.00
பாவை மன்றம்	17.50

சமூக நாவல்கள்

பி. வி. ஆர்.

நீரோட்டம்	21.00
G. H. ஜி. எச். நாவல்	16.50
கிண்டி ஹோல்டான்	17.00
பூவேலி	17.50

கல்கி (சரித்திர நவீனங்கள்)

பொன்னியின் செல்வன் I to V (1 Set)	225.00
சிவகாமியின் சபதம்	(அச்சில்)
பார்த்திபன் கனவு	32.00
சோலைமலை இளவரசி	12.00
மகுடபதி	7.00
ஸ்வப்னலோகம்	(அச்சில்)
மயிலைக்காளை	6.00
கள்வனின் காதலி	17.00

கோ வி. மணிசேகரன்

அஜாதசத்ரு	25.00
காஞ்சிக் கதிரவன்	20.00
பொன் வேய்ந்த பெருமாள்	14.00
முதல் உரிமைப் புரட்சி	8.00
கங்கை நாச்சியார்	14.00

சிவசங்கரி

பாலங்கள் (ரூ. 10,000 பரிசு பெற்ற நூல்)	23.00
47 நாட்கள்	14.00
நண்டு	18.00
அடிமாடுகள்	6.50
மாலையில் பூக்கும் மலர்கள்	14.00
திரிசங்கு சொர்க்கம்	12.00
தகப்பன் சாமி	10.00
சின்ன நூல் கண்டா நம்மைச் சிறைப் படுத்துவது (கட்டுரைகள்)	20.00

அனுராதா ரமணன்

தேவதைகள் தூங்குவதில்லை	16.00
ஹேமா உனக்காக	16.00
மிதிலை நகரத்தின் சீதைகள்	15.00
கூட்டுப் புழுக்கள்	18.00
வாயுள்ள ஊமைகள்	13.50
ஒரு கோடி இன்பங்கள்	16.00

வாஸந்தி

மனிதர்கள் பாதிநேரம்தூங்குகிறார்கள்	14.00

தேவையான புத்தகங்களை V. P. P. யில் பெறக் கடிதம் எழுதுங்கள். V. P. P. தபால் செலவு தனி.

நூல் நிலையங்கள் — லெண்டிங் லைப்ரரி — புத்தக வியாபாரிகளுக்குத் தக்க கழிவு உண்டு.

வானதியின் 1986 ஆம் ஆண்டு இலவசப் புத்தக விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

விபரங்களுக்கு:

வானதி பதிப்பகம்,

13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை—600 017.

போன்: 442810



சொர்க்கக் கதவுகள்

லக்ஷ்மி

20

கட்டிலின் மீது விரிக்கப்பட்டிருந்த வெள்ளை நிற விரிப்பின்மீது தலையணைகளை அடுக்கி வைத்தாள் நர்ஸ். அதன் மீது சாய்ந்து கொண்ட கேசவன் இலேசாக முறுவலித்த படி எதிரே இருந்த டாக்டர் மோகனைப் பார்த்தான்.

''இப்பொழுது எப்படி இருக்கிறேன் டாக்டர்?''

டாக்டர் மோகன் புன்னகையுடன், ''இவ்வளவு விரைவாக நீங்கள் குணமடைவீர்களென்று நாங்களே எதிர்பார்க்கவில்லை. ரொம்ப ஆச்சரியமான விதத்திலே எங்க சிகிச்சைக்கு உங்க உடம்பும் ஒத்துக்கொண்டு தேறிக் கொண்டு வருகிறது என்று சொல்லணும்.''

பெருமூச்சுடன் அறையின் திறந்த ஜன்னல் வழியே ஆகாயத்தை வெறித்தான் கேசவன். ஒரு சில தினங்களாக அவன் அந்த கிளினிக்கில் சிகிச்சை பெற்று வருகிறான் என்றாலும் எத்தனை பெரிய பில் தொகையை எதிர்பார்க்க நேருமோ என்ற அச்சம். தற்சமயம் காசுக்கு வழியின்றி, உயிருக்கும் ஆபத்தைத் தேடிக் கொண்டுவிட்ட நடுக்கம் யாவும் அவனைத் துயரத்திலாழ்த்திவிட்டிருந்தன.

ராம்லால் கோஷ்டி அவனை எப்படியோ கண்டு பிடித்து வேட்டை நாய்களைப் போல் வீடு தேடி வந்து குதறிவிட்டுப் போன பிறகு...... அவனது வாழ்க்கை வெறும் சூன்ய



மாகத் தோன்றியது. இனி எங்கே போவது? எப்படி வாழ முயல்வது?

''மிஸ்டர் சுவாமிநாதன் வர்றதா சொல்லி இருக்கிறார்!'' டாக்டர் மோகன் விடை பெற்றுக் கொண்டான்.

சிறிது நேரத்தில் அறைக் கதவு மெல்லத் திறந்தது. சுவாமிநாதனைக் கண்டதும், கேசவன் கண்களில் இலேசாக நீர் முட்டியது.

''எனக்காக நீங்கள் ரொம்பக் கஷ்டப் பட்டுவிட்டீங்க.'' நன்றி உணர்ச்சியுடன் வரவேற்றான் கேசவன். இருவரையும் பேச விட்டு, நர்ஸ் அங்கிருந்து அகன்றாள்.

''உங்ககிட்டே ஒண்ணு கேட்கலாமா?'' கேசவன் தயக்கத்துடன் ஆரம்பித்தான்.

''தைரியமாகக் கேள்'' என்றபடி, அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

''எமன்கிட்டே போன உசிரை மீட்டுக்கிட்டு வந்ததாக, இங்கே பரவலாக என்னைப் பற்றிப் பேசிக்கிறாங்க. அதனாலே 'பில்' எப்படி இருக்குமோன்னு கவலையா இருக்கு ஸார்.''

சுவாமிநாதன் சிரித்தபடி, ''திருப்பி எமனிடமே போயிடலாம்னு பயப்படற அளவுக்குப் பணம் பிடுங்கறவங்க இல்லே. உன் நிலைமை தெரிஞ்சுதான் நான் மோகன் கிட்டே விவரம் சொல்லி இருக்கேன். டாக்டர்னாலே பணம் பிடுங்கறவங்க; இரத்தம் குடுத்து உயிரைக் காப்பாத்தறவங்கன்னு மறந்து போய் இரத்தத்தை உறிஞ்சி நோயாளியைக் கொல்லும் பணப் பேய்கள்னு நினைக்கிற நிலே கூடிய விரைவில் மாறிடும். ஏன்னா, இந்த 'பாலி கிளினிக்' டாக்டர்கள் எல்லாருமே, சமூக நலன் அப்படிங்கற நோக்கத்தோடு பாடுபடுகிற இளைஞர்கள்'' என்றார்.

''அதுக்காக ஓசி வைத்தியம் செய்ய ஆரம்பித்துவிட்டால் எல்லோரும் வயிற்றில் ஈரத் துணியைப் போட்டுக் கொள்ள வேண்டியதாயிடுமே ஸார்.''

''அதுக்காகத்தான் நம்ம ஊரில பெரியவங்க ஒரு பழமொழியே வச்சிருந்தாங்க. 'வைத்தியனுக்கும், எண்ணெய் விற்பவனுக்கும் வஞ்சனை செய்யாதே'ன்னு.''

''நான் வேறே விதத்தில்தான் கேட்டிருக்கேன். இது புதுமொழியோ?''

''புது மொழியோ, பழ மொழியோ! பொன்னை வைக்கிற இடத்துலே, பூவையாவது வை என்று சொல்கிறதுண்டு. நம்மாலானது சிகிச்சைக்கானதைக் கொடுத்துவிட்டுப்போகலாம். கவலைப்படாதே'' என்று அவர் கூற, இருவரும் சிரித்தனர்.

சிறிது நேரம் உலக விஷயங்களைப் பேசிய பின் சுவாமிநாதன் எழுந்தார். ''கேசவா! உன் உடம்பு குணமாகி, சீக்கிரமே 'டிஸ்சார்ஜ்' செய்து விடுவார்கள்.''

கேசவன் முகம் ஒரு விநாடி கலவரத்தால் இருண்டது. ''பேசாமல் இங்கேயே இருந்து விடலாமென்று மனசு அடிச்சுக்குது ஸார்.''

''அது கோழைத்தனம். எலிக்குப் பயந்து வீட்டையே கொளுத்திவிட முடியாதே. உன்னை நான் வந்து அழைத்துப் போகிறேன். மேற்கொண்டு என்ன செய்யறதுன்னும் யோசனை செய்து வைக்கிறேன்'' என்றார் ஆறுதலுடன்.

சுவாமிநாதன் வீடு திரும்பியபொழுது விமலா மெல்ல சாப்பாட்டிற்குத் தயார் செய்துவிட்டிருந்தாள். தாம் வீட்டில் இல்லாத சமயம் அவள் உடலை வருத்திக் கொண்டதை எண்ணி மனம் பாகாய்க் கரைந்து போனார் சுவாமிநாதன்.

''உனக்கு எத்தனையோ சொல்லியாச்சு. நீ எந்த வேலையும் செய்யக் கூடாது. ஓய்வில் இருந்தால்தான் உடம்பு குணமாகும். நான் சொன்ன பேச்சை நீ கேட்கிறதே இல்லை,'' உரிமையுடன் கடிந்து கொண்டபடி, பின் பக்கம் சென்றார்.

கை கால் கழுவி சாப்பிட அமர்ந்தவர் மனைவியின் முகத்தை ஒருகணம் கூர்ந்து கவனித்தார். வயது ஆகிவிட்டதால், விமலாவின் வனப்பு வாடிவிடவில்லை. ஆனால், வியாதியின் கொடுமை அவளை மிக்க சோர்வுக்கு உள்ளாக்கிவிட்டிருந்தது போலும். அசதியுடன், ''உங்களுக்குப் பசி தாங்காதே. காலையில் ஒரு வாய் காப்பி சாப்பிட்டதோடு, சமையலையும் முடித்துவிட்டு

ஓடிவிட்டீர்கள். பசிக்காதா?'' வினவினாள் மனைவி.

''இத்தனை பெரியவியாதியுடன் போராடிப் பிழைத்து எழுந்த உனக்கு மட்டும் பசி, சோர்வு எதுவும் இருக்காதா?'' கேட்க நினைத்தவர் நெஞ்சுக்குள்ளேயே வார்த்தைகளை விழுங்கிக் கொண்டார்.

''வேலை என்று புறப்பட்டால் பசி தாகம் பார்க்க முடியுமா?'' அசட்டுச் சிரிப்புடன் அவர், தட்டுக்களில் சோற்றைப் பரிமாறினார். பழைய சம்பவங்களில் ஒன்று அவர் நெஞ்சை நெருடியது.

பம்பாயிலிருந்து பிறந்தகம் சீராட வந்தாள் அவரது அருமைத் தங்கை. நல்ல நாளிலேயே அவள் சோம்பேறி. பிறந்த வீடு கொண்டாட வந்துவிட்டால், சிறு துரும்பைக் கிள்ளிக்கூட மறுபக்கம் போடாத தனிக் குணம். ஒரே பெண் என்பதால் தாயாரின் செல்லம். எல்லாமாக அவள் ஆனந்தமாக ராணி போல் விமலாவை வேலை ஏவிக் கொண்டு வீட்டினுள் வளைய வந்தாள்.

அன்று பண்டிகை நாள் என்பது மட்டும் அவருக்கு நினைவிருந்தது. ''கணேசன் ஆபீஸ் போக வேணும். முதலில் அவனைக் கவனி'' என்று விமலாவிடம் உத்தரவிட்டார் சுவாமிநாதன்.

காலை நேரத்து அவசரங்களில் அதிலும் பண்டிகை தினத்தில் விமலா அலை பாய்ந்து கொண்டிருந்தாள்.

''தொட்ட காரியம் துலங்காது. எட்டு நாழி பண்ணுவாள்'' என்று மாமியார் முணுமுணுத்தார்.

கொல்லைப் புறக் கிணற்றடியில், கூடைப் பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருந்த வேலைக்காரியின் கூச்சலைத் தணித்துவிட்டு, உள்ளே சமையலறைக் காரியங்களை முடித்துவிட்டு, வெளியே வந்த விமலா துவண்டு போயிருந்தாள்.

''ஆபீஸ் போகிறவர்களுக்கு முதலில் சாதம் போட்டனுப்பு'' மாமியார் ஒரு பக்கம் உந்த, மீண்டும் சமையலறைக்குள் விமலா மறைந்தாள்.

''கணேசனைக் கவனித்தாயா?'' என்று சுவாமிநாதன் உறுமினார்.

''உங்களையும் அம்மா சாப்பிடச் சொன்னார்'' விமலா தடுமாறிவிட்டு, தட்டுக்களைப் பரப்பிப் பரிமாறத் துவங்கினாள்.

''அம்மா உடம்பு சரியில்லாதவள். அவளுக்குப் பசிக்கும். அம்மாவையும் சாப்பிடக் கூப்பிடேன்.'' கணேசன் தன் பங்குக்கு உத்தரவிட்டார்.



''அம்மா! அம்மா!'' என்று சுவாமிநாதன் குரல் கொடுத்ததும் உள்ளே வந்த மாமியார் வியப்புடன் நின்றாள்.

''நீங்க சாப்பிடுங்கோடா. நானும் மாலதியுமா சாப்பிடறோம்'' என்று தாயார் உபசரித்தபடி கூறினார்.

''பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிடுங்களேன்'' என்று மகன் வாஞ்சையுடன் வற்புறுத்தவே, அவளும் பெருமையுடன் அமர்ந்தாள்.

ஆசார சீலரான மாமியாருக்கு, இலை போட்டுச் சாதம் பரிமாறினாள் விமலா. அப்போதுதான் நினைவு வந்ததுபோல் சட்டெனக் கையை நீட்டித் தடுத்தாள் மாமியார்.

''என்னம்மா என்ன ஆச்சு?'' பிள்ளைகள் பரபரத்தனர்.

''விமலா! இன்னொரு இலை போடு. மாலதி பசி தாங்கமாட்டாள். அதிலேயும் பம்பாய் போனப்புறம் சுருக்கச் சாப்பிட்டுப் பழக்கம். அவளுக்கும் பரிமாறு.''

அந்தக் குடும்பம் முழுதும் பசி நோயால் தாக்கப்பட்டவர்களைப் போல் சாப்பிட்டு முடித்தனர். ஆனால் ஒருவராவது, ''விமலா! உனக்குப் பசிக்குமே. நீ சாப்பிடவில்லையா?'' என்று கேட்கவில்லை. அரட்டலும், சிரிப்புமாக வடையையும், பாயாசத்தையும் கேட்டுக் கேட்டுச் சாப்பிட்டான் கணேசன். அன்று ஆபீஸ் போகத் தாமதம் கூட ஆயிற்று.

''மாலதி! வர வர நீ சாப்பிடறதே இல்லே. வீடு, குடும்பம்னு உழைச்சு ஓடாய்ப் போகாதே. நன்னா சாப்பிடு'' மகளை அன்புடன் கடிந்து கொண்டாள் தாய்.

''விமலா! வடை சூடாக இருந்தால் மாலதியின் இலையில் போடு'' மாமியார் அதிகாரம் தூள் பறந்தது.

''வேண்டாம் அம்மா. வயிற்றிலே இடமில்லே'' என்று கொஞ்சியபடியே சாப்பிட்டு எழுந்தாள் மாலதி. பிறகு சமையலறைப் பக்கம் எச்சில் இலைகளைக்கூடச் சுத்தப்படுத்த அவள் எட்டிப் பார்க்கவில்லை.

மற்றவர்களாவது விமலாவை வெறும் செக்குமாடாக எண்ணி விட்டுப்போகட்டும். கட்டிய கணவன் சுவாமிநாதன் என்ன செய்தார்? மனைவி என்ற இயந்திரம், எப்படி இயங்குகிறது என்று திரும்பிப் பார்க்கவே இல்லை. அன்று விமலா சாப்பிட்டு முடிக்க வெகுநேரம் ஆகிவிட்டது. பசி, வேளை கெட்ட வேளை சாப்பாடு என்றதால் அவளுக்கு அடிக்கடி வயிற்று நோவு வந்து துடித்துப் போவாள்.

''வீணாகப் பட்டினி கிடந்து இந்தம்மா உடம்பைக் கெடுத்துக்கிறாங்க. வேளா வேளைக்குச் சாப்பிடறது ரொம்ப அவசியம்'' என்று குடும்ப டாக்டர் எச்சரித்துவிட்டிருந்தார்.

''அவள் என்ன சின்னக் குழந்தையா? வாயிலே சோத்தை ஊட்டறத்துக்கு? அவரவர்கள் உடம்பை அவரவர்கள்தான் கவனித்துக்

ஒரு கம்பெனிக்கு இண்டர்வியூவுக்குச் சென்றிருந்த என் நண்பரை, அதிகாரி, "உன் காதுகள் இரண்டையும் நான் இப்போது வெட்டிவிட்டால் என்ன ஆகும்?" என்று கேட்க, நண்பரோ, "என்ன ஆகும்? என்னால் பார்க்க முடியாது" என்றார். அதிகாரி கேள்வியை பலமுறை திரும்பக் கேட்க, நண்பர் அதே பதிலை அளிக்க, அதிகாரி, "என்ன உளறுகிறாய்? காதுகளை வெட்டினால் எப்படி பார்க்க முடியாமல் போகும்?" என்று கோபத்துடன் கத்த, கண்ணாடி அணிந்திருந்த நண்பர், "காதுகளை வெட்டினால் நான் கண்ணாடி அணிய முடியாது; கண்ணாடி இல்லாவிட்டால் என்னால் பார்க்க முடியாது" என, அதிகாரி சிரித்துவிட்டார்!

— எஸ். இந்திரா.



கொள்ள வேணும்" மாமியார் கடுகடுத்தாள். ஆனால் அதே மாமியார், கடைசிக் காலத்தில் படுத்த படுக்கையில் கிடந்த போது.....? இதே 'விமலாதான் குழந்தை போல்' வாயில் சோற்றை ஊட்டிப் பணிவிடை செய்து பராமரித்தவள். சாகுந் தறுவாயில், மாமியார் விமலாவின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"விமலா! உனக்கென்று நான் எதுவும் செய்யலே. ஆனா, நீ எதையும் மனசில் வைத்துக் கொள்ளாமல் என்னை நன்றாகக் கவனிச்சுண்டேம்மா. கட்டாயம் உனக்கு ஸ்வர்க்கம்தான் கிடைக்கும்" மாமியாரின் தலையை விமலா ஆதரவுடன் கோதினாள். "உங்க ஆசீர்வாதம் இருந்தால் அதுவே போறும்" மருமகளின் அமைதியான வார்த்தைகளைக் கேட்டபடி அமைதியடைந்து போனாள் மாமியார்.

தாயாரின் இறுதிச் சடங்குகளின் போதும், இதர காரியங்களின் போதும் விமலா பசி நோக்கம் பாராமல், கடமையே கண்ணாக இருந்தாள். மாலதியோ ஆயிரம் குற்றங்களைக் கண்டுபிடித்து, அழுது, ரகளை செய்து அம்மா மீது எஞ்சியிருந்த ஒன்றிரண்டு நகைகளையும் அடித்துக் கொண்டு பம்பாய் புறப்பட்டுப் போனாள்.

'பொறுமை' கூட சில சமயங்களில் எல்லை மீறிப் போவதுண்டு. விமலாவைப் பொறுத்தவரை, அந்த எல்லையே இன்னும் எட்டியாகவில்லையோ? பிரமிப்புடன் தட்டிலிருந்த சோற்றை வெறித்தார்.

"பசி மீறிப் போய்விட்டதா? சாதத்தை வைத்தபடியே அப்படியே உட்கார்ந்துவிட்டேளே" விமலா கேட்டதும் தூக்கி வாரிப் போட்டது அவருக்கு.

"ஒண்ணுமில்லே விமலா. இன்னிக்கு ஆஸ்பத்திரியில் அந்தப் பையன் கேசவனைப் பார்த்தேனா.... மனசே சரியாயில்லே" சமாளித்தார்.

"அவன் உடம்பு குணமாகி வருகிறதா சொன்னேளே. டாக்டர் மோகன்கூட சீக்கிரமா அவனை 'டிஸ்சார்ஜ்' பண்ணி அனுப்பிடறதாகச் சொல்லலேயா?" சந்தேகத்துடன் கேட்டாள் விமலா.

"சொன்னதில்தான் இப்ப குழப்பம்."

"என்னவாம்?" சாப்பிடுவதை நிறுத்தினாள் விமலா.

"பணப் பிரச்னைதான். 'பில்' தொகை எத்தனை வருமோ. கை இருப்பில் எத்தனை இருக்கோ.... யாருக்குத் தெரியும்." பெருமூச்செறிந்தார். "அப்போ முழுது உயிர் பெரிசாகத் தெரிஞ்சுது. இப்ப பணம்....?"

"உடம்புதானே முக்கியம். சுவர் வைச்சுத்தான் சித்திரம் எழுத முடியும்னு அவன் கிட்டே புத்தி சொல்லுங்கோ. பணம் போறாம வந்தா.... நம்மகிட்டே இருக்கிற வெள்ளிப் பாத்திரத்தை விற்றுக் கொடுங்கோ"

"விமலா!" அதிர்ந்தார் சுவாமிநாதன்.

விமலா நிதானமாக அவரைப் பார்த்தாள். "நமக்கென்று வயிற்றில் பொறந்தது தக்காமல் போயிட்டுது. இவன் நம்ம பணத்தைக் கடனாக வாங்கிக்கட்டும். அப்படித் திருப்பித் தர முடியாவிட்டாலும் பரவாயில்லே. நமக்குப் பிறக்காத ஒரு பிள்ளையோட உசிரைக் காப்பாத்தினதா நினைச்சுட்டுப் போறோம்."

எத்தனை பெரிய மனம் இவளுக்கு? பிரதி உபகாரத்தை எதிர்பாராமல், தன் உடைமைகளைத் தியாகம் செய்கிற பக்குவம், இவளுக்கு எப்படி வந்தது? பெண்ணும், மண்ணும் ஒன்று என்கிறார்களே.. அது இந்தக் குணத்தினால்தானா? மண், தன் வளத்தைப் பிறருக்கு அள்ளிக் கொடுப்பதைப் போல, பெண்ணும் பிறருக்காகத் தன் உரிமைகளை விட்டுக் கொடுக்கிறாளா? ஐஸ்வர்யா நினைவில் வந்தாள். இல்லே. இல்லே. எல்லாப் பெண்களையுமே அப்படி எண்ண முடியுமா? விமலா, அவருடைய விமலா, பொறுமையே உருவானவள்.

பெருமை பூரிக்கும் விழிகளால் அவளைப் பார்த்துச் சிரித்தார் சுவாமிநாதன்.


"பார்த்தேளா, சொல்ல மறந்துவிட்டேன். அஸ்வத் வந்துவிட்டுப் போனான்" என்று சட்டென விமலா கூறினாள்.


சுவாமிநாதன் 'என்ன' என்ற பாவனையில் மனைவியைப் பார்த்தார்.

"மஞ்சுளா வருகிற வெள்ளிக் கிழமை மெட்ராஸ் வராளாம். நீங்களும் அவனோட ஸ்டேஷனுக்கு வரணுமாம்." சுவாமிநாதன் திகைப்புடன் எழுந்தார்.

(தொடரும்)

தார் பாலைவனத்தின் மத்தியில் தகிக்கும் வெப்பத்தையும் தாங்கி நின்று பாதுகாப்பு தரக் கூடிய கூரைத் தகடு எது?





தார் பாலைவனத்தில் இத் தகடுகள் தேவைப்படாது என்றாலும், ராம்கோ அஸ்பெஸ்டாஸ் கூரைத் தகடுகள் எத்தகைய வெப்பத்தையும் ஏற்று நிலைத்து நிற்கும் வகையில் உறுதியுடன் தயாரிக்கப்படுகின்றன.

ராம்கோ அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் ஆயுள் நீடிக்கும் உழைக்கும் வண்ணம் வலுவாக உருவாக்கப்படுகின்றன. சிறந்த மூலப் பொருட்களைத் தேர்ந்தெடுப்பதில் கண்காணிப்பு, உற்பத்தியில் நவீன தொழில்நுட்பம், திட்டமிட்ட தரக்கட்டுப்பாடு இவற்றின் இணைப்பே ராம்கோ அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகளின் சிறப்பு.

எனவேதான் ராம்கோ அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் எப்படிப்பட்ட பருவநிலையையும் எதிர்கொண்டு, காலத்தை வென்று நிலைத்து நிற்கின்றன. எனவே கூரைத் தகடுகளில் ராம்கோவின் புகழ் கொடிகட்டி பறப்பதிலும் தலைசிறந்த கட்டிடக் கலை நிபுணர்களும் பொறியாளர்களும் அதையே தேர்ந்தெடுப்பதிலும் வியப்பதற்கு ஏதுமில்லை.

Ramco

ராம்கோ. ஏனெனில் அதுவே அதிகபட்ச வெப்பத்தையும் அநாயாசமாக ஏற்று, ஆயுட்காலம் முழுவதும் உழைக்கும் வண்ணம் உறுதியாகத் தயாரிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

ராம்கோ தரமான கூரைகளுக்கு மட்டுமல்ல, நிரந்தரமான பாதுகாப்புக்கும் கூட.

சதர்ன் அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிமிடெட்
739, அண்ணா சாலை,
சென்னை 600 002.
போன்: 82006

பரிபூரண விற்பனையாளர்கள்:
ராஜா சாரிடி டிரஸ்ட்

அலுவலகங்கள்: பெங்களூர்
- எர்ணாகுளம் • ஹைதராபாத்
- பூனா • விஜயவாடா
- விசாகப்பட்டினம்

தொழிற்சாலைகள்:
அரக்கோணம் (தமிழ்நாடு)
கரூர் (கர்நாடகம்)

பிரஷர் பைப் பிரிவு:
மக்ஸி (மத்தியப் பிரதேசம்)

CAS SACL 28-A/85-TAM

வாசகர் பங்கு

ரிடயர்...



வாழ்க்கை அர்த்தமுள்ளதாகியது

மகனுக்கு வேலை கிடைத்துவிட்டது, சந்தோஷமாய் ரிடயர் ஆகலாம் என்று எண்ணியிருந்தார் நண்பர். மகனோ தான் காதலித்த பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு தனிக் குடித்தனம் போய்விட்டான். ரிடயர் ஆன தினத்தன்று ஆபீஸில் மயக்கம் போட்டு விழுந்தவரைத் தேற்றி, தைரியம் சொல்லி, பாராட்டும் பரிசும் வழங்கி அனுப்பி வைத்தோம். நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட் ஏஜென்ஸி எடுத்து இளைஞர் போல் பல இடங்களுக்கு அலையும் அவர் சொல்கிறார்: ''வாழ்க்கையின் அர்த்தம் இப்போதுதான் எனக்குப் புரிய ஆரம்பித்திருக்கிறது.''

— எஸ். சங்கரசுப்பு, திருச்செந்தூர்.

சந்தோஷத்தைத் தந்த ஹோமியோபதி

ஏழு பெண்களைப் பெற்ற என் தந்தை ரிடயர் ஆனதும் பெண்களைப் பற்றிய கவலை விசுவரூபம் எடுக்க, மனமொடிந்து போய், சாப்பிடாமல், தூங்காமல் பித்துப் பிடித்தவர்போல் தன்னை வருத்திக் கொள்ள ஆரம்பித்தார். திடீரென்று, தான் எப்போதோ ஹோமியோபதி மருத்துவம் படித்துப் பட்டம் பெற்றது நினைவுக்கு வர, டிஸ்பென்ஸரி ஆரம்பித்து நடத்தலானார். இப்போது டிஸ்பென்ஸரி நன்றாக நடக்கிறது. அப்பாவும் சந்தோஷமாக இருக்கிறார்.

— எஸ். டி. ஹஜரா பானு, தர்மபுரி.

எச்சரிக்கிறேன்! ஏமாறாதீர்கள்!

நீங்கள் ஓய்வு பெறப் போகும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் கூட்டத்தைப் பற்றி எச்சரிக்கிறேன்! வேலைக்குப் போகும் நேரத்தில் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள ஓர் ஆயாவைத் தேடும் அன்பு மகள்/மருமகள்! குடும்பப் பொறுப்புகளை இறக்கி வைக்க ஒரு சுமைதாங்கியைத் தேடும் மகன்/மருமகன்! ஓய்வுக் காலம் 'போர்' அடிக்காமல் இருக்க, தாராள மனத்துடன் 'சின்னஞ்சிறு வேலைகளை' அடுக்கடுக்காக உங்கள் தலையில் சுமத்தும் நண்பர்/உறவினர் கூட்டம். ஏமாறாதீர்கள்! நீங்கள் ஒரு தனி நபர். 25 சதவிகிதம் நேரத்தைப் பிறர் நலனுக்காகவும் 75 சதவிகிதம் நேரத்தை உங்கள் நலனுக்காக, உடல், மனம், அறிவு, ஆன்மீக நலன்களுக்காகச் செலவிடத் தயங்காதீர்கள்.

— கிருஷ்ணவேணி, சென்னை—102.

வீட்டிலே இன்ஸ்டிடியூட்

டைப்பிங்கும் ஷார்ட் ஹாண்டும் அறிந்த எனது உறவினர் ஒருவர் ரிடயர் ஆனதும் கிடைத்த பென்ஷன் தொகையைக் கொண்டு சில டைப்ரைட்டர்களை வாங்கினார். இரண்டு ஆட்களை வைத்துக்

ஆனதும்...

கொண்டு தம் வீட்டிலேயே டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் நடத்தி, பெண்ணின் கல்யாணத்திற்குப் பணம் சேர்த்துவிட்டார்.

— டி. தேவேந்திரன், வேலூர்—4.

ஆனந்தம் அளிக்கும் தோட்டக் கலை!

தோட்டக் கலையில் எனக்கிருந்த ஆர்வம் காரணமாக கான்ஸ்டபிளாகப் பணிபுரிந்த போதே காவல் நிலையங்களை மலர்ச் செடிகள் கொண்டு ரம்மியமாக அலங்கரித்து வந்தேன். செடிகள் வாங்க நர்ஸரிக்குப் போன சமயங்களில் 'லான்' (புல்தரை) அமைப்பதற்கான வழிமுறைகளைத் தெரிந்து கொண்டேன். இன்று ரிடயராகி ஆறு வருடங்களுக்குப் பிறகும் சில கம்பெனிகளுக்கும் வீடுகளுக்கும் 'லான்' அமைத்தல், தோட்டம் போட்டுக் கொடுத்தல் போன்ற வேலைகளைச் செய்து மன நிறைவும் ஆனந்தமும் பெற்று வருகிறேன்.

— எஸ். ராஜரத்தினம், சென்னை—13.

மனிதனாக மாறினார்

பதவிக் காலத்தில் நடை பாதை வியாபாரிகளை வதைத்து, அவர்களிடமிருந்து அபராதமாக கரும்பு, பட்டாஸ், பேனா, இளநீர் என்று விதவிதமாக வசூலித்து வீட்டுக்கு அனுப்பி வைத்தார் ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர். அவர் ரிடயர் ஆன பிறகு ஒரு முறை மருத்துவமனை செல்ல ரிக்ஷாவைக் கூப்பிட, ரிக்ஷாக்காரர் 'ஓசிச் சவாரி ஏத்தறதில்லை நைனா' என்று பதில் கூறியதும், துடிதுடித்துப் போய், மன்னிப்புக் கேட்டு மனிதனாய் மாறினார்.

— கே. குலசேகரன், விழுப்புரம்.

குழந்தைகளோடு குதூகலம்

பள்ளி தலைமை ஆசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் வெறிச்சோடிப் போன உணர்வு ஏற்படக் கூடும் என்பதை முன்பே அறிந்து திட்டமிட்டேன். ஒரு வயது முதல் நான்கு வயதுவரையிலான குழந்தைகளை, அவர்கள் பெற்றோர்கள் அலுவலகம் செல்லும் நேரத்தில் கவனித்துக் கொள்ளும் வேலையை மேற்கொண்டேன். குழந்தைகள் காப்பகம் எனக்குச் சுமாரான வருவாயைப் பெற்றுத் தருவதோடு மிகுந்த மன நிறைவையும் அளிக்கிறது.

— எஸ். ஜயராமன், பெங்களூர்—55.

வசதிகளுக்குக் குறைவில்லை

டி.வி.எஸ். லாரி ஓட்டுனராகப் பணிபுரிந்து ரிடயர் ஆன என் மாமா டி.வி.எஸ். அளித்த ஓய்வு நிதியை முதலாகப் போட்டு ஒரு டாக்ஸி வாங்கினார். சில காலம் சென்று அவரிடம் ஒரு லாரி வாங்கப் பணம் சேர்ந்தது. லாரிக்குப் பிறகு 'வான்' வாங்கினார். இப்போது சொந்த வீடும் வாங்கிவிட்டார். சகல வசதிகளுடன் வாழும் இவர் ஒரு ஃபோட்டோ ஸ்டுடியோ வேறு நடத்துகிறார்.

— டி.ஜி.கே. மூர்த்தி, தென்காசி.

கடனாளியான பரிதாபம்

எனது நண்பனின் அப்பா வேலையிலிருந்த போது, சூதாட்டம் குடிப் பழக்கம் முதலியவற்றுக்கு அடிமையாகிப் பணத்தை விரயம் செய்து வந்தார். ரிடயர் ஆன பிறகு இந்தப் பழக்கங்களைத் தொடர அவரிடம் பணமில்லை. ஆனால் பழக்கங்களை விட முடியாமல் கடன் வாங்க ஆரம்பித்துப் பெரும் கடனாளி ஆகிவிட்டார். அவரைப் பார்க்கவே பரிதாபமாக உள்ளது.

— ஆர். விஜயராஜ், மதுரை.

சாத்விகம் சாதகமாயிற்று

ரயில்வேயிலிருந்து ஓய்வு பெற்ற என் நண்பனின் அப்பா மிகவும் சாதுவானவர். அவர் எப்படிப் பிழைக்கப் போகிறார் என்று அவர் மனைவிக்கே கவலை. ஆனால் அவருடைய சாதுக் குணமே அவருக்குச் சாதகமாக அமைந்தது. அவர் காய்கறி வியாபாரம் தொடங்கியபோது சுற்றுவட்டாரத்துக் கிராமங்களிலிருந்த விவசாயிகள் அவருடைய இந்தக் குணத்தால் கவரப்பட்டு, மலிவான விலையில் அவருக்குக் காய்கறிகளை 'சப்ளை' செய்தனர். வியாபாரம் அமோகமாக நடந்து அவர் வீடும் நிலமும் வாங்கிச் சிறப்பாக வாழ்கிறார்.

— இரா. சீனிச்சாமி, திண்டுக்கல்.

நரகத்திலிருந்து விடுதலை!

நான் ரிடயர் ஆனதும் வாழ்க்கை முன்னிலும் அர்த்தமுள்ளதாயிற்று. கெட்ட நண்பர்களின் கூட்டத்திலிருந்து விலக முடிந்தது. ஒரு பதிப்பகம் தொடங்கிப் பல நூல்களை வெளியிட முடிந்தது; சிலருக்கு வேலை வாய்ப்புத் தர முடிந்தது. உத்தியோகம் என்ற 'நரகத்தி'லிருந்து விடுபட்டேன்.

— ப. வேலாயுதப் பெருமாள்,
சென்னை—5.

சோகமான முடிவு!

உமையாள்புரம் நடுநிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றிய என் தாத்தா ஓய்வு பெறுவதற்கு ஒரு மாதம் முன்னதாகவே சுரத்தில்லாமல் இருந்தார். ரிடயர் ஆன தினத்தன்று பள்ளியில் உள்ள கோயில் சந்நிதியில் நின்று கொண்டு 'கோவிந்தா! கோவிந்தா!' என்று அரற்றினார். அதற்குப் பின்பும் தூக்கத்தில் பாடம்



நடத்துவதாக நினைத்துக் கொண்டு உளறிக் கொட்டுவார். காலையில் எழுந்து ஒருமுறை பள்ளிவரை நடந்து போய்விட்டு வருவார். இப்படியே புத்தி பேதலித்துப் போய்ச் சோக மான முடிவைத் தேடிக் கொண்டார்.

— வே. விஜயகுமாரி, மயிலாடுதுறை.

தந்தை வழி கற்ற தொழில்

துறைமுகத்துறையில் துடிப்பாகப் பணியாற்றி வந்த எனது நண்பர் ஓய்வு பெற்ற பிறகு எப்படிக் காலம் தள்ளுவது என்று திகைத்தார். இளமையில் அவர் தம் தந்தையிடம் பெற்ற வைதீகம் கை கொடுத்தது. புரோகிதர் தொழிலில் ஈடுபட்டு மன நிறைவைத் தேடிக் கொண்டார். அவ்வப்போது உபன்யாசங்களும் செய்து வருகிறார்.

— பூ. வெங்கடேசன்,
வைத்தீஸ்வரன் கோயில்.

திகட்டாத இன்பம்

என் கணவர் ரிடயர் ஆன பிறகுதான் எங்க்ள் வாழ்க்கையே இனிக்க ஆரம்பித்தது. அதுவரையில் ஓயாமல் ஊர் போய்க் கொண்டிருந்த என் கணவர் வீட்டில் தங்கி எங்களுடன் நேரத்தைக் கழிக்க ஆரம்பித்தார். அதுவரை கவனிக்க முடியாமல் போன பல காரியங்களைக் கவனித்தார். என் சமையலை ரசித்துச்சாப்பிட்டார், தோட்டம்போட்டார், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களோடு பழகி அவர்களுக்கு உதவிசெய்யலானார். அளவான சாப்பாடு, மிதமான நித்திரை, தேவையான அளவு ஓய்வு, தமாஷான பேச்சு..... என்று எங்கள் வாழ்வில் ஒரு நிமிஷம்கூட அலுப்புத் தட்டாமல், விணாகாமல் கழிந்து வருகிறது.

— வனஜா கிருஷ்ணமூர்த்தி,
சென்னை—4.

உறவுகள் ஏற்படுத்திய நெருக்கடி

என் நண்பர் ரிடயர் ஆன நேரம், அவர் தலைமகன் வீடு கட்ட ஆரம்பித்த நேரம்; வேலையில்லாப் பட்டதாரியான இரண்டாவது மகன் தொழில் ஆரம்பிக்க முதல் தேடிக் கொண்டிருந்த நேரம், மாப்பிள்ளை மேல்படிப்புக்காக அமெரிக்கா போகப் பொருள் உதவி கோரி நின்ற நேரம்..... பாவம்; நண்பர்! ரொக்கத் தொகையாகக் கிடைத்த பணத்தை எல்லோருக்குமாகப் பங்கு போட்டுக் கொடுத்துவிட்டு, 'அம்போ' என்று உட்கார்ந்துவிட்டார்!

— பி. எஸ். ரெங்காச்சாரி, திருச்சி—8.

ப்ளோப்ளாஸ்ட் வழங்கும் வி.ஐ.பி. ஸூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

எஸ். ஜெயராமன்,
50, 18வது கிராஸ்,
மல்லேஸ்வரம்,
பெங்களூர்—560 055.

A ஃபார் ஆப்பிள் M ஃபார் மர்டர்

ஒரு வாய் விஸ்கியை நெருப்பு மாதிரி விழுங்கிவிட்டுப் பிரபுவை ஏறிட்டான் சந்திர போஸ். பிரபு டம்ளரைக் கையில் வைத்துக் கொண்டு அவனையே பார்த்தார்.

சந்திரபோஸ் சொன்னான் : ''பாஸ்! கீதா நமக்கு எவ்வளவோ விஷயங்கள்ல உதவியா இருந்திருக்கா. அவளைத் தீர்த்துக் கட்டறதுல எனக்கு உடன்பாடில்லே... வேணுமானா ஒண்ணு செய்யலாம்...''

''சொல்லு...''

''கீதாவைக் கொஞ்ச நாளைக்கு நம்ம கல்கத்தா பிராஞ்சுக்கு அனுப்பிச்சுடலாம். இந்த அமளியெல்லாம் ஓய்ஞ்ச பின்னாடி அவளை மறுபடியும் நம்ம பிராஞ்சுக்கே கூப்பிட்டுக்கலாம்...

பிரபு லேசாய் எரிச்சல்பட்டு நிமிர்ந்தார். ''ஏன் அவளைத் தீர்த்துக் கட்டறதுல உனக்கென்ன கஷ்டம்...?''

''ஸாரி பாஸ்... அது என்னால் முடியாது...''

காரணம்?''

''ஐ லவ் ஹர்... ஷி லவ்ஸ் மீ...''

பிரபுவின் கண்கள் இடுங்கின..

''ஐஸிட்... எத்தனை நாளா...?''

''ரெண்டு மாசமா.''

''நான் இதை எதிர்பார்க்கலே சந்திர போஸ்... ஓ. கே. எனி ஹௌ மை ஹார்ட்டி கங்கிராட்ஸ்...கீதாவைஉன்னோடயோசனைப் படி கொஞ்ச நாளைக்குக் கல்கத்தா பிராஞ்சுக்கு அனுப்பிச்சுடுவோம்...''

''தேங்க்யூ பாஸ்...''

ராஜேஷ்குமார்

போலீஸ் ஸ்டேஷன் அசாத்தியமான பரபரப்பில் இருந்தது. இன்ஸ்பெக்டர் கோகுல்நாத் கன்னியப்பனை விசாரித்துக் கொண்டிருந்தார். கன்னியப்பன் நிறையக் கலைந்து போயிருந்தான். போலீஸ் சிகிச்சையில் நிறைய அடிபட்டு — உதட்டோரம் மெலிதாய் ஒரு ரத்தக் காயம் வாங்கி — அழுது அழுது கண்களும் முகமும் வீங்கி... லாக்கப் சுவரோரம் சரிந்திருந்தான்.

''ம்... சொல்லு... எதுக்காக அந்தக் கொலை...?''

இன்ஸ்பெக்டர் கோகுல்நாத் கேட்க — கன்னியப்பன் கைகூப்பினான். ''ஸார்... சத்தியமா.,.. எனக்குப் பொறக்கப் போற குழந்தை மேலே சத்தியமா... நான் அந்தக் கொலையைப் பண்ணலை ஸார்...''

கோகுல்நாத் அவனைப் பார்த்துப் புன்னகைபுரிந்தார்.''இதோபார்...கன்னியப்பா. மாட்டிக்காத வரைக்கும் எத்தனை பொய்களை வேணுமின்னாலும் சொல்லலாம்... மாட்டிக்கிட்ட பின்னாடி –எதையுமே மறைக்கக் கூடாது... ஒருத்தன்கிட்டேயிருந்து உண்மையை வரவழைக்கிறதுக்காக — போலீஸ் நிறைய சிகிச்சைங்க வெச்சிருக்காங்க... இன்னிக்கு உன்கிட்ட காட்டினது வெறும் ஆரம்ப சிகிச்சைதான்... இந்த ஆரம்ப சிகிச்சைக்கே உன்னோட உடம்பு தாங்கலை... பேசாமே உண்மையை ஒத்துக்கிட்டு வாக்கு மூலம் எழுதிக் குடு.... தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையா குறைக்க நான் ஏற்பாடு பண்றேன்...''

கன்னியப்பனின் விழிகளில் புதிதாய் நீர் சுரந்தது. ''ஸார்,... நிஜமாகவே நான் அந்தக் கொலையைப் பண்ணலை ஸார்... என்னோட டாக்ஸியில ஏறின பொண்ணு... ஈகா தியேட்டராண்டயே எறங்கிப் போயிட்டா ஸார்... எனக்கு வேண்டாதவங்க யாரோ... ஒரு பொண்ணோட பொணத்தைக் கோணிப் பையில கட்டி — என் டாக்ஸி டிக்கியில கொண்டாந்து போட்டிருக்காங்க ஸார்...! நான் சொல்றதை நம்புங்க ஸார்...''

''நீ டாக்ஸியோட டிக்கியைக் கடைசியா எப்போ திறந்து பார்த்தே?'' கோகுல்நாத் கேட்கக் கண்ணீரோடு யோசித்தான் கன்னியப்பன். அரை நிமிஷ யோசனைக்குப் பின் சொன்னான். ''ஒரு கல்யாண பார்ட்டியை ஏத்திக்கிட்டுத் தாம்பரம் வரைக்கும் போயிருந்தேன் ஸார்... அங்கே டிக்கியைத் தொறந்துலக்கேஜெல்லாம்வெளியேஎடுத்து வெச்சேன்... அது தான் கடைசியா நான் டிக்கியைத் தொறந்தது ஸார்... அதுக்கப்பால நான் எங்கேயும் டிக்கியைத் தொறந்து பார்க்கலை ஸார்...''

''வழியிலே எங்கேயாவது டாக்ஸியை நிறுத்தினியா? சவாரி ஏத்துக்கிட்டியா ...?''

சவாரி ஒண்ணும் கிடைக்கல்ல ஸார்... எம்டியாத்தான் வந்தேன். பல்லாவரத்துக்குப் பக்கத்துல ஒரு சாராயக்கடையாண்டை வண்டியை நிறுத்தி நூறு மில்லி சாராயம் சாப்பிட்டேன் ஸார்... அப்புறம் நேரா சென்ட்ரலுக்கு வந்தேன்... ஒரு பொண்ணு வந்து டாக்ஸி

யில ஏறினு...''

''அந்தப் பொண்ணு கையில லக்கேஜ் இருந்ததா...?''

''தோள்ல சின்னதா ஒரு பையை மாத்திரம் தொங்கப் போட்டிருந்தா!''

''அந்தப் பொண்ணு எப்படியிருந்தா?''

''மழை தூறிட்டிருந்த அந்த மசமசப்பான இருட்டுல அந்தப் பொண்ணை நான் சரியா பார்க்கலே ஸார்... அமிஞ்சிக்கரை போகணும்னு சொல்லி ஏறி உட்கார்ந்துட்டா...''

''அந்தப் பொண்ணுகிட்டே நீ ஒண்ணும் தகராறு பண்ணலையா?''

''பண்ணலே ஸார்...''

''நீ தகராறு பண்ணினதா... பேர்ல யாரோ கம்ப்ளெய்ண்ட் பண்ணியிருக்காங்களே... அது பொய்யா...?''

''ப்ச்சைப் பொய் ஸார்...''

''உனக்கு வேண்டாதவங்க யாரோ பொணத்தை டிக்கியில வெச்சிருப்பாங்கன்னு சொன்னியே? அவங்க யார்ன்னு சொல்ல முடியுமா?''

''தெரியலே ஸார்...''

புன்னகை செய்தபடியே கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் கோகுல்நாத் சட்டென்று முகம் கடுமையானார். ''பொய்யை நம்பற மாதிரி சொன்னு அது உண்மையாயிடாது கன்னியப்பா... நீ



அந்தக் கொலையை எப்படிப் பண்ணியிருப் பேன்னு நான் சொல்லட்டுமா?''

''ஸார்...''

''டாக்ஸி டிரைவர்ஸ் வண்டியோட்டும் போது போதையில இருக்கக் கூடாதுங்கிறது ஒரு விதி. ஆனா நீ குடிபோதையில இருந் திருக்கே... சென்ட்ரல்ல அந்தப் பொண்ணு உன்னோட டாக்ஸியில ஏறியிருக்கா... குடி போதையில இருந்த நீ அந்தப் பொண்ணு கிட்டே தப்பா ஏதோ பேசியிருக்கே... அந்தப் பெண் பதிலுக்கு உன்னைத் திட்டியிருக்கா.... ஆத்திரமடைஞ்சநீஅவளைத்தாக்கியிருக்கே... அவ செத்துட்டா... பாடியை டிஸ்போஸ் பண்றதுக்காக ஒரு கோணிப்பையில் பாடியை நுழைச்சு... டிக்கியிலே அடைச்சு வெச்சே... உன்னோட துரதிர்ஷ்டம் நீயும் அந்தப் பொண்ணும் போட்ட சண்டையை சாலையோடு போன யாரோ ஒருத்தன் கவ னிச்சு.... அவசர போலீஸுக்கு போன் பண் ணிட்டான். நீ மாட்டிக்கிட்டே...''

கோகுல்நாத் சொல்லச் சொல்ல —

பலமாய்த் தலையை ஆட்டி மறுத்தான் கன்னியப்பன்.

''நீங்க சொன்னதுதான் பொய் ஸார்... அந்தப் பொண்ணோட மூஞ்சியைக் கூட நான் சரியாப் பார்க்கலே ஸார்...''

''ஊஹூம்...நீ தேற மாட்டே... இன்னிக்கு ராத்திரி முழுதும் ரெட் ரூம்ல வெச்சு... உன் னோட ஒவ்வொரு நரம்பையும் உருவினாத் தான் உண்மையைச் சொல்லுவே போலி ருக்கு...'' சொல்லிக் கொண்டே கோகுல்நாத் லாக் — அப்பை விட்டு வெளியே வந்தார்.

சப் — இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் மெல்லிய புன்முறுவலோடு கேட்டார். ''கன்னியப்பன் என்ன ஸார் சொல்றான்?''

''கீறல் விழுந்த ரிகார்ட் மாதிரி அவன் சொன்னதையே திருப்பிச் சொல்கிறான். சாராயம் குடிச்சுட்டு வண்டி ஓட்டியிருக் கான். ராத்திரிநேரம். மழைக்காலம். அழகான பொண்ணு கார்ல ஏறியிருக்கா. இவன் சும்மா இருந்திருப்பானா...? தகராறு செஞ்சி ருக்கான்... கொலை பண்றதுக்கான மோடிவ் அற்புதமா இருக்கே...! கேஸ் கோர்ட்டுக்குப் போனா — இந்தக் கன்னியப்பனுக்குத் தூக்குத் தண்டனை வாங்கித் தரப் போகிற — முதல் சாட்சியமே — இந்தச் சாராய போதை தான்...''

நவநீதகிருஷ்ணன் சிரித்தார்.

''டாக்ஸி யோட பின்சீட்டுலே கிடந்த அந்த வானிடி பேக் இன்னொரு முக்கியமான சாட்சி ஸார்...''

''பொண்ணோட அப்பாவையும், அம்மா வையும் கூட்டிட்டு வர்றதுக்காகப் போன கான்ஸ்டபிள் இன்னும் வரலையா நவநீத கிருஷ்ணன்...?''

''வரலே ஸார்...''

''சரியான அட்ரஸைத்தானே குடுத்து விட் டீங்க...?''

''ஆமா ஸார்... வானிடி பேக்ல இருந்த அந்த இண்டர்வியூ கார்டுலயாமினி, டாட்டர் ஆஃப் திருஞானம், 19, பழனியப்பா நகர், அமிஞ்சிக்கரைன்னு இருந்த அட்ரஸைக் கொடுத்து விட்டிருக்கேன். கான்ஸ்டபிள் இந்நேரம் வந்திட்டிருப்பார்....'' — சொல்லச் சொல்ல கோகுல்நாத் வாசலை எட்டிப் பார்த் தார்.

''ஆமா... வாசல்லே என்ன கும்பல்...?''

''அந்தக் கன்னியப்பனோட சம்சாரம்... ஸ்டேஷன் வாசல்ல உட்கார்ந்துட்டு இந் நேரம் ஒரே ஒப்பாரி ஸார்... ரோட்ல வர்ற வன் போறவன் வேடிக்கை பார்க்க நின்னுக் கிறான். அந்தப்பக்கமா போய் உட்கார்ந்துட்டு அழு ன்னு நான்தான் தொரத்திட்டு வந் தேன்...''

''அவனோட சம்சாரம் கர்ப்பமா இருக்கா போலிருக்கு...''

''ஆமா ஸார்...''

கோகுல்நாத் நாற்காலியில் சாய்ந்தார். ''யாரையாவது அனுப்பி டீ வாங்கிட்டு வரச் சொல்லுங்க நவநீதகிருஷ்ணன். கன்னியப்ப னோடு பேசினதுலே மண்டையிடி ஆரம்ப மாயிடுச்சு...''

நவநீதகிருஷ்ணன் வாசலை நோக்கி நகர்ந்த அதே விநாடி — ஸ்டேஷன் வாசலில் அந்த ஆட்டோ வேகமாய் வந்து நின்றது.

முதலில் கான்ஸ்டபிள் இறங்க —

அவரைத் தொடர்ந்து திருஞானமும், ஆனந்தியும் இறங்கினார்கள். திருஞானத்தின் முகம் இருட்டடித்திருந்தது. ஆனந்தி வெகு வாய் அழுது ஒரு கரும்புச் சக்கை மாதிரி உலர்ந்து போயிருந்தாள். ''அய்யா... போலீஸ்கார அய்யா... எம் பொண்ணுக்கு ஒண்ணுமில்லையே...'' ஒரு குழந்தை மாதிரி கேட்டுக் கொண்டே வர — கான்ஸ்டபிள் பதில் சொல்லாமல் ஸ்டேஷனுக்குள் வந் தார். கோகுல்நாத்திடம் சொன்னார்.

''பொண்ணோட பேரண்ட்ஸ் இவங்கதான் ஸார். அந்த அம்மாவைச் சமாதானப்



''சின்ன முள் பத்துலேயும், பெரிய முள் ஆறுலேயும் இருந்தா மணி என்னடா? தெரியுமா?''

''போங்க ஸார்! டிஜிடல் வாட்ச் வந்துட்ட இந்தக் காலத்திலே போய் இப்படிப் புதிர் போடறீங்களே!''



கென்னடி அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் நின்றபொழுது அவரை எதிர்த்து நிக்ஸன் போட்டியிட்டார்.

பெண்கள் கூட்டம் ஒன்றில் நிக்ஸன் பேசினார். ''கென்னடி பொய் சொல்லக் கூடியவர்; அவருக்கு ஓட்டுப் போடாதீர்கள்'' என்றார்.

சற்று நேரம் கழித்து, அதே பெண்கள் கூட்டத்தில் கென்னடி பேசினார். ''என்னைப் பொய்யன் என்று நிக்ஸன் சொன்னார். நீங்கள் (பெண்கள்) மிகவும் அழகானவர்கள் என்று நான் சொல்லுகிறேன். நான் சொல்லுவது பொய்யா?'' என்று ஒரு போடு போட்டார், கென்னடி!

— எஸ். முகம்மது யூசுப்.

படுத்திக் கூட்டிட்டு வர்றதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிடுச்சு ஸார்...''

கோகுல்நாத் திருஞானத்தையும், ஆனந்தியையும் ஏறிட்டுப் பார்த்து நாற்காலிகளைக் காட்டி, ''உட்காருங்க'' என்றார்.

திருஞானம் நாற்காலியில் ஒரு பொம்மை மாதிரி உட்கார்ந்துகொண்டே கம்மிப்போன குரலில் கேட்டார்: ''ஸார் எம் பொண்ணு யாமினிக்கு ஒண்ணும் ஆபத்தில்லையே...?''

அவருடைய கேள்விக்குக் கோகுல்நாத் பதில் சொல்வதற்குள் ஆனந்தி ஆர்வம் தெறிக்கக் கேட்டாள்: ''யாமினி இப்போ எங்கே இருக்கா இன்ஸ்பெக்டர்..? இந்தப் புயல் மழைல இண்டர்வியூவுக்குப் போறாளேன்னு பதறிக்கிட்டிருந்தேன். பத்திரமாய் இருக்கா இல்லையா?''

கோகுல்நாத் கையமர்த்தினார். ''பொண்ணைப் பார்க்கப் போலாம்... மொதல்ல நான் கேட்கிற கேள்விகளுக்குப் பதிலைச் சொல்லுங்க...''

''கேளுங்க இன்ஸ்பெக்டர்...''

''உங்க பொண்ணு யாமினி எத்தனை மணிக்குஇண்டர்வியூ அட்டெண்ட் பண்ணப் போனா...?''

''காலையில்எட்டுமணிக்கேபோயிட்டா...''

''சாயந்திரம்வீட்டுக்குத்திரும்பி வரலே...?''

''வரலே இன்ஸ்பெக்டர்... அவளுக்காகத்தான் காத்திட்டிருந்தோம்... போலீஸ்ல கூடத் தகவல் சொல்ல இருந்தோம். அதுக்குள்ளே இந்தக் கான்ஸ்டபிள் வந்தார்...''

''இண்டர்வியூ எத்தனை மணிக்கு முடிஞ்சதுன்னு தெரியுமா?''

''நாலரை மணிக்கே இண்டர்வியூ முடிஞ்சாச்சு இன்ஸ்பெக்டர். மழை அதிகமா இருந்ததினால நானே அவளைக் கூட்டிக்கிட்டு வர்றதுக்காக இண்டர்வியூ நடக்கிற அந்தக் கம்பெனிக்குப் போனேன்... அதுக்குள்ளே யாமினி அங்கிருந்து புறப்பட்டுட்டா... அவ இண்டர்வியூல செலக்ட் ஆகியிருக்கிற விஷயத்தைச் சொல்லி— அந்தக் கம்பெனி எம். டி. அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை ஸ்பாட்லேயே அடிச்சு என் கையில குடுத்துட்டார்..''

''நீங்க வீட்டுக்கு வந்து பார்த்தப்போ... யாமினி இன்னும் வரலே...?''

''வரலே ஸார்...''

கோகுல்நாத் தொப்பியைக் கழற்றி — மேஜையின் மீது வைத்துவிட்டு — நெற்றியைக் கீறிக் கொண்டே திருஞானத்தைப் பார்த்துச் சொன்னார். ''உங்க பொண்ணு யாமினி சென்ட்ரல் ஸ்டேஷன்லயிருந்து ஏழு மணி சுமாருக்கு ஒரு டாக்ஸியில ஏறி— அமிஞ்சிக்கரை வர புறப்பட்டிருக்கா... வழியில... டாக்ஸி டிரைவர்... உங்க பொண்ணுகிட்டே சண்டை போட்டுத் தகராறு பண்ணியிருக்கான். அவன் குடிச்சிருந்ததாலே அந்தப் போராட்டம் அளவு மீறிப்போக உங்க பொண்ணு யாமினி இறந்துட்டாங்க...''

திருஞானமும், ஆனந்தியும் தட்டென்று அதிர்ந்துபோய் எழுந்து நின்றார்கள்... ''எ... எ...என்ன சொ...ன்...னீங்க...யா..மி..னி..?''

''ஸாரி டு ஸே திஸ்... எனக்கு வேற வழியில்லே... முகம் அடையாளம் தெரியாம இருக்கிறதுக்காக — அமிலத்தை ஊத்தி முகத்தைச் சிதைச்சிருக்கான் அந்த டிரைவர்... நீங்க இப்போ என்கூட வந்து பாடியை உங்க பொண்ணு இல்லையான்னு அடையாளம் காட்டணும்... ப்ளீஸ்-கம்...''

ஆனந்தி வீறிட்டாள்.

''நிச்சயமா... அது எங்க யாமினியா இருக்காது... இன்ஸ்பெக்டர்.,.. வாங்க அடையாளம் காட்டறோம்... எம் பொண்ணுக்கு அடுத்த மாசம் கல்யாணம் இன்ஸ்பெக்டர்... அவ செத்திருக்க மாட்டா.,.. நிச்சயமா அவ செத்திருக்க மாட்டா... அடையாளம் நான் காட்டறேன் வாங்க... இன்ஸ்பெக்டர்... செத்தது வேற யாரோ... எம் பொண்ணு உயிரோடுதான் இருப்பா... எம் பொண்ணு உயிரோடுதான் இருப்பா... எம் பொண்ணு உயிரோடுதான் இருப்பா...''

சிரித்து, அழுது — அழுது, சிரித்து — பேசிக்கொண்டிருந்த ஆனந்தியைக் கண்களில் நீர் திரள நெருங்கினார் திருஞானம். அவள் கையைப் பற்றிக்கொண்டு— மெல்ல கோகுல்நாத்தைப் பின்தொடர்ந்து ஜீப்புக்குப் போனார்.

மார்ச்சுவரியில் கிடத்தப்பட்டிருக்கும் தம் மகள் யாமினியைப் பார்த்து அடையாளம் சொல்வதற்காக— ஆனந்தியும் திருஞானமும் ஜீப்பில் ஏறி உட்கார்ந்தார்கள்.

ஜீப், ஜி. ஹெச்சை நோக்கி மோப்பம் பிடித்துக் கொண்டு ஓடியது.

(தொடரும்)

மரம் வெட்டு விழாக்கள்!

நான் கல்லூரிக்குப்போகும்போதும்வரும்போதும் மனசு கனக்க, துயரம் மேலோங்க, சோகமாகி விடுகிறேன். கல்லூரி போகும் வழியில் (மதுரை ரோடு) இதுகாறும் நிழல் தந்து, சமையலுக்கு புளி தந்து உதவிய புளிய மரங்களை, உயிரோடு இன்னும் பல வருடங்கள் வாழவிருக்கும் அம்மரங்களை அநியாயமாக வெட்டிச் சாய்த்துவிட்டார்கள். காரணம் விசாரித்ததில் அருகில் புதிதாகக் கட்டப்பட்ட சினிமா தியேட்டருக்கு அவை தோற்றப் பொலிவு கொடுப்பதற்குத் தடையாக இருக்கிறதாம். எனவே சம்பந்தப்பட்ட ஹைவேஸ் அதிகாரிகளுக்குக்கொடுக்க வேண்டியன கொடுக்கப்பட்டு 'பட்ட மரம்' என சர்டிபிகேட் வழங்கப்பட்டு மரங்கள் தீர்க்கப்பட்டுள்ளன.

'வீட்டுக்கு ஒரு மரம்' என ஒரு பக்கம் பிரசாரம், இப்படி கஷ்டப்பட்டு வளர்த்த மரங்களைத் தனி நபர் சௌகரியங்களுக்காக வெட்டுவது ஒரு பக்கம்!

— து. ரவி, திருப்புத்தூர்.

சீர் கெட்ட உடை

மக்களின் வரிப் பணத்தை ஏகமாய்ச் செலவு செய்து இலவச சீருடை என்ற பெயரில் அரசு பள்ளிச் சிறுமிகளுக்குக் கொடுக்கும் சட்டைப் பாவாடைகளைப் பார்க்கும்போது மிகவும் கஷ்டமாக உள்ளது. காரணம், அச்சிறுமிகளின் பாவாடைகள் முட்டிக்கு மேல் பாதி தொடை வரைதான் வருகிறது. பார்ப்பதற்கு சர்க்கஸ் காரிகளைப் போலவும், ரெகார்ட் டான்ஸ் ஆடும் பெண்களின் உடையைப் போலவும் இருக்கிறது. அரசேதான் இந்த அளவில் தைக்க வேண்டும் என்று சொல்கிறதா? அல்லது இடைத்தரகர்கள் துணியை மிச்சப்படுத்திக் கொள்ளை லாபம் அடிக்கிறார்களா தெரியவில்லை.

— லி. சின்னத்தம்பி, பள்ளவள்ளி.

வீடியோ சூதாட்டம்

சென்னையில் பல இடங்களில் வீடியோ கேம்ஸ் என்ற போர்வையில் சூது நடக்கின்றது. இதைப் பற்றிக் காவல் துறை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. குழந்தைகள், மாணவர்கள், பெரியோர்கள் கூட இதில் ஈடுபட்டு நேரத்தையும் பணத்தையும் விரயம் செய்கிறார்கள்.

— வீ. மனோகரன், சென்னை—18.

ஸிலிண்டரில் கொள்ளை!

காஸின் விலை ரூ 10/— உயர்த்தப்பட்டது என்று அறிவிக்கப்பட்ட உடனே, மறுநாள் காலையிலிருந்து ரூ 68.30 (பழைய விலை ரூ 58.30) என்ற விலைக்கு ஸிலிண்டர்கள் சப்ளை செய்யப்பட்டன. மக்களின் போராட்டத்திற்கு மனம் இரங்கிய அரசு அதன் விலையை சற்றே குறைத்தது. இது அறிவிக்கப்பட்டது 5.2.86 இரவு. ஆனால் 6.2.86, 7.2.86 இரண்டு நாட்கள் சப்ளை செய்யப்பட்ட சிலிண்டர்களின் விலை குறைக்கப்படாமல் அதே ரூ 68.30 விலைக்கு பட்டுவாடா செய்யப்பட்டது. இதை அந்த ஏஜெண்டுகளிடம் கேட்டபொழுது 'எங்களுக்கு ஆர்டர் வரவில்லை. ஐ.ஓ.ஸி.யில் கேளுங்கள்' என்றார்கள். விலை ஏற்றத்திற்கு உடனே அனுப்பப்பட்ட ஆர்டர், விலை குறைக்கப்பட்டபொழுது உடனே அனுப்பப்படாதது ஏன்? நம்மைத் தட்டிக் கேட்க யாரும் இல்லை என்ற எண்ணமா?

— எஸ். காவேரி, மதுரை.

வழியில் இருக்கிறது மரகதம் வீடு!

அன்னம்

மூத்துக்கண்ணு அடுத்தபடி லாரியில் சரக்கு ஏற்றிப் போக வேண்டிய ஊர் பெங்களூர். இதைத் தெரிந்து கொண்டவுடன் அவனுக்கு மிக மிக மகிழ்ச்சி. திருப்தியும்கூட.

அவன் போக வேண்டிய வழியில் இருந்த கிராமம் ஒன்றில்தான் அவன் மாமனார் வீடு. அவனுக்குக் கல்யாணமாகி இரண்டு மாதங்கள்தான் ஆகின்றன. இன்னும் சென்னையில் தனிக் குடித்தனம் வைக்கவில்லை. அவன் மைத்துனிக்கு வரன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் கல்யாணம் முடிந்த பிறகுதான் தன் பெண்ணை அனுப்பப் போவதாகத் திடமாகக் கூறிவிட்டார் அவன் மாமனார்.

அவன் வேலை பார்த்த லாரி கம்பெனி நேர்மைக்கும் நேரம் தவறாமைக்கும் பெயர் பெற்றது. வண்டியில் 'டிரைவர்' மட்டும்தான். 'கிளீனர்' கிடையாது. மாலை ஐந்து மணிக்குச் சென்னையில் வண்டியை எடுத்தால் மறுநாள் காலை ஏழு மணிக்குப் பெங்களூரில் இருக்க வேண்டும்.

கோபால் கடவுளை வேண்டியபடி வண்டியை எடுத்தான். அகர்வால் ஸ்வீட் ஸ்டாலில் வாங்கிய பாதாம் அல்வா, தனியாக ஒரு பொட்டலத்தில் மதுரை மல்லி — அவன் மனைவிக்காக. பழக்கூடை மாமனாருக்காக. அநேகமாக இரவு பத்து மணிக்கு அவன் லாரி அந்த ஊரைக் கடந்து செல்லும். அங்கே இறங்கி ஒரு இரண்டு மணி நேரம் தங்கிவிட்டுப் புறப்பட்டால், காலை எட்டு மணிக்குள் போய்ச் சேர்ந்துவிடலாம். ஒரு மணி நேரம் தாமதத்திற்கு ஏதாவது காரணம் காட்டினால் போகிறது.


அவனுடைய லாரி பெங்களூர் பாதையில் வழுக்கிக் கொண்டு ஓடியது. அவன் கைப்பிடித்த மரகதம் உண்மையில் ஒரு தந்தச் சிலை. எடுப்பான அழகு. சிரிக்கும் போது கன்னங்களில் குழி விழும். ஏதோ பூர்வ ஜன்ம புண்ணியத்தால்தான் தனக்கு அவள் கிடைத்திருப்பதாக அவன் நம்பினான்.

லாரியைக் குறிப்பிட்ட வேகத்திற்கு மேல் ஓட்டக் கூடாது. அப்படிச் செய்தால் கம்பெனியில் அதற்காகத் தனியாகப் பொருத்தி வைக்கப்பட்டிருந்த சாதனம் வரைபடம் காட்டிக் கொடுத்துவிடும். காஞ்சீபுரத்திற்குப் பக்கத்தில் ரயில்வே கேட் அடைத்திருந்தது. அரை மணிக்கு மேல் காக்கும்படி ஆகியது. சம்பந்தப்பட்ட எல்லோரையும் முத்து சபித்தான்.

மாமனார் வீட்டை அவன் அடைந்தபோது இரவு மணி பதினொன்று. அவனுடைய எதிர்பாராத வரவு எல்லோருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. பேச்சிலும் குசலம் விசாரிப்பதிலும் மணி பன்னிரண்டு ஆகிவிட்டது. மாமியார் மருமகனுக்காகத் தோசை தனியாகச் சூடாக ஊற்றிப் போட்டாள். மரகதத்தைத் தனியாகச் சந்திக்கும்போது மணி ஒன்று. அவனுக்கும் புறப்பட மனமில்லை. சற்றுக் கண்ணயர்ந்தால் — ஒரு பத்து நிமிஷம் மட்டும் படுத்தால் என்ன என்று தோன்றியது. அப்படி அயர்ந்து போய் உறங்கும் ஒருவனை எழுப்புவது மரகதத்திற்குப் பாவமாகப் பட்டது.

முத்து கண் விழித்தபோது காலை மணி ஆறு. துடித்துப் போய்விட்டான். நிச்சயம் இவனுக்குச் சீட்டு கிழியப் போகிறது. அவன் ஆபீஸிலிருந்து சரியாகப் பத்து மணிக்கு டெலிபோனில் பெங்களூரை விசாரிப்பார்கள். லாரி வரவில்லை என்று தெரிய வந்தால், கவலைப்பட்டு இடைப்பட்ட ஊர் ஏஜெண்டுகளுடன் டெலிபோனில் பேசி லாரியைத் தேட ஏற்பாடு செய்வார்கள்.

அவன் கைப்பிடித்த மரகதம் உண்மையில் ஒரு தந்தச் சிலை. எடுப்பான அழகு. சிரிக்கும்போது கன்னங்களில் குழி விழும். ஏதோ பூர்வ ஜன்ம புண்ணியத்தால்தான் தனக்கு அவள் கிடைத்திருப்பதாக அவன் நம்பினான்.



மேலட்டையில்.......

நந்தினி

வண்ணப்படங்கள் : யோகா.

முத்து அவசரம் அவசரமாகப் புறப்பட்டான். என்ன காரணம் காட்டித் தப்பிப்பது? வண்டியில் கோளாறு என்றால் உடனே மணி போட்டு மைல் கல் குறித்து, 'டிரிப் ஷீட்'டில் எழுத வேண்டும். பக்கத்துத் தபால் அலுவலகம் போய்க் கிட்டத்தில் எந்த ஏஜெண்ட் ஆபீஸ் இருக்கிறதோ அங்கேயும் தலைமை ஆபீஸிற்கும் தெரியப்படுத்த வேண்டும்.

மன உளைச்சலுடன் அவன் பெங்களூரை அடைந்தபோது பிற்பகல் மணி இரண்டு. காலை டிபன், பகல் சாப்பாடு எதுவுமே அவன் சாப்பிடவில்லை.

அவன் சரக்கு இறக்க வேண்டிய கம்பெனி வாசலில் ஏகக் கூட்டம். அந்தக் கம்பெனி நொடித்துப் போய்விட்டதாம். காலையில் தான் கோர்ட் உத்தரவுடன் வந்து கடன்காரர்கள் 'ஸீல்' வைத்துவிட்டுப் போனார்களாம்.

முத்துவுக்குத் தெம்பு வந்தது. சென்னைக்கு டெலிபோனில் விஷயத்தைச் சொன்னான். நேரம் ஆனதைப் பற்றி யாரும் ஒன்றும் கேட்கவில்லை. வண்டியைச் சரக்குடன் திரும்பச் சென்னைக்கே ஓட்டி வரச் சொன்னார்கள்.

வண்டியை உற்சாகமாகத் திருப்பி ஓட்டினான். மீண்டும் மாமனார் வீட்டில் நிறுத்தி, பெங்களூரில் வாங்கிய ஆப்பிள்களை மரகதத்தின் கரங்களில் திணித்து, அவைகளை அவள் கன்னங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துவிட்டுப் புறப்பட்டான்.

கம்பெனியில் அவனுக்கு நல்ல வரவேற்பு. ''நல்லவேளை.... சரக்கு 'டெலிவரி' ஆகியிருந்தால் அத்தனையும் முடங்கிப் போயிருக்கும். நஷ்டம் ஆகியிருக்கும். முத்து தாமதமாகப் போனதால் பிழைத்தது'' எனப் பாராட்டினார்கள்.

கம்பெனி மானேஜர் அவனைக் கூப்பிட்டு அனுப்பினார். முத்து தன் சட்டைக் காலரைத் தூக்கி விட்டபடி போனான்.

''முப்பதாயிரம் ரூபாய்ச் சரக்கை நீ திருப்பிக் கொண்டு வந்ததில் அனுப்பியவருக்குப் பரம திருப்தி. உனக்கு ஆயிரம் ரூபாய் இனமாகக் கொடுத்திருக்கிறார்! எடுத்துக் கொள்!'' என ஒரு கவரை நீட்டினார். முத்து பெற்றுக் கொண்டான்.

இந்தப் பணத்தில் மரகதத்திற்கு என்ன வாங்கலாம்?

''என்ன இருந்தாலும் சரியான காரணம் இல்லாமல் நீ லாரியைத் தாமதப்படுத்தியது கம்பெனியின் விதிகளுக்கு முரண் ஆனது. நீ வேலையிலிருந்து நிறுத்தப்படுகிறாய். ஒரு மாதச் சம்பளம் — நோட்டீஸுக்குப் பதில்'' என மற்றொரு கவரையும் நீட்டினார்.

மாலைவிட்டவுடன் மகிழ்ந்த ஆடு ஒன்று வெட்டுப்பட்டுச் சாய்ந்தது போல் துடித்தான் முத்து!

மங்களூரிலுள்ள ஓர் ஓட்டலில் நான் வழக்கமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். ஒருநாள் சாப்பிட்டு முடித்ததும், சர்வர் தந்த 'பில்'லில் 'அபராதம் 0.50 பைசா'' என்று போட்டிருந்தது.

கேஷியரிடம் பணம் தந்தபோது, ''இது என்ன அபராதம்?'' என்று கேட்டேன்.

அவர், ''அதுவா, உங்களுக்குப் போட்ட சாதத்தில் கொஞ்சம் எறிந்திருக்கிறீர்களே! அதற்கான அபராதம்!'' என்றார்.

அதன் பிறகு நான் வேண்டிய அளவு மட்டுமே போட்டுக் சொல்கிறேன். எதையும் எறிவதில்லை!

'மிர்ரர்' பத்திரிகையில் ஒரு வாசகர்.

படித்து ரசித்தவர்: சம்பத்குமாரி.





23.6.86 இதழில் தாய்க்குலம் சாராயம் குடிப்பதை நேரில் கண்டு வியந்து எஸ். முகம்மது ஆகப் எழுதியிருந்தார்.

எங்கள் மோகனூரில் (சேலம்) பெண்களின் சாராயக் கடை (பெண்மணியே நடத்தும் சாராயக் கடை) தாய்க்குலத்தின் பெருமைக்கு மேலும் பெருமை சேர்க்க வல்லது. செழிப்பான முறையில் வியாபாரம் நடக்கிறது!

— எம். சீனு.


காலத்தால் அழியாத
காவியம் படைக்கும்
சில நேரங்கள்.
கடிகாரங்கள்
நாட்டிற்கு நல்ல நேரம் காட்டுவோம்.

வேத வைதீக நூல்கள்

(விலை தபால் செலவு உட்பட)

நாகராக்ஷரம் — (Devanagari Script)

1. ரிக்வேத ஸம்ஹிதா — 10 மண்டலங்கள் — விலை ரூ. 160/—

2. ஸாமவேத அஷ்டப்ராம்மணம் — 3 பாகங்கள் — விலை ரூ. 210/—

முதல் பாகம் — தாண்டியம், ஷட்விம்சம், திருவிசநல்லூர் மஹா மஹோபாத்யாய ஸ்ரீ ராமஸுப்பா சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட ஸாமவேத உத்கர்ஷம்; ஸாமவேத ஸ்வரமாத்ராதி தத்வவிலாஸம், மன்னார்குடி மஹா மஹோபாத்யாய ராஜு சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட ஸாமவேத ஸ்வர விமர்சம்.

இரண்டாம் பாகம் — ஸாமவிதான பிராம்மணம், ஆர்ஷேய பிராம்மணம், ஸாமஸ்வரவிமர்சம், பாணினீய சிக்ஷா, நாரதசிக்ஷா, லோமச சிக்ஷா, கௌதம சிக்ஷா, ஸாமகான சாஸ்த்ரீய ஸம்ப்ரதாயக்ரமம்.

மூன்றும் பாகம் — தேவதாத்யாயம், ஸம்ஹிதோபநிஷத், சாந்தோக்ய மந்த்ரோபநிஷத், வம்சப்ராம்மணம், உத்ஸர்ஜன கர்மதேவ தர்ப்பணம், காம்யப்ரயோகங்கள்.

3. ஸாமவேத ஸம்ஹிதா (ஸ்வரத்துடன்) 2 பாகங்கள் — விலை ரூ. 110/—

பூர்வ பாகம் — ரிக் இல்லாமல் ஆக்னேய ஐந்த்ர கானங்கள் மட்டும்.

இரண்டாம் பாகம் — பாவமான ஆரண்ய சுக்ரீய கானங்கள் மட்டும்.

4. மனுசே ச்லோக & ராமமந்த்ராசே ச்லோக — விலை ரூ. 7/—

(மஹாராஷ்ட்ர பாஷையில் ஸ்மர்த்த ராமதாஸ் இயற்றியது. ஸ்ரீ பீமராவ் கோஸ்வாமி அவர்களின் அருமையான தமிழ் உரையுடன்.

5. ஸ்ரீ ராதாக்ருஷ்ண பூஜா விதானம் — விலை ரூ. 8/—

பல புராணங்களிலிருந்து எடுத்து எழுதியது. ராதா கல்யாணம் செய்வோருக்கு அவசியம் தேவையானது.

6. நளோ தந்தம் (நைஷத காவ்யத்தின் சுருக்கம்) — விலை ரூ. 7/—

7. வேத பாட வழிமுறை (Syllabus) (ரிக், யஜுர், ஸாம) — விலை ரூ. 6/—

வித்யார்த்திகளுக்கு அவரவர்களின் வேதத்தில் எந்த அளவு கற்பிக்கலாம் என்ற விளக்கத்துடன் கூடியது.

நாகராக்ஷரம் — நாகர பதத்திற்கு தமிழ் அர்த்தத்தோடு.

1. ஸ்ரீமத் பாகவதம் — 5 Volumes விலை ரூ. 415/—
2. ஸுந்தர காண்டம் — விலை ரூ. 80/—
3. ஸ்ரீ நாராயணீயம் — விலை ரூ. 55/—

க்ரந்தாக்ஷரம் — (Grantha Script)

1. ஸாமவேத ஸம்ஹிதா (ஸ்வரத்துடன்) — 2 பாகம் — விலை ரூ. 235/—

பூர்வ பாகம் — ரிக், ரிக்பதம், ஸ்தோபபதம், ஆக்னேய, ஐந்த்ர, பாவமான ஆரண்ய, சுக்ரீய கானங்கள்.

இரண்டாம் பாகம் — உத்தர ரிக், ஊஹ ரஹஸ்ய கானங்கள் மற்றும் சாஸ்த்ரீய ஸம்ப்ரதாய கான விளக்கங்களுடன்.

2. சாந்தி குஸுமாகரம் — 2 பாகம் — விலை ரூ. 75/—

3. யாஜுஷ மந்த்ர ப்ரச்னம் — ஏகாக்னி காண்டம் — விலை ரூ. 6/—

க்ரந்தாக்ஷரத்தில் ஸ்வரத்துடன் மணக்கால் பிரம்மஸ்ரீ முத்து ச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள் :

1. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் — விலை ரூ. 65/—
2. போதாயன பூர்வாபர ப்ரயோகம் — விலை ரூ. 70/—
3. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் — விலை ரூ. 60/—
4. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் — விலை ரூ. 25/—

மேலும் விபரங்களுக்கு: அத்வைத வித்யாசார்ய மஹா ராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி, D – 76, மூன்றாவது கிராஸ், ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் — 612 001.

மதுரை மாவட்டத்தில் கப்க்

இரண்டு வாரங்களாக மதுரை மாவட்டத்தில் நமது நிருபர்கள் சுற்றுப் பயணம் செய்து மக்களின் பலகுறைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார்கள். அவை ஒருபுற மிருக்க, மதுரை மாவட்டத்தின் வளர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும்....? ரத்தினச் சுருக்கமாய் விடை யளிக்கிறார் மதுரை நெடுமாறன்:



மதுரை மாவட்டம் மட்டும் என்ன, மற்ற தென்மாவட்டங்களான திருநெல்வேலி இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களும் தொழில் வளர்ச்சியில் பின்தங்கி இருப்பதற்குக் காரணமே அகல ரயில் பாதை இல்லாததுதான். நாட்டில் மூலை முடுக்கெல்லாம் தொடர்பு கொள்ளத் தேவையானது அகல ரயில் பாதை. திருச்சியைச் சுற்றித் தொழிற்சாலைகள் பெருகியதற்குக் காரணமே அகல ரயில் பாதைதான். ஒரு தொழில் அதிபருடன் பேசிக் கொண்டிருந்தபோது அவர் சொன்னார்: ''நான் எனக்கு வேண்டிய மூலப் பொருட்களை வட இந்தியாவில் இருந்து பெற வேண்டும். என் தொழிற்சாலை மதுரை வட்டாரத்தில் இருந்தால் வேகன்களில் வரும்மூலப்பொருட்கள்பிராட்கேஜிலிருந்து மீட்டர்கேஜுக்குமாறவேண்டும். அப்படியே கொண்டு வந்தால்கூட செய்த பொருட்களை மார்க்கெட்டுக்கு அனுப்ப வேண்டும். மறுபடியும் இதே பிரச்னைதான். இதனால், நான் தயாரிக்கும் பொருளின் விலை ஏறுவது மட்டுமல்ல; காலதாமதமும் ஏற்படுகிறது'' என்றார்.

அவர் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை. இன்று டி.வி.எஸ். ஸ்தாபனம் எக்கச்சக்கமான தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கிறது. மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த அந்த நிறுவனம் மதுரை மற்றும் சுற்று வட்டாரத்தில் ஏன் தங்கள் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவில்லை? ஏற்கெனவே சொன்ன காரணம்தான்.

இதை மனத்தில் கொண்டுதான் கரூர்—மதுரை—தூத்துக்குடி அகல ரயில் பாதை

"அகல ரயில் பாதை கொண்டு வாருங்கள்; அப்புறம் பாருங்கள்!"





வெள்ளி மாலை 7 மணி

டி.வி.க்காக முதன்முதலாக ஒரு சீரியல் கதையைப் பதிமூன்று வாரங்களுக்கு வருகிற மாதிரி தயாரித்திருக்கிறார்கள். கதை: ஜெயகாந்தனின் 'பாரீசுக்குப் போ'. டி.வி.க்காகச் சூட்டப்பட்ட தலைப்பு: 'நல்லதோர் வீணை'. விளம்பரதாரர் நிகழ்ச்சியாக, கிளாக்ஸோ நிறுவனத்துக்காக இதை உருவாக்கியவர் தன் கிருஷ்ணசுவாமி அசோசியேட்ஸ். காமெடி தொடர்களையே டி.வி.யில் பார்க்கிறவர்களுக்கு ஒரு சீரியஸ் ஸீரியலைப் பார்ப்பது சற்று வித்தியாசமாயிருக்கும். நிழல்கள் ரவி, பூர்ணம் விசுவநாதன், ஏ.ஆர்.எஸ்., லட்சுமி ஆகியோர் நடிக்கின்றனர். வசனம் ஜெயகாந்தன்தான். அதனால் இயற்கையாக இருக்கிறது.

—சித்தார்த்

திட்டம் போடப்பட்டது. ஆனால் பாஸஞ்சர் ரயிலைவிட மிக மெதுவாக அந்தத் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 70 கோடி மதிப்புள்ள இந்தத் திட்டம் 1984ம் வருடமே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். 50 சதவீதம்கூட இன்னும் நிறைவேறவில்லை. ஒவ்வொரு ஆண்டும் ரயில்வே பட்ஜெட்டில் மிக அற்பமான தொகையை இதற்கு ஒதுக்குகிறார்கள். இந்த வருடம் 3.80 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதில் 2.50 கோடி ரூபாய் நிர்வாகச் செலவுகளுக்கே போய் விடும். இப்படி இருந்தால் திட்டம் எப்படி முன்னேறும்?

அகல ரயில் பாதை தவிர மேலும் இரு திட்டங்களும் மதுரை மற்றும் தெற்கத்திய மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை.

* தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தித் திட்டம்.
* சேது கால்வாய் திட்டம்.

தூத்துக்குடி துறைமுகத்தைப் பொறுத்த வரையில் இரண்டு கட்டமாக வேலை முடிந்து விட்டது. ஆனால் அந்தத் துறைமுகத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியாததன் காரணம் அந்தத் துறைமுகத்தால் பயன் பெறக்கூடிய பிரதேசங்கள் வளர்ச்சி அடையாததுதான்.

சேதுக் கால்வாய்த் திட்டம் பற்றிப் பேச்சு மூச்சு இல்லை. அந்தத் திட்டம் மட்டும் நிறைவேறியது என்றால், மேற்கிலிருந்து கிழக்கே போகும் அத்தனை கப்பல்களும், நமது நாட்டு—அதுவும் தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் நின்று செல்லும் வாய்ப்பு உண்டு. இதன் மூலம் வர்த்தகமும் பெருகும். நான் மேலே சொன்ன மூன்று திட்டங்களும் ஒன்றுக் கொன்றுசம்பந்தப்பட்டவை.இவைமூன்றும் மதுரை மற்றும் தென் மாவட்டங்கள் முன்னேற அவசியத் தேவை.

இன்று மதுரையைச் சுற்றிச் சில நூற்பாலைகளே உள்ளன. நூல், கோயமுத்தூருக்கும், பம்பாய்க்கும் துணியாக நெய்வதற்கு அனுப்பப்படுகிறது.

அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பார்க்க வேண்டிய பல நல்ல இடங்கள் மதுரை மாவட்டத்தில் இருக்கின்றன. ஆனால் ஏர்போர்ட் வசதி போதாது. பெரிய விமானங்களை ஒப்பந்தம் செய்து கொண்டு வரும் அயல் நாட்டினர் சென்னை—மகாபலிபுரத்தைப் பார்த்த கையுடன் திரும்பி விடுகின்றனர். விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தால், டூரிஸ்ட் வருகையும் வருவாயும் அதிகமாகும்.

மதுரை மாவட்டத்தில் போடி பகுதியில் ஏலக்காய் நிறைய விளைகிறது. ஆனால் இன்று ஏலக்காய் மார்க்கெட்டில், ஆப்பிரிக்க நாடுகளும், போட்டி போடத் துவங்கி விட்டன. கிலோ 200 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்த ஏலக்காய் 30 ரூபாய்க்கு இறங்கிவிட்டது. வளைகுடா நாடுகளில் ஏலக்காய்க்கு நல்ல மார்க்கெட் இருக்கிறது. ஏல வாரியம் சற்று வேகமாகச் செயல்பட்டால் அந்த மார்க்கெட்டைப் பிடிக்கலாம். இதனால் ஏல எஸ்டேட் முதலாளிகள் மட்டுமல்ல, அங்கு பணிபுரியும் எக்கச்சக்கமான தொழிலாளர்களும் பயன் பெறுவார்கள்.

உத்தமபாளையம், பெரியகுளம் பகுதியில் மோரீஸ் வாழைப் பழங்கள் உற்பத்தியாகின்றன. மற்றும் பலவித பழங்கள் கொடைக்கானலிலும் சுற்றியும் விளைகின்றன. ஜாம் (JAM) தொழிற்சாலை ஏற்படுத்த நல்ல வாய்ப்பு. வேடச்சந்தூர் பகுதியில் (இப்போது அண்ணா மாவட்டம்) சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது. சிமெண்ட் தொழிற்சாலை அமைக்க முடியும். அகல ரயில் பாதை இல்லாததால் அமைப்பதற்கு யோசிக்கிறார்கள்.

தொகுப்பு: ப்ரியன்

படம்: சுபா

அவளை அம்மா என்று அழைப்பதா?

அந்த மண் சாலையில் தடம் பதித்துக் கொண்டே கார் வந்தது. நின்றது. பின்பு நல் புழுதிப் படலம். காரிலிருந்து அந்த மனிதர் கீழே இறங்கினார். அந்த முன் வழுக்கை கூரிய மூக்கு மாநிறம். எல்லாம் அவரைத் தமிழர் என்று சொல்லியது. சுற்றிலும் பார்த்தார். மணற்பாங்கான பிரதேசத்தில் தென்னை மரங்கள் தென்றலில் தலையசைத்தன. ஓலை வேய்ந்த குடிசைகள் வெயிலில் வாடின.

எதிரில் வந்த ஒருவனை நிறுத்தினார்; "முன்னாவின் வீடு எங்கே இருக்கிறது?" என்று மலாய் மொழியில் கேட்டார்.

அவன் சுற்றுமுற்றும்பார்த்துஒருகுடிசையை நோக்கிச் சுட்டு விரலை நீட்டினான்.

முன்னா குடிசையில் அமர்ந்திருந்தாள். குடிசை பெரிய குடிசை. மேலேதான் ஓலை என்றாலும் உள்ளே சற்று விஸ்தாரமாக இருந்த வீடு. தூண்கள், கூடம். நிழல் நிறைந்த காரிடார். கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு முன்னா கதவைத் திறந்தாள். அவள் முகத்தில் முதுமை நிறைய கீறல்கள் இட்டிருந்தது. தலையில் கருமையான பிரதேசம் குறைந்து வெண்மையும், கரு வெண்மையும் நிறைய இடத்தை ஆக்கிரமித்திருக்க, வந்த அன்னியனைப் பார்த்தாள்.

அவர் செருப்பை வாசலிலேயே களைந்தார். காரிடார் பாயில் அமர்ந்தார். "நீங்கள் தானே முன்னா?"

"ஆம்" என்றாள் முன்னா.

"நான் உங்கள் பெண் ஜாஸ்மினைப் பற்றி பேச வந்திருக்கிறேன்."

"சொல்லுங்கள்."

"ஜாஸ்மின் உங்கள் சொந்தப் பெண்ணா என்ன?"

திடீரென்று முன்னாவின் முகத்தை கரு மேகங்கள் சூழ்ந்தன. உதடுகள் விகாரமாக வளைந்து துடித்தன. கண்ணில் கோப மின்னல். "தயவு செய்து வெளியே போங்கள்" என்றாள் முன்னா.

"அம்மா.... நான் சொல்வதை...."

"வெளியேபோய்விடுங்கள். போங்கள்.... போ.... போ என்றால் போ...."

வந்தவர் அரண்டு போனார். அவசர அவசரமாக எழுந்தார். நிழல் நிறைந்த தோட்டத்தின் வழியே, தென்னைகளுக்குக் கீழே நடந்து காரை நோக்கிப் போனார்.

முன்னா கதவைத் தாள் போட்டாள். கதவின் மேலேயே சாய்ந்து கொண்டாள். மார்பு படபடத்தது. கண்களில் நீர். கன்னங்களின் மேடுகள் அசைந்தன. முன்னா கண்களை மூட, நீர்க்கோடு கன்னத்தில் இறங்க, மனம் வெகு வேகமாக அந்தப் பழைய நாட்களை நோக்கி, போர் நிறைந்த, குண்டுகள் வெடித்த, மனிதர்கள் மாண்ட அந்தக் கரிய நாட்களை நோக்கி, தலை தெறிக்க ஓடியது.

மிஸஸ் ப்ரௌன் பதற்றமாய் இருந்தாள். வெளியில் சூழ்நிலை சரியில்லை. ஜப்பானியர்கள் மலேயாவை ஊடுருவிவிட்டார்கள் என்று செய்தி கிடைத்திருந்தது. அவ்வப்போது வெளியில் குண்டுகள் வெடித்த சத்தம். 'ரொய்ங்க்' என்று ஆகாயத்தில் விமானங்களின் சீறல்கள். மிஸஸ் ப்ரௌனிற்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. காலைச் சுற்றி மூன்று குழந்தைகளும் 'அம்மா' 'அம்மா' என்று அழுகையுடன், சிரிப்புடன், கூச்சலுடன் சூழ்நிலை புரியாமல் சுற்றி வர ஃபோன் அவளை அழைத்தது.

போனாள். ரிசீவரை எடுத்து "ஹலோ" என்றாள்.

"உங்கள் கணவர் மிஸ்டர் ப்ரௌன் ஒரு குண்டு வீச்சில் மரணமடைந்துவிட்டார் மேடம்."

மிஸஸ் ப்ரௌன் ரிசீவரைத் தவற விட்டாள். வெளியில் இரைச்சல். மக்கள் குண்டுகளுக்கும், ஜப்பானியர்களுக்கும் பயந்து வீட்டை விட்டு ஓடினார்கள். குழந்தைகள் கதறலுடன் கூடவே சென்றன. குழப்பமான ஓசைகள். தமிழ், மலாய் என்று இரண்டு மொழிகளிலும், 'ஓடு, ஓடு..... சீக்கிரம் ஓடு' என்ற சொற்கள் மட்டும் உபயோகிக்கப்பட, ஜன்னல் வழியாகப் பார்த்த வேலைக்காரி முன்னா, பதற்றத்துடன் மிஸஸ் ப்ரௌனை நோக்கி வந்தாள்.

"மேடம்.... நாமும் தப்பிப் போய்விடலாம் மேடம். காட்டுக்குள் எனக்குப் பாதுகாப்பான ஓர் இடம் தெரியும் மேடம்" என்றாள்.

"முன்னா..... மிஸ்டர் ப்ரௌன் இறந்துவிட்டாராம் முன்னா" என்றாள் மிஸஸ் ப்ரௌன் அழுகை கலந்த குரலில்.

முன்னாவிற்கு வருத்தப்படக்கூட நேரம் இல்லை. "இப்போது நாம் தப்ப வேண்டும் மேடம்" என்றாள்.

அடர்ந்த காட்டில் பெயர் தெரியாத ஏராள மரங்களும், செடிகளும், கொடிகளும் வழி நிறைய வளர்ந்திருக்க, முன்னா வழி பண்ணிக் கொண்டு முன்னே போனாள். பின்னால் மிஸஸ் ப்ரௌன். மிஸஸ் ப்ரௌனின் தோளில் ஒரு மென்மையான மலர் போல, மிருதுவான குட்டி முயல் போல ஜாஸ்மின். மிஸஸ் ப்ரௌனைத் தொடர்ந்து அவளுடைய மற்ற இரண்டு குழந்தைகளும் புதிய சூழ்நிலை தந்த உற்சாகத்துடன் நடந்தன. திடீரென்று அந்த மூங்கில் வீடு தெரிந்தது. அதுவும் சிதிலமடைந்திருந்தது. அதில் நுழைந்து, தரையைச் சுத்தப்படுத்தி, கம்பளி விரித்துப் படுத்தார்கள். அன்றைய இரவு நிறைய சஞ்சலங்களுக்கு நடுவில் தூக்கமின்றிக் கரைந்து போனது.

உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்தாள். ஜாஸ்மின் அருகில் வந்து அவளைப் பேசாதிருக்குமாறு சைகை காட்டினாள்.

பத்தடி தூரத்தில் ஜப்பானியப் போர் வீரர்கள் நீட்டிய துப்பாக்கிகளுடன் நடந்தார்கள், பார்த்துக் கொண்டிருந்த இவர்களைக் கவனிக்காமல்.

அரை மணி நேரம் கழித்து முன்னா, ஜாஸ்மினுடன் அந்த மூங்கில் வீட்டை அடைந்த போது ஜப்பானியர்கள் மிஸஸ் ப்ரௌனை இழுத்துக் கொண்டு நடப்பதைக் காண முடிந்தது. ரத்த வெள்ளத்தில் பூமியில் மலர்ந்திருந்த அந்த இரு சின்ன உடல்களின் மிச்சத்தைக் காண முடிந்தது. ஜாஸ்மின் என்ன நடந்ததென்று அறியாமல் அகலவிழிகளுடன் முன்னாவைப் பார்த்தாள்.



Filmotsav 86

திரைவிழாப் படக்கதை — 8

சூரியன் திருட்டுத்தனமாக மரங்களுக்கு இடையில் பார்க்கத் தொடங்கினான். குழந்தைகள் எழுந்து சோம்பல் முறித்தன. ஜாஸ்மின் முன்னாவைத் தொட்டாள். "பசிக்கிறது" என்றான்.

முன்னா மேடத்தைப் பார்த்தாள். "இங்கேயே இருங்கள் மேடம். நானும் ஜாஸ்மினும் போய் உங்களுக்காகக் கிழங்குகளைப் பறித்து வருகிறோம்" என்று ஜாஸ்மினை அழைத்துக் கொண்டு மேலும் அடர்த்தியான காட்டில் புகுந்தாள்.

ஜாஸ்மின் ஓர் ஓரமாய் குத்துக்காலிட்டு அமர்ந்து சின்னக் கைகளால் மண்ணைத் தோண்டிக் கிழங்குகளைப் பறித்துக்கொண்டிருந்த நேரம், முன்னாவிற்கு அந்த ஒலி துல்லியமாகக் கேட்டது. பூட்ஸ்களின் ஒலி.

அப்படி வந்து சேர்ந்த ஜாஸ்மின்.... இன்றைக்கு எவ்வளவு பெரிய அழகிய இளம் பெண்!

"அம்மா."

ஜாஸ்மினின் குரல் கேட்டு முன்னா வெளியில் பாய்ந்தாள். ஜாஸ்மினைக் கட்டிப் பிடித்தாள். முத்தம் கொடுத்தாள். அழுதாள். இந்த ஜாஸ்மினை இழந்துவிடப் போகிறோம் என்று அவளுடைய உள்ளுணர்வு சொல்ல, புரியாமல் விழித்த ஜாஸ்மினை இன்னும் இறுக்கமாகக் கட்டிப் பிடித்தாள்.

"என்ன ஆயிற்று அம்மா?"

முன்னா மேலும் அழுதாள். "உன்னைக் கோலாலம்பூர் சோஷியல் வெல்ஃபேர் சொஸைட்டியில் கொண்டு வந்து விடுமாறு கடிதம் வந்திருக்கிறது ஜாஸ்மின்" என்றாள் முன்னா அடக்கமுடியாமல்.



"இந்த விழாவில் எதற்குக் குறைவிருந்ததோ என்னவோ விருந்துகளுக்குக் குறைவேயில்லை! முதலில் ஆந்திர முதல்வர்; அப்புறம் N.F.D.C. அப்புறம் பத்மாலயாக்காரர்கள்; கடைசி கடைசியாக மந்திரி காட்டில் அளித்த விருந்து.

பன்ஜாரா எனும் 5* ஹோட்டலில் விருந்து. புல்வெளி, செயற்கைக் குன்று, நீச்சல் குளம், அதில் நீந்திய இரு அயல் நாட்டவர்கள், என்று புதுமையான சூழ்நிலை. செயற்கைக் குன்றின் மீது ஜிப்பா அணிந்த ஓர் ஆசாமி இரண்டே பக்கவாத்தியங்களுடன் வெகு மென்மையாக ஹிந்திப் பாடல்களைப் பாடிக் கொண்டிருக்க, பஞ்சாபி, மதுரஸி, பெங்காலி என்று வித விதமான பாணிகளில் விருந்து அளிக்கப்பட்டது. மதுரஸி பாணியில் எலுமிச்சை சாதம். பஞ்சாபி ஸ்டாலில் சோளாபூரி, நான், பரோட்டா சமாசாரங்கள். பெங்காலி பக்கம் ரசகுல்லா, சந்தேஷ் இத்யாதி. விதவிதமான உடைகளில், சென்ட் வாசங்களுடன், சிரிப்புகளுடன், ஆர்ப்பாட்டங்களுடன், அமைதியுடன் பிரதிநிதிகள்.

அடுத்த இரண்டு வாரங்கள் வீரியமாக இருக்கப் போகின்றன இந்த 'பாக்ஸ் லேட்டரைப் பொறுத்தவரை என்பதால் நடுவில் ஒரு இளைப்பாறுதலுக்காக இந்த லேட்டான சமாசாரம்! ஆனால் சாப்பாடு என்னவோ வெயிட் தான்! ஏவ்!

கோலாலம்பூர். 1941 இல் ஜப்பானியர்களின் தாக்குதலில் சீரழிந்த நகரம் இன்றைக்குச் சிங்காரித்துக் கொண்டு நின்றது. சைக்கிள் ரிக்‌ஷாக்கள், ஆஸ்டின் கார்கள், உற்சாக மக்கள் நிறைந்த 1954 கோலாலம்பூர். முன்னுவையும், ஜாஸ்மினையும் ஸ்டேஷனுக்கே வந்து அழைத்துப் போனார் என்சிக் ராவுஃப். முன்னுவிற்கு வேண்டப்பட்டவர். ஸ்டேஷனிலிருந்து வீடு வரும் வரை முன்னுவின் அழுகை ஓயவே இல்லை. ஜாஸ்மினும் தன்னுடைய பதினாறு வயது பருவத்தை மறந்து பாச நீரால் கண்களைப் புனிதப்படுத்திக் கொண்டே வந்தாள்.

"என்னுடைய ஜாஸ்மினை நான் இங்கிலீஷ் முறைப்படி வளர்க்கவில்லைதான் என்சிக். அவளை நம் மரபுப்படிதான் வளர்த்தேன். அவளும் நம்மில் ஒருத்தியாகிவிட்டாள். என்னைவிட்டு ஒரு நிமிஷம் கூடப் பிரியாத குழந்தை அவள். அவளை சோஷியல் வெல்ஃபேர் ஸொஸைட்டியில் சேர்த்துவிட வேண்டும் என்றால் எப்படி எனக்கு மனசு வரும் என்சிக்?"

"ப்ளீஸ்...... அமைதியாய் இரு முன்னு. என்னால் ஆனதைச் செய்கிறேன்" என்றார் என்சிக்.

அவரை மீறிக் காரியங்கள் நடக்கப் போகின்றன என்று அப்போது அவருக்குத் தெரிய வாய்ப்பில்லை.

மரப்படிகளில் மேலேறி வீட்டில் நுழைந்தார்கள். என்சிக் மனைவியை, மகளை முன்னுவிற்கும் ஜாஸ்மினுக்கும் அறிமுகப்படுத்திய நேரம் கதவு தட்டப்பட்டது. திறந்தால்....

"நாங்கள் சோஷியல் வெல்ஃபேர் ஸொஸைட்டியிலிருந்து வந்திருக்கிறோம் ஸார்" என்றார்கள் வாசலில் நின்றிருந்த இரண்டு பெண்களும்.

"என்ன வேண்டும் உங்களுக்கு?"

"ஜாஸ்மின்."

"என்னது?"

"ஆம். ஜாஸ்மினை அழைத்துப் போக வந்திருக்கிறோம். இதோ அரசாங்க உத்தரவு."

என்சிக் ராவுஃப் அரசு உத்தரவை மீற முடியாமல், முன்னுவைச் சமாதானப் படுத்தி ஜாஸ்மினை அவர்களுடன் அனுப்ப... அந்தப் பிரிவைத் தாங்க முடியாத வேதனைக் குமுறல்கள் அந்த அறையை நிறைத்தன.

"முன்னு.... அழாதே முன்னு.... அரசாங்க உத்தரவை நம்மால் மீற முடியாது. ஆனால் ஜாஸ்மின் மறுபடி உன்னிடமே வந்து சேருவாள். கவலைப்படாதே. அதற்கு நான் உத்தரவாதம் தருகிறேன்" என்றார் என்சிக் ராவுஃப். அவருக்கு அரசியல் வட்டாரத்தில் ஏகப்பட்ட செல்வாக்கு இருந்தது. அந்தச் செல்வாக்கை நம்பினார் அவர்.

ஜாஸ்மின் அந்த சோஷியல் வெல்ஃபேர் ஸொஸைட்டியின் மற்றப் பிரஜைகளுடன் சேராமல் தனித்து இருந்தாள். அவர்களின் உற்சாகக் கூச்சல்கள், வரிசையாக அமர்ந்து பீங்கான் பிளேட்களில் 'டிங் டிங்' தட்டித் தட்டி உணவை உற்சாகத்துடன் உண்டது எதுவுமே அவளைத் தொட முடியவில்லை.

முன்னுவிற்கு அழைப்பு வந்திருந்தது. மிஸஸ் ப்ரௌனிடமிருந்து!

மிஸஸ் ப்ரௌன் உயிரோடு இருக்கிறாளா என்ன!

"முன்னு...." என்று அழைத்தாள் மேடம் ப்ரௌன்.

அசல்

டாட்டா உப்பு

இப்போது வீட்டு உபயோக பேக்குகளிலும் கிடைக்கிறது



இதுவரை பெரிய அளவில் விற்பனை செய்யப்பட்டுவந்த **டாட்டா உப்பு** இப்போது கம்பெனியின் சொந்த அதிகாரத்தின் கீழ் 1 கிலோ பேக்கிலும் பேக் செய்யப்படுகிறது.

டாட்டா உப்பு சாதாரண உப்பு அல்ல. இதர சாதாரண உப்பின் அநேக ரகங்கள் தனியாகவோ அல்லது பாலி பைகளிலோ விற்கப்படுகின்றன, அவை திறந்த கலங்களில் கடல் நீரின் ஸோலார் எவாப்பரேஷன் மூலமாக கிடைக்கின்றன, ஆகவே அவை தீமை விளைவிக்கும் துகள் மற்றும் தூசிகள் இல்லாமலில்லை. மாறாக **டாட்டா உப்பு டாட்டா கெமிக்கல்ஸ் லிமிடெடின்** தொழிற்சாலையில் விசேஷமான முறையில், முழுவதும் **வாக்குவம் எவாப்பரேஷனின்** இணையற்ற ப்ராஸஸினால் தயாரிக்கப்படுகிறது.

அதனால்தான் **டாட்டா உப்பு** அதிக சுத்தமாகவும் அபார வெண்மையாகவும் இருக்கிறது—சுற்றுப்புற தூய்மைக் கேட்டினால் பாதிக்கப்படுவதில்லை.

சுத்தமான வெண்மையான டாட்டா உப்பு—சுகாதார சமையலுக்கு உங்கள் உறுதுணை.

ஒரு டாட்டா தயாரிப்பு

அசல் டாட்டா உப்பு வாங்க வேண்டுமாயின், கம்பெனியின் சொந்த பாலி பைகளை மட்டுமே வற்புறுத்தி வாங்குங்கள். டிஸைன் ட்ரேட் மார்க்கினால் பாதுகாப்பு கொண்டது.

வர்தமான் கெமிக்கல்ஸ் பிரைவேட் லிட்

ஈ/2 ஜே.பி.டவர்ஸ், 7-2 நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை சென்னை-600 034.

உப-வினியோகஸ்தர்கள் மற்றும் டீலர்களுக்கு வர்த்தக கோரிக்கைகள் வரவேற்கப்படுகின்றன

AFCO

''மேடம்!''

மேடம் ப்ரெளன் அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாமல் இருந்தாள். முகத்தில் கவலைக் கோடுகள் மட்டும் கூடுதலாகியிருந்தன. அங் கங்கே நரை. கொஞ்சம் திரை.

''நன்றாக இருக்கிறாயா முன்னு?''

''நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் மேடம்?''

''இருக்கிறேனே. என்னுடைய கணவனையும் இரண்டு செல்வங்களையும் ஜப்பானியரின் கோபத்துக்கு இரையாக்கினேன். மிஞ்சிய ஒரே செல்வமான ஜாஸ்மினைப் பார்க்க முடியாமல் சிறையில் இருந்து, தனித்து வாழ்ந்து.... வெளியே வந்தேன். பிறகு இத்தனை நாட்களாக எனது வாழ்வின் ஒரே ஆதாரமான ஜாஸ்மினைத் தேடிக் கொண்டிருந்தேன். முன்னு.... அவள் இல்லாமல் நான் எப்படி வாழ்வேன்? சொல்! நீ என் ஜாஸ்மினுடன் இத்தனை நாட்களைக் கழித்தாய். எஞ்சியிருக்கும் எனது வாழ்வின் சில நாட்களையாவது நான் என் ஜாஸ்மினுடன் கழிக்க உதவுவாயா முன்னு?''

கையேந்தி ஏறக்குறைய பிச்சை கேட்பது போல் இறைஞ்சினாள் மேடம் ப்ரெளன்.

முன்னு நிறைய யோசித்தாள். ஜாஸ்மின் மேடம் ப்ரெளனிடம் சேர்வதுதான் நியாயம் என்று கடைசியில் ஒரு வேதனை வலியுடன் தீர்மானித்தாள். ''ஆகட்டும் மேடம் ப்ரெளன். என்னுடைய ஜாஸ்மினை, உங்களுடைய ஜாஸ்மினாக மாற்றியே ஆக வேண்டும்.''

ஜாஸ்மின் சுற்றுமுற்றும் பார்த்தாள். மேடம் ப்ரெளன் வசதியாகத்தான் இருந்தாள். இருந்தாலும், தென்னைகள் சூழ்ந்த அந்த நிழல் குடிசை. பள்ளித் தோழிகள். மண்டியிட்டு முஸ்லீம் மத முறைப்படி வணங்கும் வழிபாடு. யாவற்றுக்கும் மேலாக அம்மா. அந்த அன்புத் தெய்வம். கண்களுக்குக் கீழே கருவளையம் கட்டின, சுருக்கம் நிரம்பிய, பாசத்தைக் கொட்டும் முகத்தையுடைய முன்னு அம்மா. அவளை மறந்து, எங்கோ ஓர் அன்னியப் பிரதேசத்திற்குப் போய், அன்னிய முகங்களுக்கிடையில் வாழ்ந்து, மேடம் ப்ரெளனை 'அம்மா' என்று அழைப்பதா? ம்ஹூம்ஹூம்... இந்த ஜாஸ்மினால் முடியாது. இந்த ஜாஸ்மினை என்ன நினைத்தார்கள்? இவள் மனம் பாறையால் ஆனது என்று எண்ணினார்களோ? ஜாஸ்மின் மெல்ல எழுந்தாள். வெளியேறினாள்.

''முன்னும்மா.... இதோ வந்துவிட்டேன்!'' என்று மனத்திற்குள் பெரு ஓசை எழுப்பிக் கொண்டே ஓடினாள். அவளுக்குத் தெரிந்த ஒரே முகம் முன்னு அம்மா. தெரியாதது......

ஜாஸ்மின் மிக வேகமாக வந்த அந்த லாரியைக் கவனிக்கவில்லை. அந்த லாரி அவளை இடித்து, ஜாஸ்மின் ரத்தச் சிதறலாக, பூப்பந்தாக, வான் நோக்கிச் சிதறி.... கீழே பூமிக்குத் திரும்பி...... தட்!

Jasmine என்ற மலேசியப் படம். மலேசியக் காடுகளில் காமிரா நுழைந்த விதம் பெச்சக்கருக்க மாதிரி இருக்கது. அந்த முன்னு, தன் எஜமானியையும் அவள் குழந்தைகளையும் காப்பாற்றக் காட்டில் நுழையும் காட்சி முதல், அந்தக் காட்டை விட்டு வெளிவரும்வரை படம் நல்ல விறு விறுப்பு. அதற்குப்பின் படம் கொஞ்சம் இழுபறிதான் என்றாலும் மலேசியாவின் விநோதமான சைக்கிள் ரிக்‌ஷாக்கள், கோலா லாம்பூர் கூடிய நிலங்கள் ஆகியவை ரசிக்கும்படியாகவே இருக்கின. திடுமென்று இடை இடையே கேட்கும் தமிழ் வசனங்கள், சந்திக்கும் தமிழ் முகங்கள் — ஆனந்த அதிர்ச்சி!

— ஜெயமன்மதன்.

ஆண்டவன் இல்லை என்று சொல்லுவது பகுத்தறிவுக்கு உகந்தது அல்ல என்று சொல்லுவதற்கு முன் வர வேண்டும்.

எனக்குத் தெரியாத ஒன்றை நான் தெரியவில்லை என்று ஒத்துக் கொள்ள வேண்டுமே தவிர, அப்படி ஒரு பொருள் இல்லவே இல்லை என்று சொல்கின்ற உரிமையை, எனக்கு யார் தந்தார்கள்?

இன்றைக்கு எனக்குத் தெரியாதவைகள் கோடி கோடி இருக்கின்றன. அவைகளெல்லாம் இல்லை என்று சொல்லுகின்ற உரிமையை, எனக்கு யாரும் தரவில்லை. உனக்குத் தெரியவில்லை என்று சொன்னால் நீ தெரிந்து கொள் என்று மற்றவர்கள் சொல்லலாம்.

ஆகவே உண்டு என்று சொல்கின்ற உரிமை ஒருவருக்கு உண்டு என்று சொல்கின்ற பொழுது, இல்லை என்று சொல்கின்ற உரிமை எனக்கு இருக்கிறது என்று யார் வேண்டுமானாலும் சொல்லட்டும்; ஆனால் உண்டு என்று சொல்கின்றவனை காட்டுமிராண்டி என்றும், அறிவில்லாதவன் என்றும் மூட நம்பிக்கைக்காரன் என்றும் சொல்கின்ற காரியத்தைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன் எழுதிய ''புதிய சிந்தனைகள்'' என்ற புத்தகத்திலிருந்து: கே.வி. நாதன்.



முட்டைக்குள் ஓவியம்



சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சிக்கு விஜயம் செய்யும் அனைவரையும் கவரும் ஓர் அரங்கு முட்டை ஓவியக் கண்காட்சி.

முட்டை ஓட்டின் உட்புறம் வரையப்பட்டுள்ள ஓவியங்கள், பார்வையாளர்களின் விழிப் புருவங்களை வியப்பால் உயர்த்துகின்றன. இவற்றை வரைந்த ஓவியர் சேலம் மாவட்டம் மேச்சேரியைச் சேர்ந்த சிவசண்முகம் என்பவர். சிவசண்முகத்தைச் சந்தித்தபோது கூறினர்:

''என் தந்தை கோவில்களுக்கு உற்சவ மூர்த்திகளையும் வாகனங்களையும் செய்வதில் வல்லவர். என் தாத்தா மரச் சிற்பங்கள் செய்வதில் புகழ் பெற்று விளங்கியவர். இது போன்ற குடும்பத்தில் பிறந்த எனக்கும் சிறு வயது முதல் ஓவியக் கலையில் ஆர்வம் அதிகமாகவே இருந்தது.

எனது பத்தொன்பதாவது வயதில் அறிஞர் அண்ணாவின் படத்தை வரைந்து சென்னையில் நடைபெற்ற ஓர் ஓவியக் கண்காட்சிக்கு அனுப்பினேன். பார்ப்பதற்கு மிகவும் சின்னப் பையனைப் போல் இருந்த நான் தான் அந்தப் படத்தை வரைந்தேன் என்பதைப் பலராலும் நம்ப முடியவில்லை. பலராலும் பாராட்டப்பட்ட அந்தப் படத்துக்குத்தான் முதல் பரிசு கிடைக்கும் என்று எதிர்பார்த்த எனக்கு ஏமாற்றம்தான் பரிசாகக் கிடைத்தது.

மிகுந்த வருத்தத்துடன் சொந்த ஊருக்குத் திரும்பினேன். கண்காட்சியில் ஏற்பட்ட தோல்வியைப் பற்றியே எண்ணிக் கொண்டு வீட்டில் இருந்தபோது, என் தாயார் சமையலுக்குப் பயன்படுத்திய முட்டையின் காலி ஓடுகளை எறிந்துவிட்டு வரும்படி கூறினர்.

கண்காட்சிக்காக வரைந்த அண்ணா படத்தை முட்டை ஓட்டின்மீது வரைந்தால் என்ன என்ற எண்ணம் அப்போதுதான் எனக்குத் தோன்றியது. உடனே செயலாக்க முயன்றபோது வெற்றி கிடைத்தது.

பிறகு முட்டையில் நான்கு மில்லி மீட்டர் துளைசெய்து அதிலுள்ள கருவைவெளியேற்றி சுத்தம் செய்துவிட்டு உட்புறமாகப் படங்கள் வரையத் துவங்கினேன். பின்னர் துளையை இரண்டு மில்லி மீட்டராகக் குறைத்து வரைந்தேன். இப்போது ஒரு மில்லி மீட்டர் அளவுக்கு மட்டும் துளையிட்டுப் படங்களை வரைகிறேன். படம் வரையத் தேவையான தூரிகையை நானே உருவாக்கியிருக்கிறேன்.

கோழி முட்டையில் அரசியல் தலைவர்கள், திரைப்பட நடிகர்கள் ஆகியோரின் உருவங்களை வரைந்திருக்கும் சிவசண்முகம், ஒரு குருவி முட்டையில் ஒன்பது வித விநாயகரின் உருவங்களை வரைந்திருக்கிறார். இதே போல் ஒரு பல்லி முட்டையின் உட்புறம் ஏகநாதரின் உருவத்தையும் வரைந்திருக்கிறார். ஓர் அரிசியில் திருவள்ளுவரின் முழு உருவத்தையும் வரைந்திருக்கிறார்.

ஓர் ஓவியம் வரைய மூன்று மாதத்திற்குக் குறையாமல் ஆகுமாம். அவ்வாறு வரையும் போதே முட்டை ஓடு உடைந்துவிட்டால் முழு உழைப்பும் வீண்தான். இவ்வாறு உடைந்த முட்டைகளின் எண்ணிக்கை ஏராளமாம். கடந்த பதினேழு ஆண்டுகளாக முட்டைக்குள் ஓவியங்கள் தீட்டும் சிவசண்முகம் சார்லஸ்—டயானா திருமணத்தின் போது இருவரின் வண்ண ஓவியங்களையும் ஒரே முட்டை ஓட்டுக்குள் வரைந்து அனுப்பியிருக்கிறார். அதைக் கண்டு பாராட்டிய ராணி எலிசபெத் வெள்ளிப் பதக்கம் ஒன்றைப் பரிசாக அனுப்பி வைத்திருக்கிறார். அத்துடன் 'பிரிட்டிஷ் முட்டை தகவல் கழகம்' என்ற அமைப்புக்கு ஒரு கடிதமும் எழுதியிருக்கிறார். ''முட்டை ஓட்டின் வெளியே படம் போடுபவர்களை நீங்கள் ஊக்குவிக்கின்றீர்களே! முட்டை ஓட்டின் உட்புறம் அற்புதமாக ஓவியங்களைத் தீட்டும் ஒருவர் இந்தியாவில் இருக்கிறார். அவரை உற்சாகப்படுத்துங்கள்'' என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார் ராணி எலிசபெத்.

இதைத் தொடர்ந்து லண்டன் தொலைக் காட்சியில் சிவசண்முகத்தைப் பற்றியும், அவரது கலைத்திறன் பற்றியும் விசேட நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பானது. லண்டன், ஹாலந்து, டென்மார்க் ஆகிய நாடுகளின் அருங்காட்சியகங்களில் சிவசண்முகத்தின் முட்டை ஓவியங்கள் இப்போது பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

சில ஆண்டுகளுக்குமுன் ஈழத் தமிழர்களின் அழைப்பின் பேரில் இலங்கை சென்று கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் கண்காட்சி நடத்தியிருக்கிறார் சிவசண்முகம். அங்கு வசூலான தொகையை எரிக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கிவிட்டாராம்.

வெகு விரைவில் பாரீஸ் நகருக்குச் சென்று கண்காட்சி நடத்தவிருக்கும் சிவசண்முகத்தைப் பற்றிய செய்தியும் அவரது சாதனையும் கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற இருக்கிறது.

— ராஜா. செந்தில்நாதன்

எதிர்ப்பக்கம்:
ஒரு விடுமுறை தினத்தின் பழமையான நினைவுகள்
வண்ணப்படம்:
கே. ராமகிருஷ்ணன் (அமெரிக்கா)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543).
Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.



GISTERED No. M 4392
istered as a Newspaper in Srilanka



"இப்போது, லக்ஸையும் விட நான் அதிகம்
விரும்பும் சோப் ஒன்று உள்ளது", என்கிறார் ரேவதி.

புதிய லக்ஸ்

நேர்த்தியான புது மணம்

அதன் புத்தம் புது, மலர்களின் சாற்று மணம் பற்றி ஒவ்வொரு சினிமா நட்சத்திரமும், தம் விருப்பமான முறையில் விளக்குகிறார்—"மென்மைய மிக்கது", "கிளர்ச்சியூட்டுவது".

கவர்ச்சியான புதுத் தோற்றம்

உங்களைப் போலவே கவர்ச்சியானது நவநாகரீகமானது அது—கண்ணைக் கவர்வதும்கூட! மூன்று வகை அழகிய வண்ணங்களில் கிடைக்கிறது—இளஞ் சிவப்பு, பச்சை மற்றும் மஞ்சள்

